
# தமிழரசு

பிப்ரவரி 2007

விலை ரூ.10/-

செய்தி மக்கள்தொடர்புத் துறையின் வெளியீடு











9-38

# தமிழரசு

செய்தி-மக்கள்தொடர்புத் துறையின் வெளியீடு

திருவள்ளுவர் ஆண்டு 2038

தை - மாசி / பிப்ரவரி 2007

மலர் : 38 இதழ் : 8

**ஆசிரியர் குழு**

ஆசிரியர் மற்றும் வெளியிடுபவர் :

**சி.கோசலராமன்,** இ.ஆ.ப.,

இயக்குநர், செய்தி-மக்கள்தொடர்புத் துறை

நிருவாக ஆசிரியர்

கே.ட்டி. புகழேந்தி

துணை இயக்குநர் (வெளியீடுகள்)

பொறுப்பாசிரியர்கள்

ந. இளங்கோ

எஸ்.பி.எழிலழகன்

கி. சாந்தி

உதவி ஆசிரியர்கள்

ஆ. ராஜா

க. இராஜராஜேஸ்வரி

ஐ. இந்திராணி

இரா. சுரேஷ்

வீ.இரா. நவநீதகிருஷ்ணகுமார்

நிருபர்கள்

கோ. சண்முகம்

மாய குமரேசன்

இதழ் உதவியாளர்

தி.பெரியார் சாக்ரடீசு

புகைப்படக்காரர்

வி.ராதாகிருஷ்ணன்

கணினி வடிவமைப்பு

பி.ஏ. லூயிஸ் பெரியநாயகம்

அ. மதன்

சென்னை - தமிழரசு அச்சகத்தில்
அச்சிடப்பட்டது.

தமிழரசு அலுவலகம்,
ஓமந்தூரார் அரசினர் தோட்டம்,
அண்ணாசாலை, சென்னை-600 002.
தொலைபேசி : 25368926/25364906
தொலைநகல் : 25364906
மின் அஞ்சல் : tamilarasu2@hotmail.com
இணையதளம் : www.tn.gov.in

## இந்த இதழில்...

- 58ஆவது இந்தியக் குடியரசு தின விழா ..... 2
- இந்திய அரசியல் சட்டம் காலத்தின் தேவைக்கேற்ப புதியதாக இயற்றப்படவேண்டும் - தமிழக சட்டப்பேரவையில் மேதகு தமிழக ஆளுநர் அவர்கள் ஆற்றிய உரை ..... 9
- திறமையான நிருவாகத்தால் அரசின் நிதிநிலை சமன்பாடு சீராக உள்ளது - தமிழக சட்டப்பேரவையில் மேதகு ஆளுநர் அவர்களின் உரையின் மீது நடந்த விவாதத்திற்கு பதிலளித்து மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் ஆற்றிய உரை ..... 22
- தமிழகத்திற்கு 2007-2008ஆம் ஆண்டிற்கு ரூ.14 ஆயிரம் கோடி நிதிஒதுக்கீடு ..... 37
- சுனாமியால் பாதிக்கப்பட்டோருக்கு அரசின் சார்பில் இந்த ஆண்டில் 32,668 வீடுகள் கட்டி முடிக்கப்படும் - மாண்புமிகு முதலமைச்சர் அறிவிப்பு ..... 49
- தமிழகத்திலுள்ள ஏழை எளிய தாய்மார்களுக்காக தமிழக அரசு எண்ணற்ற சாதனைகளை செய்து வருகிறது - மாண்புமிகு முதலமைச்சர் ..... 54
- புத்தர் விழா ..... 77



கற்றதனால் ஆய பயனென்கொல் வாலறிவன்
நற்றாள் தொழாஅர் எனின்

தன்னைவிட அறிவில் மூத்த பெருந்தகையாளரின் முன்னே வணங்கி நிற்கும் பண்பு இல்லாவிடில் என்னதான் ஒருவர் கற்றிருந்தாலும் அதனால் என்ன பயன்? ஒன்றுமில்லை. *குறள் : 2*

**கலைஞர்** திருக்குறள் உரையிலிருந்து...

| | | |
|---|---|---|
| முதலாம் பக்க அட்டை | : | 58ஆவது இந்தியக் குடியரசு தினவிழா (26-1-2007) |
| இரண்டாம் பக்க அட்டை | : | சட்டப்பேரவையில் மேதகு ஆளுநர் உரை (20-1-2007) |
| நான்காம் பக்க அட்டை | : | மேல்நிலைப் பள்ளி மாணவ, மாணவியருக்கு இலவச மிதிவண்டிகள் வழங்கும் விழா (19-1-2007) |

# 58ஆவது இந்தியக் குடியரசு தினவிழா

## மேதகு ஆளுநர் திரு. **சுர்ஜித்சிங் பர்னாலா** அவர்கள் தேசியக் கொடியை ஏற்றிவைத்து வீரவணக்கம் செலுத்தினார்! மாண்புமிகு முதலமைச்சர் **கலைஞர்** அவர்கள் விருதுகள் வழங்கினார்!


இந்தியாவின் 58ஆவது குடியரசு தினவிழா 26.1.2007 அன்று சென்னை காமராசர் சாலையில் உள்ள காந்தி சிலையருகில் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. காலை 7.50 மணியளவில் வருகை தந்த மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்களும் அதையடுத்து வந்த மேதகு ஆளுநர் திரு. சுர்ஜித்சிங் பர்னாலா அவர்களும் கடற்கரைச் சாலையில் பல்லாயிரக்கணக்கில் கூடியிருந்த மக்களுக்கு தங்களது அன்பான குடியரசு தின வாழ்த்துக்களை தெரிவித்துக் கொண்டனர்.

மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்களை தலைமைச் செயலாளர் திரு. எல்.கே.திரிபாதி, இ.ஆ.ப., அவர்கள், பூங்கொத்து வழங்கி மேடைக்கு அழைத்து சென்றார். பின்னர் முப்படைகளின் தலைவர்கள் – காவல்துறை உயர் அதிகாரிகள் ஆகியோரை மேதகு ஆளுநர் திரு. சுர்ஜித்சிங் பர்னாலா அவர்களுக்கு தலைமைச் செயலாளர் அவர்கள் அறிமுகம் செய்து வைத்தார்.

அடுத்து கடலோரக் காவல்படை ஹெலிகாப்டர், வானிலிருந்து மலர்களைத் தூவ, சரியாக 8.00 மணிக்கு மேதகு ஆளுநர் திரு. சுர்ஜித்சிங் பர்னாலா அவர்கள் தேசியக் கொடியை ஏற்றி வைத்து வீரவணக்கம் செலுத்தினார்.

மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் வீரதீர செயல்கள் புரிந்தவர்களுக்கு அண்ணா பதக்கங்கள், ஜீவன் ரக்ஷா விருது, கோட்டை அமீர் விருது, மத நல்லிணக்க பதக்கம், காந்தியடிகள் காவல் பதக்கங்கள் ஆகியவற்றை வழங்கி சிறப்பித்தார்.சிவகங்கை மாவட்டம் – மானசேரி கிராமத்தைச் சேர்ந்த து. கண்ணன், காஞ்சிபுரம் மாவட்டம் – ஒக்கியம் துரைப்பாக்கம் கண்ணகி நகரைச் சேர்ந்த மறைந்த ஆர்.நரேந்திரன் ஆகியோரின் சேவைகளைப் பாராட்டி அண்ணா பதக்கங்களை முதலமைச்சர் கலைஞர் அவர்கள் வழங்கினார். ஜீவன் ரக்ஷா பதக்கத்தை கன்னியாகுமரி மாவட்டம் கல்குளம் தாலுகா கடியப்பட்டணம் கிராமத்தைச் சேர்ந்த செல்வன் மரியலியோ சாஜனுக்கும் மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் வழங்கி சிறப்பித்தார். கோட்டை அமீர் மத நல்லிணக்க பதக்கத்தை மறைந்த





அபுபக்கர் என்ற வின்சென்ட் அபுபக்கரின் சேவையைப் பாராட்டி அவரது துணைவியாரிடம் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் வழங்கினார். கள்ளச்சாரயத்தை ஒழிக்க சீரிய பணியாற்றிய திருச்சி நகரம் மதுவிலக்கு அமலாக்கப் பிரிவு துணை கண்காணிப்பாளர் திரு. ஆர். முருகேசன், வேலூர் மாவட்டம் கே.வி. குப்பம், உதவி ஆய்வாளர் திருமதி. அ. சரஸ்வதி, திருச்சி நகர மதுவிலக்கு அமலாக்கப் பிரிவு தலைமை காவலர் திரு. ஏ. பால்ராஜ் ஆகியோருக்கு காந்தியடிகள் காவல் பதக்கங்களை மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் வழங்கி சிறப்பித்தார்.

இதனைத் தொடர்ந்து பள்ளி – கல்லூரி மாணவிகள் பங்கேற்ற கண்கவர் கலைநிகழ்ச்சிகள் நடைபெற்றன. முதலாவதாக வெலிங்டன் சீமாட்டி மகளிர் மேனிலைப்பள்ளி மாணவிகள் பங்கேற்ற கரகாட்டமும், நுங்கம்பாக்கம் மாநகராட்சி மகளிர் மேனிலைப்பள்ளி மாணவிகள் பங்கேற்ற கிராமிய நடனமும், சில்ரன்ஸ் கார்டன் மகளிர் மேனிலைப்பள்ளி மாணவிகள் பங்கேற்ற கோலாட்டமும், அண்ணாநகர் எஸ்.பி.ஓ.ஏ. மெட்ரிகுலேசன் மேனிலைப்பள்ளி மாணவிகள் பங்கேற்ற மோகினி ஆட்டமும் நடைபெற்றன. காயிதே மில்லத் பெண்கள் கல்லூரி மாணவிகள் பெண்களின் வீரத்தை விளக்கும் வண்ணம் தமிழ் பண்பாட்டுச் சின்னமாம் கண்ணகி, வீரமங்கை ஜான்சிராணி, முன்னாள் பிரதமர் இந்திராகாந்தி ஆகியோர் வேடமணிந்து நடனம் ஆடினர். எத்திராஜ் பெண்கள் கல்லூரி மாணவிகள் பங்கேற்ற மானுட சமுத்திரம் எனும் கலை நிகழ்ச்சியும், எம்.ஓ.பி. வைஷ்ணவா பெண்கள் கல்லூரி மாணவிகள் பங்கேற்ற "கரத்தின் வரங்கள்" எனும் நடன நிகழ்ச்சியும் நடைபெற்றன. பின்னர் தென்னகப் பண்பாட்டு மையத்தின் சார்பில் தஞ்சை குந்தவை நாச்சியார் பெண்கள் கல்லூரி மாணவிகளின் ஒயிலாட்டமும், அரியானா, ராஜஸ்தான் போன்ற மாநிலங்களின் முக்கிய கலை நிகழ்ச்சியான பல்வேறு இசைக் கருவிகளை இசைக்கும் உமர் நடனமும், செய்தித்துறை சார்பில் சிலம்பாட்டம் மற்றும் பொய்க்கால் குதிரை, ஒயிலாட்டம் போன்ற நிகழ்ச்சிகளும் நடைபெற்றன.

கலை நிகழ்ச்சிகளில் பங்கேற்ற அணிகளில் முதல் மூன்று இடங்களைப்பெற்ற அணிகளுக்கு மேதகு ஆளுநர் திரு. சுர்ஜித்சிங் பர்னாலா அவர்கள் பரிசுகளை வழங்கினார். கலை நிகழ்ச்சிகள் (பள்ளி அளவில்) பிரிவில் முதல் பரிசு மயிலாப்பூர் சில்ரன்ஸ் கார்டன் மகளிர் மேல்நிலைப்பள்ளிக்கும், இரண்டாம் பரிசு நுங்கம்பாக்கம் மகளிர் மேல்நிலைப்பள்ளிக்கும், மூன்றாம் பரிசு அண்ணாநகர் எஸ்.பி.ஓ.ஏ. மெட்ரிக்குலேஷன் மேல்நிலைப் பள்ளிக்கும் வழங்கப்பட்டன. கல்லூரி அளவில், முதல் பரிசு காயிதேமில்லத் அரசினர் பெண்கள் கல்லூரிக்கும், இரண்டாம் பரிசு எம்.ஓ.பி. வைஷ்ணவா பெண்கள் கல்லூரிக்கும் வழங்கப்பட்டன.

இதைத் தொடர்ந்து தமிழக அரசின் சார்பில் பல்வேறு துறைகளின் சாதனைகளை விளக்கும் அலங்கார ஊர்திகளின் அணிவகுப்பும் நடைபெற்றது.

செய்தி மக்கள் தொடர்புத்துறையின் சார்பில் நாதஸ்வர மங்கள இசையுடன் செய்தித்துறை ஆற்றிவரும் சாதனைகளை விளக்கும் அலங்கார ஊர்தியும், தமிழகத்தில் முதலமைச்சர் கலைஞர் அவர்கள் முதல்வராக பொறுப்பேற்றபின் பெருகி வரும் தொழிற்சாலைகள், அன்னிய முதலீடுகளை ஈர்க்கும் தொழிற் கூடங்கள், தொழில்துறை ஆகியவற்றின் சாதனைகளை விளக்கும் தொழிற்துறை அலங்கார ஊர்தியும், தமிழகம் அமைதிப் பூங்காவாக திகழ்கிறது என்பதை விளக்கிடும் வண்ணம் காவல்துறை ஆற்றிவரும் பணிகளை விளக்கும் அலங்கார ஊர்தியும், வேளாண்துறையில் வளம் கொழிக்கும் வேளாண்துறையின் சாதனை குறித்த அலங்கார ஊர்தியும்,

மாண்புமிகு ஊரக மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் அவர்கள் பொறுப்பேற்றவுடன் ஊரக வளர்ச்சித்துறை மூலம் கிராமங்கள் முன்னேற்றம், மகளிர் சுயஉதவிக் குழு மூலம் கிராம அபிவிருத்தி திட்டம், அனைத்து வசதிகளும் கொண்ட அனைத்துக் கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டம் போன்றவைகளை விளக்கும் ஊரக வளர்ச்சித் துறையின் அலங்கார ஊர்தியும், கூட்டுறவுத் துறையின் அலங்கார ஊர்தியும், மக்கள் நலம் பேணும் மக்கள் நல்வாழ்வுத்துறையின் அலங்கார ஊர்தியும், தேசிய ஒருமைப்பாட்டையும் பன்னாட்டு நட்புறவையும் வளர்க்கின்ற சுற்றுலா துறையின் கலைநயம் மிகுந்த அலங்கார ஊர்தியும், வனத்துறையின் அலங்கார ஊர்தியும், தோட்டக் கலையின் அலங்கார ஊர்தியும், மின்சாரத் துறையின் வளர்ச்சிப் பணிகள் குறித்த அலங்கார ஊர்தியும், சமூக நலத்துறையின் மூலம் தாய்மார்களுக்கு ஆற்றி வரும் சீரிய பணிகளை விளக்கும் சமூக நலத்துறையின் அலங்கார ஊர்தியும், அஞ்சல் துறையின் சாதனைகளை விளக்கும் அஞ்சல்துறை அலங்கார ஊர்தியும், ஆதிதிராவிடர் நலத்துறையின் செயல்பாடுகளை விளக்கும் அலங்கார ஊர்தியும், சென்னை மாநகர மக்களின் குடிநீர் தேவையை போக்க, மாண்புமிகு ஊரக மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்களின் சீரிய பணிகளை விளக்கும் குடிநீர் மற்றும் வடிக்கால் வாரியத்துறையின் அலங்கார ஊர்தியும், முதலமைச்சர் கலைஞர் அவர்களின் அரசு மீனவர்களுக்கு ஆற்றிவரும் அரும் பெரும் சாதனைகளையும் சுனாமியால் பாதிக்கப்பட்ட மீனவர்களுக்கு வழங்கிய நலத்திட்ட உதவிகளையும் விளக்கிடும் மீன்வளத் துறையின் அலங்கார ஊர்தியும், மகளிர் நல மேம்பாடு மற்றும் கைத்தறித்துறையின் அலங்கார ஊர்தியும், தீயணைப்புத் துறையின் தீரமிகு பணிகளை விளக்கிடும் அலங்கார ஊர்தியும் அணிவகுத்து வந்து பார்வையாளர் களின் கவனத்தை ஈர்த்தது.



குடியரசு நாள் விழா அலங்கார ஊர்திகள் அணிவகுப்பில் முதல் பரிசு பெற்ற ஊரக வளர்ச்சி துறைக்கு மேதகு ஆளுநர் அவர்கள், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் முன்னிலையில் பரிசினை வழங்க, ஊரக வளர்ச்சித்துறை செயலாளர் திரு. அசோக் வர்தன் ஷெட்டி, இ.ஆ.ப., அவர்கள் பெற்றுக் கொண்டார். உடன் மாண்புமிகு பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் திரு. தங்கம் தென்னரசு, ஊரக வளர்ச்சி இயக்குநர் திரு.ககன்தீப் சிங் பேடி, இ.ஆ.ப., ஆகியோர் உள்ளனர்.



குடியரசு நாள் விழா அலங்கார ஊர்திகள் அணிவகுப்பில் இரண்டாவது பரிசு பெற்ற செய்தி மக்கள் தொடர்புத் துறைக்கு மேதகு ஆளுநர் அவர்கள், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் முன்னிலையில் பரிசினை வழங்க, தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தித்துறை செயலாளர் திரு. து. ராசேந்திரன், இ.ஆ.ப., அவர்கள் பெற்றுக் கொண்டார். உடன் மாண்புமிகு செய்தித்துறை அமைச்சர் திரு. பரிதி இளம்வழுதி அவர்கள், மாண்புமிகு பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் திரு. தங்கம் தென்னரசு அவர்கள், செய்தி மக்கள் தொடர்புத்துறை இயக்குநர் திரு. சி.கோசலராமன், இ.ஆ.ப., ஆகியோர் உள்ளனர்.

முதல் பரிசு ஊரக வளர்ச்சித்துறை அலங்கார ஊர்திக்கும், இரண்டாம் பரிசு செய்தி மக்கள் தொடர்புத்துறை அலங்கார ஊர்திக்கும், மூன்றாம் பரிசு தொழில்துறை, மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்பநலத் துறை, தோட்டக்கலைத் துறை ஆகிய துறைகள் தேர்வு செய்யப்பட்டன.

பின்னர் இந்திய விமானப் படையின் ஆறு அதிவேக வானூர்திகளின் கண்கவர் அணிவகுப்பும் நடைபெற்றது. இவ்விழாவில் முப்படைகளின் தென்னக தலைமை அதிகாரிகள், மத்திய – மாநில அமைச்சர் பெருமக்கள், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், அனைத்துக் கட்சிகளின் தலைவர்கள், அரசுத்துறை அதிகாரிகள், உள்ளாட்சி மன்ற பிரதிநிதிகள், செய்தியாளர்கள் மற்றும் பொதுமக்கள் திரளாக கலந்து கொண்டனர். நாட்டுப்பண் ஒலிக்க விழா இனிதே நிறைவடைந்தது.

– ஆசிரியர் குழு, தமிழரசு

★ ★ ★




# பேரறிஞர் அண்ணாவின் கால் மலரில் காணிக்கையாக!

**– கலைஞரின் கவிதாஞ்சலி**

**9.2.1969 அன்று சென்னை வானொலியில்...**

எம் அண்ணா... இதய மன்னா...
படைக்கஞ்சாத் தம்பியர் உண்டென்று
பகர்ந்தாயே,
எமை விடுத்துப் பெரும்பயணம் ஏன்
தொடர்ந்தாய்...?
உன் கண்ணொளியின் கதகதப்பில்
வளர்ந்தோமே!
எம் கண்ணெல்லாம் குளமாக ஏன்
மாற்றிவிட்டாய்?
நிழல் நீ தான் என்றிருந்தோம்; நீ கடல்
நிலத்துக்குள் நிழல் தேடப் போய்விட்டாய்;
நியாயந்தானா?
கடலடியில் இருக்கின்ற முத்தெல்லாம்
முத்தல்ல;
நான் தானடா நன்முத்து எனச் சொல்லிக்
கடற்கரையில் உறங்குதியோ?
நாத இசை கொட்டுகின்ற
நாவை ஏன் சுருட்டிக் கொண்டாய்?
விரல் அசைத்து எழுத்துலகில்
வித்தைகளைச் செய்தாயே; அந்த
விரலை ஏன் மடக்கிக் கொண்டாய்?
கண் மூடிக் கொண்டு நீ சிந்திக்கும்
பேரழகைப் பார்த்துள்ளேன்... இன்று
மண் மூடிக் கொண்டுன்னைப் பார்க்காமல்
தடுப்பதென்ன கொடுமை!
கொடுமைக்கு முடிவு கண்டாய்; எமைக்
கொடுமைக்கு ஆளாக்கி ஏன் சென்றாய்?
எதையும் தாங்கும் இதயம் வேண்டுமென்றாய்

இதையும் தாங்க ஏதண்ணா எமக்கிதயம்?
கடற்கரையில் காற்று
வாங்கியது போதுமண்ணா!
எழுந்து வா எம்மண்ணா!
வரமாட்டாய்; வரமாட்டாய்;
இயற்கையின் சதி எமக்குத் தெரியும்
அண்ணா...நீ
இருக்குமிடந் தேடி யான் வரும் வரையில்
இரவலாக உன் இதயத்தைத்
தந்திடண்ணா...
நான் வரும்போது கையோடு கொணர்ந்து
அஃதை
உன் கால் மலரில் வைப்பேன் அண்ணா...



கிராமங்களுக்கான அனைத்துத் தேவைகளையும் நிறைவு செய்வதுதான்

# அனைத்துக் கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டம்


நீண்ட நேரம் என்னுடைய குரல் வளத்தோடு பேச முடியாத சூழ்நிலையில், இந்த நிகழ்ச்சிக்கு எப்படியும் வந்தே தீரவேண்டும் என்ற உறுதியோடு பிற்பகல் சென்னையில் நடைபெற்ற ஒரு நிகழ்ச்சியை முடித்துவிட்டு இங்கே வந்திருக்கின்றோம். வருகிற வழியெல்லாம் காரில் சொல்லிக் கொண்டே வந்தேன் . என் குரல் சரியாக இல்லை. இரண்டு வார்த்தைகூட பேச முடியாத அளவிற்கு தொண்டை பாதிக்கப்பட்டிருக்கிறது. கடந்த ஒரு மாத காலமாக ஒவ்வொரு நாளும் கூட்டங்களில், நிகழ்ச்சிகளில் பேசிப் பேசி, வலியெடுத்துப்போன தொண்டை, பேசுவதற்கு இன்றைக்கு நிச்சயமாக வழி இருக்காது என்று சொல்லிக் கொண்டே வந்தேன்.

பலதரப்பட்ட மக்கள் வந்து குழுமியிருக்கின்ற இந்த இடத்தில் உங்களையெல்லாம் நான் கைஜாடை காட்டி விட்டு, ஒரு நொடியிலே விடைபெற்றுச் சென்று ஏமாற்ற விரும்பவில்லை.

அதனால்தான் என் தொண்டை என்னதான் புண்ணாக இருந்தாலும்கூட அந்தப் புண் அதிகமாக ஆனாலும்கூட பரவாயில்லை, சில கருத்துக்களை உங்களுடைய இதயத்திலே பதிய வைப்பது என்கின்ற முடிவோடு ஒன்றிரண்டு செய்திகளை மாத்திரம் சொல்ல விரும்புகிறேன்.

உள்ளாட்சித்துறை அமைச்சர் தம்பி ஸ்டாலின், செய்தி உங்களுக்கு அனுப்பி இருப்பதைப்போல அல்லது மலரில் எழுதியிருப்பதைப்போல கிராமங்கள் முன்னேற்றம் அடைந்தால்தான் நகரங்கள் உருப்படும். இதை எப்படி நான் சொல்ல வேண்டுமென்றால் இன்றைக்கு நகரங்கள், கிராமங்கள் என்று பேசிப்பார்த்தால் நகரங்கள் வசதிகள் பெற்ற இடங்களாகவும் வசதிகள் பல கொண்ட இடங்களாகவும் இருப்பதை காண்கின்றோம். அதே நேரத்தில் சிற்றூர், பேரூர், குக்கிராமங்கள் எனப்படுகின்ற மொத்தமாக சொல்ல வேண்டுமேயானால், கிராமங்கள் எல்லாம் முன்னேறாத காரணத்தினால்தான் நகரங்களும் பாழாகின்றன.

முன்னேற வேண்டும் என்று கருதுகின்ற கிராமத்து இளைஞர்கள் பிழைப்பைத் தேடி நகர்ப்புறத்திற்கு வருகின்ற வாலிபர்கள் ஏதாவது தொழில் நடத்தி குடும்பத்தைக் காப்பாற்ற வேண்டும் என்று கருதுகின்ற கிராமத்து குடும்பத் தலைவர், இவர்கள் எல்லாம் நகர்ப்புறத்திலே குடியேறி நகரங்கள் நெருக்கடிக்கு





ஆளாகி அதன் காரணமாக நகரங்கள் கெட்டு கிராமங்களுக்கு வருகின்ற சூழ்நிலை நம்முடைய நாட்டிலே உருவாகியிருக்கிறது.

இங்கே வந்து இந்த பந்தலையும், பந்தலில் செய்யப்பட்டிருக்கின்ற அலங்காரங்களையும், இங்கே காட்டப்படுகின்ற எழுச்சியையும், நாங்கள் வரும்போது இங்கே நடைபெற்றுக் கொண்டு இருந்த இசை நிகழ்ச்சியையும், அந்த இசை நிகழ்ச்சியிலே பாடப்பட்ட பாடல் வரிகளையும் கண்டு, கேட்டு, உங்களோடு ஒருவனாக அமர்ந்து இவைகளையெல்லாம் நான் ரசித்த பொழுது, தம்பி துரைமுருகனிடத்திலே அடிக்கடி சொன்னேன், நண்பர் வீராசாமி இடத்திலும் சொன்னேன், எனக்குப் பதிலாக நீங்களே சொல்லிவிடுங்கள். இன்றைக்கு முதலமைச்சரால் பேச இயலாது. நீண்ட நேரம் நீங்களே பேசுங்கள் என்று சொன்னேன். ஆனால் அவர்களும் அதற்காக வருந்தினார்கள். இருந்தாலும் இவ்வளவு பெரிய ஏற்பாடு கிராமப்புறங்களில் இருந்து பல்லாயிரக்கணக்கான மக்கள் சாரை சாரையாக சாமான்ய மக்கள், விவசாயப் பெருங்குடி மக்கள், வணிகர்கள் என்று

வெளிநாடுகளுக்குச் சென்று ஒரு கிராமத்தைப் பார்த்தால் அங்கே நகரத்திற்கும், கிராமத்திற்கும் வித்தியாசம் தெரியாத அளவிற்கு, கிராமங்களிலே அழகான வீதிகள், தெருக்கள், கடைகள், உணவு விடுதிகள், தங்குமிடங்கள், இரயிலடிகள், பேருந்து நிலையங்கள், சாலைகள் இத்தனையும் நகரத்திற்கு நிகராக கிராமங்களில் இருக்கிறது. அதனால் கிராமத்து மக்கள் நகரத்திற்குச் செல்ல வேண்டும், அங்கே குடியேற வேண்டும் என்ற ஆசையால் தூண்டப்படுவதில்லை. அதனால் நகரங்களில் நெருக்கடி ஏற்படுவதில்லை. கிராமங்களே நகரத்தைப் போல உருவாகும்பொழுது, கிராம மக்களுக்கு நகர வாழ்க்கை தேவையில்லாமல் போய்விடுகிறது.

அதனால்தான் கிராமங்களையெல்லாம் இதுபோன்ற ஒரு திட்டத்தால் – அனைத்துக் கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டம் என்கின்ற திட்டத்தால் கிராமங்களையெல்லாம் முன்னேற்ற வேண்டும்; அவர்களுடைய தேவைகளையெல்லாம் நிறைவு செய்ய வேண்டும்; சாலையா, தண்ணீரா, மருத்துவமனையா, பள்ளிக் கூடமா, கல்லூரியா என்று என்னென்ன கிராமங்களிலே வரவேண்டும் என்று கருதுகிறோமோ, அவைகளையெல்லாம் கொண்டு வர இது போன்ற தொகுப்புத் திட்டங்கள் தேவை.

நான் உங்களுக்கு ஞாபகப்படுத்த விரும்புகிறேன். பல பேருக்கு அது மறந்து போய் இருக்கும். அறிஞர் அண்ணா அவர்களுடைய மறைவிற்குப் பிறகு, நான் முதலமைச்சராகப் பொறுப்பேற்ற பிறகு, ஒவ்வொரு மாவட்டத்திலும் கிராமத்து மக்களை இணைக்கின்ற பகுதிகளி லெல்லாம் கல்லூரிகளை உருவாக்கினேன். அப்படி கிராமங்களை இணைக்கின்ற கல்லூரிகள் உருவாக்கப்பட்ட காரணத்தினால்தான் மாணவர்கள் – பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட, தாழ்த்தப்பட்ட மாணவர்கள் பக்கத்திலே உள்ள கல்லூரிகளுக்குச் சென்று படிக்க வசதி வாய்ப்புகள் எல்லாம் ஏற்பட்டது. இதை நாம் மறந்து விடக்கூடாது. அப்படி கல்லூரிகள் பல ஏற்பட்டு இன்றைக்கு அவைகள் எல்லாம் பல்கலைக் கழகங்களுடன் இணைக்கப் பட்டிருக்கின்ற காட்சியைக் காண்கிறோம்.

பெருந்தலைவர் காமராஜர், பிள்ளைகள் படிக்காமல் மாடு மேய்க்கக்கூடாது என்பதற்காக, கிராமப்புறங்களிலே பள்ளிக் கூடங்களை தொடங்கச் சொன்னார். அந்த அடையாளத்தை சரித்திரத்திலே பதிய வைக்கத்தான், காமராஜர் பிறந்தநாளை "கல்வி வளர்ச்சி நாள்" என்று இந்த ஆட்சி கொண்டாடுகின்றது. சட்டமே அதற்காக செய்யப் பட்டிருக்கிறது. அப்படி கிராமப் புறங்களிலே பள்ளிக்கூடங்கள் உருவாகி அந்த பள்ளிக்கூடங்களில் படிக்கின்றவர் களெல்லாம் ஒரு கல்லூரிக்குச் செல்ல கிராமங்கள் சூழ்ந்த பகுதியிலேயே கல்லூரிகள் அமைத்து அப்படி உருவான கல்லூரிகளிலே இருந்து வெளி கிளம்புகின்ற மாணவர்களுக்கு பல்கலைக் கழகங்கள் அமைத்து இன்றைக்கு தமிழ்நாடு, கல்வியிலே சிறந்த மாநிலங்களிலே ஒன்றாக விளங்குகின்றது. என்றால், நாம் கிராமத்தைச் சேர்ந்த பகுதிகளிலே கல்லூரிகளை அமைந்திருப்பது தான் காரணம்.

இதுபோதாது, இன்னும் நிறைய அமைய வேண்டும், உருவாக்க வேண்டும். அந்த முயற்சிகளை இந்த அரசு நிச்சயமாகத் தொடங்கும், தொடரும் என்ற உறுதியை இந்த நிகழ்ச்சியிலே நான் இங்கே எடுத்துக்காட்ட கடமைப்பட்டிருக்கிறேன். இன்னும் நிறைய பல்கலைக் கழகங்கள் மாநிலத்திலே உருவாக வேண்டும். பல்கலைக்கழகங்கள் உருவாக அடிப்படை வேர்களாக கல்லூரிகள், இன்னும் நிறைய உருவாக வேண்டும். அந்த கல்விக் கூடங்கள், மருத்துவமனைகள் இவைகள் எல்லாம் இணைந்த இடங்களாக கிராமங்கள் இருந்தாக வேண்டும். கிராமங்கள் ஒரு நாட்டின் முதுகெலும்பு மறந்து விடக்கூடாது. உள்ளாட்சித்துறை அமைச்சருக்கு முதுகெலும்பிலே ஏற்பட்டிருக்கின்ற சிறு காயத்தால் அவர் இப்போது நிமிர்ந்து உட்கார முடியவில்லை. இன்னும் கொஞ்ச நாளைக்கு படுக்கையிலே இருக்க வேண்டும். அதுபோல கிராமங்களுக்கு இந்த முதுகெலும்புகளுக்கு சிறு ஊனம் ஏற்பட்டால், காயம் ஏற்பட்டால் நகரங்கள் நகராது, நாடு நகராது. எனவே நாடு நகர, நகரங்கள் நகர, முதுகெலும்பாக இருக்கின்ற கிராமப்புறங்கள் சீர் பெற வேண்டும் வசதி பெற வேண்டும் நலம் பெற வேண்டும்.

அப்படி நலன் பெறுகின்ற இந்தத் திட்டத்தைத்தான் அறிஞர் அண்ணா அவர்களின் பெயரால் அனைத்துக் கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டம் என்று நாம் உருவாக்கியிருக்கின்றோம். இது இடைக்காலத்திலே கடந்த கால ஆட்சியிலே இந்தத் திட்டத்திற்கு விடை கொடுத்து அனுப்பி விட்டார்கள். அவர்கள் விடை கொடுத்த திட்டத்தை நல்ல திட்டங்களை யெல்லாம் நாம் மீண்டும் கொண்டு வருகின்றோம். மீண்டும் இவைகள் எல்லாம் வருவதற்கு காரணம் மீண்டும் நீங்கள் எங்களை கொண்டு வந்து உட்கார வைத்திருப்பதுதான். உங்களால் தான் இதுபோன்ற திட்டங்கள் இப்போது நிறைவேறுகின்றன. நீங்கள் மீண்டும் தவறை இழைத்திருப்பீர் களேயானால் தவறு தொடர்ந்து கொண்டே போயிருக்கும் தமிழ்நாடு வீழ்ந்து கொண்டே போயிருக்கும்.

தமிழ்நாட்டை வீழ்ச்சியில் இருந்து காப்பாற்றிய பெருமை எங்களுக்கு அல்ல, எங்களையெல்லாம் ஆதரித்து, எங்களுக்கு வாக்களித்து எங்களை இந்தப் பொறுப்பிலே உட்காரவைத்த உங்களுக்குதான் அந்தப் பெருமை. அந்தப் பெருமைக்குரிய உங்களை யெல்லாம் சந்திப்பதிலே மிகுந்த மகிழ்ச்சி அடைகின்றேன், நீங்கள் எவ்வளவு உற்சாகமாக இருக்கின்றீர்கள், எந்த அளவிற்கு நீங்கள் ஆர்வத்துடன் இருக்கின்றீர்கள் என்பதற்கு இந்தப் பந்தல் – இந்தப் பந்தலிலே காணப்படுகின்ற எழுச்சி, மகிழ்ச்சி, இவ்வளவு அலங்காரங்கள், இவ்வளவு ஏற்பாடுகள் இவைகளுக்கெல்லாம் காரணமான அரசு அதிகாரிகள், மாவட்டத்திலே சட்டமன்ற உறுப்பினராக இருந்து பணியாற்றுகின்ற தம்பி காந்தியும், அவர்களையெல்லாம் ஊக்கப்படுத்தி உற்சாகப்படுத்தி அவர்களுடைய உழைப்பை எல்லாம் பயன் படுத்தி இந்த அருமையான உற்சாகமான விழாவை நடத்திய தம்பி துரைமுருகன் நன்றிக்குரியவர்கள். அவரால் நன்றி சொல்லப்பட்ட பலபேருக்கும் நான் வாழ்த்துக்களையும், பாராட்டுக் களையும் தெரிவித்து, இந்த அளவாவது உங்களோடு உரையாட முடிந்ததே என்ற களிப்போடு விடைபெற்றுக் கொள்கிறேன்.

–21.01.2007 அன்று அரக்கோணத்தில் நடைபெற்ற அனைத்துக் கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டம் தொடக்க விழாவில் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் கலைஞர் மு. கருணாநிதி அவர்கள் ஆற்றிய உரை.

# பிற்படுத்தப்பட்ட–மிகப் பிற்படுத்தப்பட்ட – தாழ்த்தப்பட்ட – இதர வகுப்பினரைச் சேர்ந்த 4 இலட்சத்து 84 ஆயிரம் பள்ளி மாணவ – மாணவியர்க்கு ரூ.102 கோடியே 82 இலட்சம் மதிப்பில் இலவச மிதிவண்டிகள்

மாண்புமிகு தமிழக முதலமைச்சர்
கலைஞர் **மு.கருணாநிதி** அவர்கள் வழங்கினார்



**செ**ன்னை, தலைமைச் செயலகத்தில் 19.01.2007 அன்று, பிற்படுத்தப்பட்ட, மிகப் பிற்படுத்தப் பட்ட, தாழ்த்தப்பட்ட மற்றும் இதர வகுப்பினரைச் சேர்ந்த பள்ளி மாணவ–மாணவியர்க்கு மாண்புமிகு தமிழக முதலமைச்சர் கலைஞர். மு. கருணாநிதி அவர்கள் இலவச மிதிவண்டிகளை வழங்கினார். இந்நிகழ்ச்சியின் போது, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது :

பிற்படுத்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்த 95,062 மாணவர்களுக்கும், 1,17,199 மாணவிகளுக்குமாக மொத்தம் 2 இலட்சத்து 12 ஆயிரத்து 261 பேருக்கு மிதிவண்டிகள் வழங்கப்படுகின்றன. இதற்கான மொத்த மதிப்பீடு 45 கோடியே 21 இலட்சம் ரூபாயாகும்.

மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் வகுப்பைச் சேர்ந்த 66,006 மாணவர்களுக்கும், 68,752 மாணவிகளுக்குமாக மொத்தம் 1 இலட்சத்து 34 ஆயிரத்து 758 பேருக்கு, 28 கோடியே 57 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டிலான மிதிவண்டிகள் வழங்கப் படுகின்றன.

எனவே பிற்படுத்தப்பட்ட மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்த 1 இலட்சத்து 61 ஆயிரத்து 68 மாணவர்களுக்கும், 1 இலட்சத்து 85 ஆயிரத்து 951 மாணவிகளுக்குமாக சேர்த்து மொத்தம் 3 இலட்சத்து 47 ஆயிரத்து 19 பேருக்கு, 73 கோடியே 78 இலட்சம் ரூபாய் செலவில் மிதிவண்டிகள் வழங்கப்படுகின்றன.

தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடியினர் வகுப்பைச் சேர்ந்த 58,815 மாணவர்களுக்கும், 65,609 மாணவிகளுக்குமாகச் சேர்த்து 1 இலட்சத்து 24 ஆயிரத்து 424 பேருக்கு, 26 கோடியே 37 இலட்சம் ரூபாய் செலவில் மிதிவண்டிகள் வழங்கப்படவுள்ளன.

இதர வகுப்பினர் என்ற தலைப்பில் 5,118 மாணவர் களுக்கும், 7,496 மாணவிகளுக்குமாகச் சேர்த்து 12 ஆயிரத்து 614 பேருக்கு, 2 கோடியே 67 இலட்சம் செலவில் மிதிவண்டிகள் வழங்கப்படுகின்றன.

2006–2007 ஆம் ஆண்டில் மிதிவண்டிகள் வழங்கும் திட்டத்தின் கீழ் ஒட்டு மொத்தமாக 2,25,001 மாணவர்களுக்கும், 2,59,056 மாணவிகளுக்கும் சேர்த்து 4 இலட்சத்து 84 ஆயிரத்து 57 பேருக்கு, 102 கோடியே 82 இலட்சம் ரூபாய் செலவில் மிதிவண்டிகள் வழங்கப்படுகின்றன.

இவ்வாறு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள்.

இந்நிகழ்ச்சியில், மாண்புமிகு சட்டப்பேரவைத் தலைவர், திரு. இரா.ஆவுடையப்பன் அவர்கள், மாண்புமிகு அமைச்சர் திரு. ஆற்காடு நா. வீராசாமி, டாக்டர் க. பொன்முடி, திரு.எம்.ஆர்.கே. பன்னீர் செல்வம், திருமதி ஆ. தமிழரசி மற்றும் தலைமைச் செயலாளர் திரு.எல்.கே.திரிபாதி,இ.ஆ.ப., ஆகியோர் கலந்துகொண்டனர். ■



# இந்திய அரசியல் சட்டம் காலத்தின் தேவைக்கேற்ப புதியதாக இயற்றப்பட வேண்டும்

மேதகு தமிழக ஆளுநர் திரு. சுர்ஜித்சிங் பர்னாலா அவர்கள் தமிழக சட்டப்பேரவையில் ஆற்றிய உரை (20.1.2007)

மாண்புமிகு சட்டப்பேரவை உறுப்பினர்களே,

வணக்கம்.

13ஆவது சட்டப்பேரவையின் நான்காவது கூட்டத் தொடரில், உங்கள் அனைவருக்கும் எனது அன்பான புத்தாண்டு வாழ்த்துக்களைத் தெரிவித்து, இந்த 2007ஆம் ஆண்டிலும் தமிழக அரசின் சிறப்புமிக்க திட்டங்களால் மாநிலத்தின் பொருளாதாரம் மேம்பட்டு, மக்களின் வாழ்க்கைத் தரம் உயரும் என்ற நம்பிக்கையோடு இவ்வுரையைத் தொடங்குகின்றேன்.

2. தமிழ்நாட்டு மக்களின் எதிர்பார்ப்புகளை உள்ளடக்கிய திராவிட முன்னேற்றக் கழகத்தின் தேர்தல் அறிக்கையே இந்த அரசின் முதல் நிதிநிலை அறிக்கையாக அமையப்பெற்று, பதவியேற்ற எட்டு மாதங்களுக்குள்ளாகவே, "சொன்னதைச் செய்வோம், செய்வதைச் சொல்வோம்" என்ற இந்த அரசின் உறுதிமொழி மெய்ப்பிக்கப்பட்டுள்ளதை அனைவரும் அறிவீர்.

3. நீண்ட இடைவெளிக்குப் பிறகு, 1996ஆம் ஆண்டு, உள்ளாட்சி அமைப்புகளுக்கு முதல் முறையாகத் தேர்தல் நடத்தி இந்த அமைப்புகளில் மகளிருக்கு 33 சதவிகித இட ஒதுக்கீட்டையும் இந்த அரசு அளித்தது. அந்த உள்ளாட்சித் தேர்தலிலும், அடுத்து 2001ஆம் ஆண்டு நடைபெற்ற உள்ளாட்சித் தேர்தலிலும், பாப்பாபட்டி, கீரிப்பட்டி, நாட்டார்மங்கலம் மற்றும் கொட்டக்கச்சி யேந்தல் ஆகிய ஊராட்சிகளில் தாழ்த்தப் பட்டோருக்குப் பல ஆண்டுகளாக மறுக்கப் பட்ட உரிமைகளை, இப்போது 2006ஆம் ஆண்டு நடைபெற்ற உள்ளாட்சித் தேர்தலில் மீட்டெடுத்து, அனைத்து சமூகத்தினரும் ஒருங்கிணைந்து முன்னேற்றப் பாதையில் பீடுநடை போட வழிவகுத்த இந்த அரசின் சாதனை, ஜனநாயக வரலாற்றில் பொன் எழுத்துக்களால் பொறிக்கப்பட வேண்டியதாகும். இது ஜனநாயகத்துக்கு மட்டுமன்றி, சமூக நீதிக்கான போராட்டத்திற்கு அனைத்துக் கட்சிகள் கொடுத்த குரலுக்கும் கிடைத்த வெற்றியாகும்.

4. அறிஞர் அண்ணா வகுத்தளித்த மாநில சுயாட்சிக் கொள்கையை முழு முதற் கொள்கையாக மனத்தில் பதித்து செயல்பட்டு வரும் இந்த அரசு, உறவுக்குக் கை கொடுத்து, உரிமைக்குக் குரல் கொடுத்து நமது மாநிலத்திற்கு மத்திய அரசிடமிருந்து பெறப்பட வேண்டிய நன்மைகளையும் உரிமைகளையும் பெறுவதற்கான அனைத்து முயற்சிகளையும் மேற்கொள்ளும்.

5. "இந்திய அரசியல் சட்டம் உயர்ந்தோரால் உருவாக்கப்பட்டது. ஆனால் இந்திய அரசியல் சட்டம் பற்றிய மறுசிந்தனை – மறுஆய்வு –மறுமதிப்பீடு செய்வதற்கான நேரம் வந்துவிட்டது. (Stalwarts of this country sat and devised our Constitution. But the time has come for rethinking, reappraisal and revaluation)" என்று 40 ஆண்டுகளுக்கு முன்பே மாநிலங்களவையில் அறிஞர் அண்ணா தமது முதல் உரையிலேயே தெளிவுபடுத்தினார். இந்திய அரசியல் சட்டம் திருத்தப்பட்டு புதியதாக எழுதப்பட வேண்டும் என்று பல்வேறு அரசியல் கட்சிகளின் தலைவர்களும், சட்ட விற்பன்னர்களும் கருத்துத் தெரிவித்து வருகிறார்கள். விடுதலை வேட்கை பெருகி, அந்நியர் ஆதிக்கத்தினின்றும் விடுபட்டு, சுதந்திரம் பெற்ற சூழலில் அரசியல் மாமேதை அண்ணல் அம்பேத்கர் போன்ற சரித்திரம் படைத்த சான்றோர்களால், நமது இந்திய அரசியல் சட்டம் உருவாக்கப்பட்டதெனினும்; அதில், அவ்வப்போது அரும்பிய தவிர்க்க முடியாத தேவைகளையொட்டி, இதுவரை ஏறத்தாழ 100 முறை திருத்தங்கள் செய்யப்பட்டுள்ளன. மனித இனப் பரிணாம வளர்ச்சியில் மாற்றமென்பது மாற்றிட இயலாதது. பல்வேறு நாடுகளில், பலமுறை

அரசியல் சட்டங்கள் புதியதாக எழுதப்பட்டுள்ளன. கடந்த 50 ஆண்டுகளில், இந்தியத் திருநாட்டின் அரசியல், சமூக, பொருளாதாரப் பரிமாணங்களும், உழைக்கும் வர்க்கத்தின் தேவைகளும் முற்றிலுமாக மாறிவிட்டன. பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர், தாழ்த்தப்பட்டோர் மற்றும் பழங்குடியின மக்கள் தாம் போராடிப் பெற்றிடும் சமூக நீதியைப் பேணிக் காப்பதற்கும், மேலும் சிறுபான்மையினர் உரிமை மற்றும் பெண்ணுரிமை உள்ளிட்ட சமூகநீதியை உறுதி செய்வதற்கும், கம்பி மீது நடப்பதைப் போன்ற நிலைக்கு ஆளாகியிருக்கிறார்கள். உண்மையான கூட்டாட்சித் தத்துவம் நிலைபெறுவதற்கேற்பவும், தட்டுத் தடங்கலின்றி சமூக நீதிச் சக்கரம் சுழலவும், மாநிலங்களுக்கு அதிகாரப்பரவல், மத்திய அரசு மற்றும் மாநில அரசுகளுக்கான அதிகாரப் பட்டியல்களின் மறுபரிசீலனை ஆகியவற்றிற்கான அவசியம் நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது. எனவே, இவை போன்ற பல்வேறு காரணங்களின் அடிப்படையில் இந்திய ஒற்றுமை, ஒருமைப்பாடு, இறையாண்மை ஆகியவற்றைப் பாதுகாக்கும் வகையில் இந்திய அரசியல் சட்டம் காலத்தின் தேவைக்கேற்ப புதியதாக இயற்றப்பட வேண்டும் என்று மத்திய அரசை இந்த அரசு வலியுறுத்திக் கேட்டுக்கொள்கிறது.

6. நமது அரசியலமைப்பில் மக்களுக்குத் தேவையான நற்பணிகளை (Services) ஆற்றும் பொறுப்பு மாநில அரசுகளுக்கே இருந்தாலும், வரி விதிப்பு அதிகாரம் பெருமளவு மத்திய அரசிற்கே உள்ளது. இந்த வகையில், நாட்டின் பொருளாதாரத்தில் நற்பணிகளின் பங்கு தொடர்ந்து அதிகரித்து வருவதையும், தற்போது மைய அரசால் விதிக்கப்படும் நற்பணி வரி (Service Tax) மூலம் கிடைக்கப்பெறும் வருவாய் மிக விரைவாகப் பெருகி வருவதையும் நாம் அனைவரும் அறிவோம். மக்களுக்கான அடிப்படைத் தேவைகளை நிறைவேற்றும் பெரும் பொறுப்பு மக்களுக்கு நெருக்கமாக உள்ள மாநில அரசுகளுக்கே உள்ளது என்பதைக் கருத்தில் கொண்டு, நற்பணி வரி (Service Tax) விதிக்கும் அதிகாரத்தை மாநில அரசுகளுக்கே அளிக்க வேண்டும் என்று தேசிய வளர்ச்சிக் குழுக் கூட்டத்தில் மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் மு.கருணாநிதி அவர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளார். இதற்குத் தேவையான அரசியலமைப்புச் சட்டத் திருத்தத்தை மைய அரசு மேற்கொள்ள வேண்டும் என்று இவ்வரசு வலியுறுத்துகிறது.

**"மக்களுக்கான அடிப்படைத் தேவைகளை நிறைவேற்றும் பெரும் பொறுப்பு மக்களுக்கு நெருக்கமாக உள்ள மாநில அரசுகளுக்கே உள்ளது என்பதைக் கருத்தில் கொண்டு, நற்பணி வரி (Service Tax) விதிக்கும் அதிகாரத்தை மாநில அரசுகளுக்கே அளிக்க வேண்டும்" என்று தேசிய வளர்ச்சிக் குழுக் கூட்டத்தில் மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் மு.கருணாநிதி அவர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளார்**

7. அண்டை மாநிலங்களிடையே சுமூகமான உறவு நிலவுவதற்கான இந்த அரசின் அணுகுமுறையின் படியும், உச்ச நீதிமன்றம் தெரிவித்த கருத்தின் அடிப்படையிலும், முல்லைப் பெரியாறு பிரச்சினை குறித்து கேரள அரசுடன் தமிழ்நாடு அரசு பேச்சுவார்த்தைகளை மேற்கொண்டும் எந்தவித முன்னேற்றமும் ஏற்படாத காரணத்தினால், உச்ச நீதிமன்றத்தை அணுகுவதைத் தவிர வேறு வழியில்லை என்ற நிலைக்கு இந்த அரசு தள்ளப்பட்டுள்ளது. தென் மாவட்ட விவசாயிகளின் முக்கிய வாழ்வாதாரம் பற்றியதான இந்தப் பிரச்சினையில், அவர்களின் உரிமைகளை முழுமையாகக் காத்திடத் தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் இந்த அரசு எடுத்துள்ளது.

8. தமிழகத்தின் கோரிக்கையை ஏற்று சமூக நீதிக் காவலர் திரு.வி.பி.சிங் அவர்கள் பாரதப் பிரதமராக இருந்தபோது அமைக்கப்பட்ட காவிரி நடுவர் மன்றத்தின் இறுதித் தீர்ப்பினை எதிர்பார்த்து, கடந்த 16 ஆண்டுகளாக தமிழ்நாட்டின் விவசாயப் பெருமக்கள் காத்திருக்கும் நிலையில், அந்த இறுதித் தீர்ப்பு வரும் பிப்ரவரி 5ஆம் நாள்

வழங்கப்படவுள்ளது. இத்தீர்ப்பு, தமிழக விவசாயிகளுக்கு வாழ்வளிக்கும் நல்ல தீர்ப்பாக அமையும் என்று எதிர்பார்க்கிறோம்.

9. பதினொன்றாவது ஐந்தாண்டுத் திட்ட காலம் வரும் 2007ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் முதல் தொடங்கவுள்ளது. 9.12.2006 அன்று நடந்த தேசிய வளர்ச்சிக் குழுவின் பதினொன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் திட்ட அணுகுமுறை விவாதத்தில் அனைத்துப் பிரிவினரின் வாழ்க்கைத் தரமும் உயரும் வகையிலான வளர்ச்சியைக் குறிக்கோளாகக் கொண்டு இத்திட்டத்தைச் செயல்படுத்த முடிவு செய்யப்பட்டுள்ளது.

10. ஒன்பதாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் ரூபாய் 25,000 கோடியாக இருந்த திட்ட ஒதுக்கீடு, பத்தாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் ரூபாய் 40,000 கோடியாக 60 சதவிகித அளவிற்கு உயர்த்தப்பட்டது. இந்தப் பத்தாவது ஐந்தாண்டுத் திட்ட ஒதுக்கீட்டை 100 சதவிகிதம் உயர்த்தி, பதினொன்றாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில், ரூபாய் 80,000 கோடி அளவிற்கு அறுதியிட்டு, திட்டப் பணிகளை செயல்படுத்த இந்த அரசு உறுதி பூண்டுள்ளது. பதினொன்றாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் மாநிலப் பொருளாதாரத்தைச் சராசரியாக ஆண்டொன்றுக்கு 9 சதவிகிதம் அளவிற்கு வளர்ச்சி அடையச் செய்வதே இந்த அரசின் குறிக்கோளாகும்.

> “பதினொன்றாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் மாநிலப் பொருளாதாரத்தைச் சராசரியாக ஆண்டொன்றுக்கு 9 சதவிகிதம் அளவிற்கு வளர்ச்சி அடையச் செய்வதே இந்த அரசின் குறிக்கோளாகும்.”

11. ஓர் ஒப்பீட்டுப் புள்ளி விவரத்தின்படி; இந்த அரசு பதவியேற்ற காலந்தொட்டு குற்றங்கள், சட்டம் ஒழுங்குப் பிரச்சினைகள் ஆகியன வெகுவாகக் குறைந்துள்ளன. காவல்துறையை வலுப்படுத்த ஏற்கெனவே இரண்டு முறை போலீஸ் கமிஷன்கள் அமைத்ததுபோல், தற்போது மூன்றாவது போலீஸ் கமிஷனையும் அமைத்துள்ளோம். சட்டம் ஒழுங்கைச் சீர்குலைக்க முனையும் தீயசக்திகள் எதுவாயினும் அவற்றை அடக்கி ஒடுக்கவும், அதே நேரத்தில் மக்களின் தோழனாகத் திகழவும் உரிய பணித்திறன்மிக்கதாகக் காவல்துறை விளங்கிட ஆவன செய்யப்படும்.

12. தொடர்ந்து இயற்கைச் சீற்றங்களால் பாதிக்கப்பட்ட அனைத்து விவசாயிகளின் சுமார் 7,000 கோடி ரூபாய் கூட்டுறவுக் கடன்களை ரத்து செய்து உழவர்களின் வாழ்வில் ஒளியேற்றி, வேளாண்துறையில் ஏற்பட்டுள்ள தேக்கத்தை முழுமையாக அகற்றிடத் தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் எடுத்து வருகிறோம். இதன் விளைவாக, கடந்த சில ஆண்டுகளில் 2006ஆம் ஆண்டில்தான், முதல் முறையாகக் குறுவை பயிரும், பெரும் சாதனையாகச் சம்பாப் பயிரும் சாகுபடி செய்யப்பட்டுள்ளது என்பது மிகுந்த மகிழ்ச்சியை அளிப்பதாகும்.

13. 56 சதவிகித மக்கள் வேளாண்துறையைச் சார்ந்துள்ள சூழ்நிலையில், வரும் ஆண்டுகளில் வேளாண்மைத் துறை குறைந்தபட்சம் 4 சதவிகித வளர்ச்சியை எட்டுவதை இலக்காகக் கொண்டு செயல்படுவோம். விவசாயத்தை நம்பியுள்ள குடும்பங்களில் உள்ள இளைஞர்கள், தொழில் துறை மற்றும் நற்பணித் துறை (Service Sector) ஆகியவற்றில் இன்று காணப்படும் உயர் வளர்ச்சியின் பயன்களை அடைய உரிய நடவடிக்கைகளை மேற்கொள்வோம்.

14. நிலையான வேளாண் வளர்ச்சியை உறுதி செய்து, கிராமப்புற ஏழை எளியவர்க்கு தொடர்ந்து வேலைவாய்ப்புகளை உருவாக்க, வேளாண் தொழிலுக்கு இன்றியமையாத் தேவையான நீர்

"தமிழ்நாடு போன்ற நீர்ப் பற்றாக்குறை உள்ள மாநிலங்களின் வேளாண் வளர்ச்சிக்குத் தலையாயத் தேவையான தேசிய நதி நீர் இணைப்புத் திட்டத்தை விரைந்து செயல்படுத்த மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 9.12.2006 அன்று நடந்த தேசிய வளர்ச்சிக் குழுக் கூட்டத்தில் வேண்டுகோள் விடுத்துள்ளார். இத்திட்டத்தை உடனடியாகச் செயல்படுத்தவும், 11ஆவது ஐந்தாண்டுத் திட்டத்தில் உரிய நிதி ஒதுக்கீடு செய்யவும் மத்திய அரசை இந்த அரசு தொடர்ந்து வலியுறுத்தும்."

ஆதாரங்கள் மேம்படுத்தப்பட வேண்டும். நமது நாட்டில், ஒரு பக்கம் வாட்டும் வறட்சியும் மறுபக்கம் வெள்ளப் பெருக்கினால் கடும் சேதமும் ஏற்பட்டு வருவதையும், அதே நேரத்தில், ஆண்டுதோறும் பெருமளவு நீர் யாருக்கும் பயன்படாமல் கடலில் கலந்து, சிறிதளவே கழனிக்குப் பயன்படும் நிலையையும் நாம் காண்கிறோம். இச்சூழலில், தமிழ்நாடு போன்ற நீர்ப் பற்றாக்குறை உள்ள மாநிலங்களின் வேளாண் வளர்ச்சிக்குத் தலையாயத் தேவையான தேசிய நதி நீர் இணைப்புத் திட்டத்தை விரைந்து செயல்படுத்த மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 9.12.2006 அன்று நடந்த தேசிய வளர்ச்சிக் குழு கூட்டத்தில் வேண்டுகோள் விடுத்துள்ளார். இத்திட்டத்தை உடனடியாகச் செயல்படுத்தவும், 11-ஆவது ஐந்தாண்டுத் திட்டத்தில் உரிய நிதி ஒதுக்கீடு செய்யவும் மத்திய அரசை இந்த அரசு தொடர்ந்து வலியுறுத்தும்.

15. பாசன வேளாண்மையை நவீனப்படுத்தவும் மற்றும் நீர்வள ஆதாரங்கள் மேலாண்மையைச் செயல்படுத்தவும் உலக வங்கியின் நிதியுதவி குறித்த பேச்சுவார்த்தைகள் 2006ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் முடிவுற்றுள்ளன. இந்தத் திட்டத்திற்கான உலக வங்கியின் ஒப்புதல் விரைவில் எதிர்பார்க்கப்படுகிறது. 2007-2008ஆம் ஆண்டு முதல் செயல்படுத்தப்படும் இத்திட்டத்தின்கீழ், நீர்ப்பாசன வசதிகள் மேம்படுத்தப்பட்டு 6 இலட்சம் எக்டேர் விவசாய நிலங்கள் பயனடையும். பொதுப்பணித் துறை, வேளாண்மைத் துறை, கால்நடைத் துறை, மீன்வளத் துறை போன்றவை ஒருங்கிணைந்து செயலாற்றி, விவசாயிகளின் வருவாயைப் பெருக்கும் வகையில் இந்தப் பல்நோக்குத் திட்டம் செயல்படுத்தப்படும்.

16. விவசாயிகளின் வாழ்க்கைத் தரம் உயர வேண்டும் என்றால் அவர்களின் வருவாய் உயர வேண்டும். இந்த நோக்கத்தோடு, தோட்டப் பயிர்கள் போன்ற அதிக வருவாய் ஈட்டக்கூடிய பயிர்களை விளைவித்தல் மற்றும் வேளாண்மை சார்ந்த கால்நடை மற்றும் மீன் வளர்த்தல் ஆகியவற்றின் மூலம், வேளாண் பெருமக்களின் வருவாயைப் பெருக்கும் வகையில் அரசின் திட்டங்கள் செயல்படுத்தப்படும். நீரைச் சிக்கனமாக பயன்படுத்தும் நோக்குடன் துல்லிய நீர்ப்பாசன முறைகளுக்கு (Micro Irrigation) ஊக்கம் அளிக்கப்படும்.

17. நிலமற்ற விவசாயக் குடும்பங்களுக்குத் தரிசு நிலத்தைப் பண்படுத்தி இலவசமாக வழங்கும் திட்டத்தின் முதல் இரண்டு கட்டங்களில், ஐம்பதாயிரம் ஏக்கர் நிலங்கள் பண்படுத்தப்பட்டு, ஏழை விவசாயக் குடும்பங்களுக்கு வழங்கப் பட்டுள்ளன. நிலமற்ற ஏழை விவசாயிகளின் சமூகப் பொருளாதார வாழ்வில் ஒரு மௌனப் புரட்சியை ஏற்படுத்தக் கூடிய இத்திட்டம், தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

18. கடந்த தி.மு. கழக ஆட்சிக் காலத்தில், பத்து ஆண்டுகளுக்கு மேலாக அரசுப் புறம்போக்கு நிலங்களில் வீடுகளைக் கட்டிக் குடியிருக்கும் ஏழை எளியவர்களுக்குப் பட்டா வழங்க 2000 ஆம் ஆண்டில் ஒரு புரட்சிகரமான திட்டம் அறிவிக்கப்பட்டு, 31.3.2001 வரை சுமார் இரண்டு இலட்சம் வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்கப்பட்டன. அதன் பின்னர் முனைப்புடன் செயல்படுத்தப் படாமல் இருந்த இத்திட்டத்தை மீண்டும் செயல்படுத்தி தகுதியுள்ளவர்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்கக் கோரும்



கோரிக்கைகளைப் பரிசீலித்து, அவ்வாறு வீடுகள் கட்டிக் குடியிருப்பவர்களுக்கு, 2007 சனவரித் திங்கள் முதல் ஆறு மாத காலத்திற்குள் வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்க இந்த அரசு ஆணையிட்டுள்ளது.

19. 2000ஆம் ஆண்டில், இந்த அரசால் தமிழ்நாடு விவசாயத் தொழிலாளர் நல வாரியம் ஏற்படுத்தப்பட்டு செயல்படுத்தப்பட்ட, தமிழ்நாடு விவசாயத் தொழிலாளர் சமூகப் பாதுகாப்பு மற்றும் நலத்திட்டம் இடையில் நிறுத்தப்பட்டு, தற்போது இந்த அரசால் மேம்படுத்தி அறிமுகப்படுத்தப்பட்டு, இத்திட்டத்திற்கான தனிச் சட்டமும் இயற்றப் பட்டுள்ளது. இந்தத் திட்டத்தின் கீழ், தகுதியுள்ள 66 இலட்சம் விவசாயக் குடும்பங்கள் கண்டறியப் பட்டுள்ளன. அவர்களுக்கு அடையாள அட்டைகள் வழங்கப்பட்டு வருகின்றன. பல்வேறு நலத்திட்ட உதவிகள் தொடர்ந்து அவர்களுக்கு அளிக்கப்படும்.

20. அத்தியாவசியப் பொருள்களில் மூலப் பொருளான அரிசியை, இந்தியாவில் எந்த மாநிலத்திலும் இல்லாத குறைந்த விலையில், பொது விநியோகத் திட்டத்தின் மூலமாக, கிலோ ஒன்றுக்கு ரூபாய் 2 என்ற விலையில் வழங்கி, இந்த அரசு ஏழை எளியோரின் பசிப்பிணி போக்கியுள்ளது.

21. தமிழ்நாட்டில் அனைத்துக் குழந்தைகளுக்கும் தொடக்கக் கல்வி கிடைக்க வாய்ப்பு வழங்கப் பட்டுள்ளதோடு மட்டுமன்றி, ஆசிரியர் காலிப் பணியிடங்கள் காலமுறை ஊதியத்தில் நிரப்பப் பட்டு, பள்ளிக் கட்டமைப்பு வசதிகள் மேம்படுத்தப் பட்டு கல்வியின் தரமும் உயர்த்தப்பட்டுள்ளது. இனி வரும் ஆண்டுகளில், அனைவருக்கும் உயர்நிலைக் கல்வி கிடைக்கச் செய்யும் உன்னத இலக்கை அடையத் தேவையான திட்டங்களை வகுத்துச் செயல்படுத்துவோம்.

22. நல்ல திட்டங்கள் தொடர்ந்து நடத்தப்பட வேண்டும் என்ற இந்த அரசின் கொள்கையின்படி பள்ளி மாணவ மாணவியருக்கு இலவச மிதிவண்டி வழங்கும் திட்டத்தை இந்த அரசு தொடர்ந்து செயல்படுத்தி வருகிறது. இந்தத் திட்டத்தின் கீழ் இந்தக் கல்வியாண்டில், ரூபாய் 103 கோடி மதிப்பீட்டில், சுமார் 4,84,000 மாணவ மாணவியருக்கு இலவச மிதிவண்டிகள் வழங்கப் பட்டு வருகின்றன.

23. முதலமைச்சர் கலைஞர் கடந்தமுறை ஆட்சியில் இருந்தபோதுதான், 1999-2000ஆம் கல்வியாண்டில் அனைத்து அரசு மேல்நிலைப் பள்ளிகளிலும் கணினிக் கல்வி அறிமுகப்படுத்தப் பட்டது. கணினிக் கல்வியின் தரத்தை மேலும் உயர்த்தும் வகையில், 2007-2008 ஆம் கல்வியாண்டில் அனைத்து அரசு மேல்நிலைப் பள்ளிகளிலும் கணினி ஆய்வகம் அமையப்பெற ஆவன செய்யப்படும். இதுமட்டுமன்றி, உயர்நிலைக் கல்வியில் இடையில் நின்று போனவர்கள் (drop-outs) மற்றும் உயர்கல்வி தொடர இயலாதோர் வேலைவாய்ப்புகளுக்குத் தேவையான தகுதிகளைப் பெறும் வகையில் அவர்களுக்குத் திறன் மேம்பாட்டுத் திட்டங்கள் (skill development programmes) செயல் படுத்தப்படும்.

24. 'வருமுன் காப்போம்' திட்டத்தை மீண்டும் செயல்படுத்தி, மக்களிடையே நோய்கள் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தவும், ஆரம்ப நிலையிலேயே நோய்களைக் கண்டறிந்து குணப்படுத்தவும் இந்த அரசு வழிவகை செய்துள்ளது. குழந்தைகள் மற்றும் பேறுகாலத் தாய்மார்கள் இறப்பு விகிதங்களைக் குறைக்க தொடர்ந்து நடவடிக்கை எடுத்து வருகிறோம். டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி நினைவு மகப்பேறு உதவித் திட்டம் இந்நாட்டிற்கே முன்னோடித் திட்டமாகத் திகழ்ந்து தாய்மார்கள் மற்றும் குழந்தைகள் நலனைப் பாதுகாப்பதில் ஒரு பெரும்பங்கு வகிக்கிறது. ரூபாய் 6,000 வீதம் நிதியுதவி வழங்கப்படும் இந்தத் திட்டத்தின் கீழ், இந்த ஆண்டில் இதுவரை 1,75,532 கர்ப்பிணித் தாய்மார்கள் பயனடைந்துள்ளனர்.

25. தொழில் வளர்ச்சியில் தமிழகத்தை முன்னணி மாநிலமாக முன்நிறுத்துவதோடு, வேலைவாய்ப்பு களை உருவாக்கக்கூடிய தொழில்களுக்கு மேலும் ஊக்கம் அளிக்கப்படும். அதிக வேலைவாய்ப்புகளை உருவாக்கும் சிறுதொழில் மற்றும் வேளாண் சார்ந்த தொழில்களுக்கு முன்னுரிமை அளிக்கப் படும். மேலும், மாநிலத்தின் முக்கிய ஏற்றுமதித் தொழில்களுக்குத் தேவையான அனைத்து வசதிகளும் செய்து தரப்படும்.

26. தொழில் முனைவோர் எளிதில் அணுகக்கூடிய மற்றும் வெளிப்படையான இந்த அரசின் செயல் பாட்டின் விளைவாக, தொழில் முனைவோர் அனைவரையும் ஈர்க்கும் முதன்மை மாநிலமாகத் தமிழகம் மாறியுள்ளது. சுமார் 50,000 பேர்களுக்கு நேரடியாகவும் மறைமுகமாகவும் வேலைவாய்ப்பை அளிக்கக்கூடிய, ரூபாய் 2,700 கோடி மதிப்பீட்டிலான ஆறு பெரும் தொழில் திட்டங்களுக்கான ஒப்பந்தங்கள் கையெழுத்திடப் பட்டுள்ளன. டெல் கம்ப்யூட்டர் மற்றும் சாம்சங் போன்ற இத்தகைய பெரும் நிறுவனங்கள் தமிழ்நாட்டில் தங்களின் தொழிற்சாலைகளை நிறுவ முன்வந்துள்ளதானது, இந்த அரசின் தொழில் கொள்கைக்குக் கிடைத்த மாபெரும் வெற்றியாகும். தொழிற்சாலைகள் நிறுவப்படும் பகுதிகளில் வசிக்கும் இளைஞர்களுக்கு அதிக வேலைவாய்ப்புகள் கிடைக்கும் வகையில் இந்த அரசின் தொழில் கொள்கை தொடரும்.

27. மாண்புமிகு முதலமைச்சர் மற்றும் தமிழ்நாட்டைச் சேர்ந்த மாண்புமிகு மத்திய அமைச்சர்களின் முயற்சிகளின் பயனாக தேசிய வாகனப் பரிசோதனை, ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சிக் கட்டமைப்புத் திட்டத்தை (NATRIP) சென்னையை அடுத்துள்ள ஒரகடத்தில் அமைக்க மத்திய அரசு இசைவளித்தது. இது தொடர்பாக விரைவான நடவடிக்கை எடுக்கப்பட்டு, 303 ஏக்கர் நிலம் மாநில அரசால் ஒதுக்கப்பட்டு, ஐக்கிய முற்போக்குக் கூட்டணியின் தலைவரான திருமதி சோனியா காந்தி அவர்கள் கலந்துகொண்டு, மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்களால் இத்திட்டம் கடந்த நவம்பர் திங்கள் 4ஆம் நாள் தொடங்கி வைக்கப்பட்டது என்பது நம் அனைவருக்கும் மிகுந்த மகிழ்ச்சியளிப்பதாகும்.

28. வணிகர்கள் மற்றும் உற்பத்தியாளர்களுடன் கலந்து பேசி, தமிழக அரசு மதிப்புக் கூட்டுவரியை 1.1.2007 முதல் நடைமுறைப்படுத்தியுள்ளது. இதன் விளைவாக, பொருட்களின் விலை குறைந்து வருகிறது. தமிழ்நாட்டில் இந்த வரி அறிமுகப் படுத்தப்பட்டதால், மாநிலத்தின் உற்பத்தியாளர் களுடைய உற்பத்திப் பொருள்கள், தேசிய அளவில் மட்டுமன்றி சர்வதேச சந்தையிலும் போட்டியிடக் கூடிய திறன் பெறும்.

29. தேர்தல் அறிக்கையில் அறிவிக்கப்பட்டவாறு தொடங்கப்பட்டுள்ள இலவச வண்ணத் தொலைக் காட்சிப் பெட்டிகள் வழங்கும் திட்டத்தின்கீழ்,




இரண்டாவது கட்டமாக 25 இலட்சம் வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள் பிப்ரவரி 15 முதல் வழங்கப்படும். வரும் நிதியாண்டுகளிலும் இந்தத் திட்டம் தொடர்ந்து செயல்படுத்தப்பட்டு, வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள் இல்லாத அனைத்துக் குடும்பங்களுக்கும் வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள் வழங்கப்படும். சட்டமன்றக் கட்சிகளின் பிரதிநிதிகள் குழுவின் ஒப்புதல் பெற்று, ரூபாய் 685 கோடி மதிப்புள்ள 25 இலட்சம் வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகளை ஒளிவுமறைவற்ற முறையில் (Transparent) சர்வதேச ஒப்பந்தப்புள்ளி மூலம் கொள்முதல் செய்துள்ளது அனைவரின் பாராட்டையும் பெற்றுள்ளது.

30. ஏழை எளிய, நடுத்தரக் குடும்பங்களைச் சேர்ந்த பெண்கள் பயன்பெற, சமையல் எரிவாயு இணைப்பு இல்லாத குடும்பங்களுக்கு இலவசமாக எரிவாயு அடுப்பும் சமையல் எரிவாயு இணைப்பும் வழங்கப்படும் என இந்த அரசு அறிவித்து, பொங்கல் திருநாளையொட்டி, சனவரித் திங்கள் 14ஆம் நாள் முதல் செயல்படுத்தி வருகிறது. இந்தத் திட்டத்தின் கீழ் இந்த நிதியாண்டில், ரூபாய் 60 கோடி செலவில், 3 இலட்சம் குடும்பங்களுக்கு இலவச எரிவாயு அடுப்பும், இலவச எரிவாயு இணைப்பும் வழங்கி, அதற்கான வைப்புத் தொகையையும் அரசே செலுத்தும். வரும் ஆண்டுகளிலும் இந்தத் திட்டம் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

31. மக்களின் தொடர்ந்து உயர்ந்து வரும் வாழ்க்கைத் தரத்திற்கு ஏற்ப அதிகரித்து வரும் மின்சக்தித் தேவையைக் கருத்தில்கொண்டு புதிய மின்சக்தி உற்பத்தி நிலையங்கள் பல அமைக்க இவ்வரசு நடவடிக்கை எடுத்து வருகிறது. மேலும், மாநிலம் முழுவதும் மின் கட்டணம் செலுத்தும் முறை கணினிமயமாக்கப்படும்.

32. சென்னை மாநகரின் அடிப்படை வசதிகளை நிறைவேற்றுவதில் இந்த அரசு தொலைநோக்குப் பார்வையுடன் திட்டங்களைத் தீட்டிச் செயல்படுத்தி வருகிறது. சென்னை மாநகரின் குடிநீர் பிரச்சினைக்கு நீண்டகாலத் தீர்வாக, கடல் நீரைக் குடிநீராக்கும் இரு திட்டங்களை இவ்வரசு மேற்கொண்டுள்ளது. எதிர்காலப் போக்குவரத்துத் தேவைகளைக் கருத்தில் கொண்டு மெட்ரோ இரயில் திட்டத்தை செயல்படுத்த விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கப்பட்டு வருகிறது. மேலும் உலக வங்கி உதவியுடனான தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சித்

திட்டம்-III மற்றும் ஜவஹர்லால் நேரு தேசிய நகர்ப்புற புனரமைப்புத் திட்டம் ஆகிய திட்டங்களின் கீழ் சென்னை மாநகருக்குத் தேவையான சாலைகள் மற்றும் மேம்பாலப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

33. இந்த அரசு எடுத்த முயற்சிகளின் பயனாக, தமிழ்நாட்டில் தேசிய கிராமப்புற வேலைவாய்ப்பு உறுதித்திட்டம் ஆறு மாவட்டங்களில் சிறப்பாகச் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இந்தத் திட்டத்தை மாநிலத்தில் உள்ள அனைத்து மாவட்டங்களுக்கும் விரிவுபடுத்துமாறு மத்திய அரசைக் கேட்டுக் கொண்டுள்ளோம்.

34. படித்து வேலையின்றி இருக்கும் இளைஞர்களின் துயர் துடைக்கும் வகையில், வேலைவாய்ப்பு அலுவலகங்களில் பதிவு செய்து காத்திருப் போருக்கு, மாதமொன்றுக்கு ரூபாய் 300 வரையில் உதவித்தொகையாக வழங்கும் திட்டம், 11.11.2006 அன்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் துவக்கிவைக்கப்பட்டுள்ளது. தொடர்ந்து நடைபெறும் இத்திட்டத்தின் கீழ் இதுவரை 2.50 இலட்சம் வேலைவாய்ப்பற்ற இளைஞர்கள் பயனடைந்துள்ளனர் என்பதை பெருமகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

35. இந்த அரசு பதவியேற்றவுடன், கடந்த ஐந்தாண்டுகளில் வேலைவாய்ப்பற்ற இளைஞர்களுக்கு அரசுப் பணிகளில் வேலைவாய்ப்புகள் கிடைக்காதிருந்த நிலையை அகற்றும் வண்ணம், அரசுப் பணியில் சேருவதற்கான வயது உச்சவரம்பை ஐந்து ஆண்டுகள் தளர்த்தி, மாநில அரசிலுள்ள பல்வேறு பணிகளிலுள்ள காலியிடங்களை, தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம், ஆசிரியர் தேர்வு வாரியம், சீருடைப் பணியாளர் தேர்வு வாரியம் மற்றும் வேலைவாய்ப்பு அலுவலகங்கள் ஆகியவற்றின் மூலம் விரைந்து நிரப்பிட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

36. ஏழை மகளிருக்கும் ஆடவருக்கும் இலவச சேலை வேட்டிகள் வழங்கும் திட்டத்தின் கீழ், பொங்கலையொட்டி, 1.64 கோடி சேலைகளும் 1.64 கோடி வேட்டிகளும் ரூபாய் 256 கோடி மதிப்பீட்டில் வழங்கப்பட்டு வருகின்றன. சுமார் 50,000 நெசவாளர்களுக்கு வேலைவாய்ப்பு வழங்குவதோடு 3.28 கோடி ஏழை மக்களுக்கு இத்திட்டம் ஆண்டுதோறும் பயன்தரும்.

37. அமைப்புசாராத் தொழிலாளர்களுக்குச் சமூகப் பாதுகாப்பை உறுதிசெய்யும் வகையில் கடந்த தி.மு. கழக ஆட்சியில் அமைக்கப்பட்டு, பின்னர் கலைக்கப்பட்ட பல்வேறு நல வாரியங்கள் தற்போது மீண்டும் அமைக்கப்பட்டு, அவர்களுக்கான சமூகப் பாதுகாப்பு உறுதி செய்யப்பட்டுள்ளது, இந்த அரசின் பெரும் சாதனையாகும். மேலும், அண்மையில் கிராமக் கோயில் பூசாரிகளுக் கெனத் தனி நலவாரியம் அமைத்துள்ள இந்த அரசு, எந்தவிதச் சமூகப் பாதுகாப்புமின்றி இருக்கும் வீட்டுப் பணியாளர்களுக்கும் (Domestic workers) தனி நலவாரியம் அமைத்திட முடிவு செய்துள்ளது என்பதைத் தெரிவிப்பதில் பெருமகிழ்ச்சி அடைகிறேன். 11 நலவாரியங்கள் செயல்படத் தொடங்கி, இந்த ஆண்டில் இதுவரை 84,116 அமைப்புசாராத் தொழிலாளர்களுக்கு சுமார் ரூபாய் 19.77 கோடி மதிப்பிலான பல்வேறு நல உதவிகள் வழங்கப்பட்டுள்ளன.

38. ஊனமுற்றோருக்கு மாதந்தோறும் வழங்கப்படும் உதவித் தொகையை ரூபாய் 200லிருந்து ரூபாய் 400ஆக இருமடங்கு உயர்த்தி வழங்கியதோடு மட்டுமன்றி, ஊனமுற்றோரைத் திருமணம் செய்ய முன்வருபவர்களுக்கு அளிக்கப்படும் திருமண உதவித் தொகையையும் ரூபாய் 10,000லிருந்து ரூபாய் 20,000 ஆக இருமடங்காக உயர்த்தி யுள்ளோம். சுயமாக வாழத் தேவையான கல்வி வாய்ப்புகளும், வேலைவாய்ப்புகளும் ஊனமுற்றோருக்குக் கிடைத்திட ஆவன செய்வோம். ஊனமுற்றோருக்கு முழுமையான சமூகப் பாதுகாப்பை அளிக்கும் வகையில் அவர்களுக்கெனத் தனி நலவாரியம் ஒன்று அமைக்கப்படும்.

39. நாள்தோறும் இயற்கையோடு போராடி வாழ்க்கைப் பயணம் நடத்தும் மீனவர்களின் நலனில் மிகுந்த அக்கறை கொண்டுள்ள இந்த அரசு, அவர்களுக்குத் தேவையான சமூகப் பாதுகாப்பை வழங்கும் வகையில், விவசாயத் தொழிலாளர்கள் நலன் காக்க அமைக்கப்பட்டுள்ள நலவாரியம் போன்றே, தனி மீனவர் நல வாரியம் அமைத்து, அதைப்போன்றே அனைத்து உதவிகளையும் வழங்கும்.

40. 1989ஆம் ஆண்டு இந்த அரசால் தருமபுரி மாவட்டத்தில் தொடங்கப்பட்ட மகளிர் சுயஉதவிக் குழு இயக்கம், இன்று மாநில அளவில் மகத்தான ஒரு சக்தியாக உருவெடுத்துள்ளது குறித்து இந்த அரசு பெருமிதம் கொள்கிறது. மகளிர் சுயஉதவிக் குழுக்கள் தொடர்ந்து சிறப்பாகச் செயல்பட முழு ஆதரவையும் ஊக்கத்தையும் இந்த அரசு அளிக்கும். வெறும் சிக்கனச் சேமிப்பு அமைப்புகளாக மட்டுமன்றி, வருவாய் ஈட்டும் பொருளாதார நடவடிக்கைகளை (Economic activities) மேற்கொண்டு, அவர்தம் குடும்பங்களிலும் ஒட்டுமொத்தச் சமுதாயத்திலும் பெரும் மாற்றத்தை ஏற்படுத்தக்கூடிய வகையில் மகளிர் சுயஉதவிக் குழு இயக்கம் மேலும் வலுப்பெற அரசு ஆவன செய்யும்.

41. வேலை வாய்ப்பில்லாத இளைஞர்களுக்குத் தகுந்த வேலைவாய்ப்புகளை ஏற்படுத்தி அவர்களது வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்த, 10,000 இளைஞர் சுய உதவிக் குழுக்கள் அமைக்கப்படும் என்று இந்த அரசு அறிவித்துள்ளது. இதன்படி, 3,500 இளைஞர் சுய உதவிக் குழுக்கள் இதுவரை அமைக்கப் பட்டுள்ளன. இந்த இளைஞர்களுக்குத் தகுந்த வேலைவாய்ப்புகளை ஏற்படுத்தும் வண்ணம், தொழில் நிறுவனங்களுடன் இணைந்து தொழிற்பயிற்சிகள் வழங்கப்பட்டு வருகின்றன.

42. ஏழை எளியோர், ஊனமுற்றோர் போன்ற சமுதாயத்தின் மிகவும் பின் தங்கிய பிரிவினரின் முன்னேற்றத்திற்கு 'வாழ்ந்து காட்டுவோம்' திட்டத்தின் மூலம் இவ்வரசு வழிவகை செய்யும். தற்போது முதல் கட்டமாக பதினைந்து மாவட்டங்களில் தொடங்கப்பட்டு, பதினைந்து ஒன்றியங்களில் செயல்படுத்தப்பட்டுவரும் ரூபாய் 717 கோடி மதிப்பீட்டிலான இந்த 'வாழ்ந்து காட்டுவோம்' திட்டம், அடுத்த பன்னிரெண்டு மாதங்களில் 70 ஒன்றியங்களில் செயல் படுத்தப்படும்.

> **"அண்மையில் கிராமக் கோயில் பூசாரிகளுக்கெனத் தனி நலவாரியம் அமைத்துள்ள இந்த அரசு, எந்தவிதச் சமூகப் பாதுகாப்புமின்றி (Domestic Workers) இருக்கும் வீட்டுப் பணியாளர்களுக்கும் தனி நலவாரியம் அமைத்திட முடிவு செய்துள்ளது என்பதைத் தெரிவிப்பதில் பெருமகிழ்ச்சி அடைகிறேன்.**
>
> **11 நலவாரியங்கள் செயல்படத் தொடங்கி, இந்த ஆண்டில் இதுவரை 84,116 அமைப்புசாராத் தொழிலாளர்களுக்கு சுமார் ரூபாய் 19.77 கோடி மதிப்பிலான பல்வேறு நல உதவிகள் வழங்கப்பட்டுள்ளன."**

43. ஒரு நூறு ஆண்டுகளுக்கும் மேலாக உலகத் தமிழர்களும் பரிதிமாற் கலைஞர் (சூரியநாராயண சாஸ்திரி) போன்ற தமிழறிஞர்களும் கண்டுவந்த கனவை நனவாக்கிடும் வண்ணம், தமிழைச் செம்மொழி என அறிவித்திடச் செய்து, சென்னையில் செம்மொழித் தமிழுக்கெனத் தனியே மத்திய அரசின் நிறுவனமொன்றை உருவாக்கிட வேண்டும் எனும் கோரிக்கையை வெற்றிபெறச் செய்தும், பள்ளிகளில் தமிழைக் கட்டாயப் பாடமாக்கிடச் சட்டமியற்றியும், அறிவியல் தமிழ் மன்றம் அமைத்தும், சென்னை உயர்நீதி மன்றத்தின் அனைத்து நடவடிக்கைகளிலும் தமிழை வழக்கு மொழியாக்கியும், அன்னைத் தமிழை அனைத்து நிலைகளிலும் அரியணையேற்றுவதில் மாண்புமிகு முதலமைச்சர் கலைஞரும் அவரது தலைமையிலான இந்த அரசும் அயராது முயன்று வருவது கண்டு தமிழ்கூறு நல்லுலகம் அகம் மிக மகிழ்ந்து பாராட்டி வருகிறது.

44. அண்மைக் காலத்தில் இலங்கையில் வாழும் தமிழர்கள் தங்கள் உயிருக்கும் உடைமைக்கும் பாதுகாப்பு இன்றி, சந்தித்து வரும் சொல்லொணாத் துயர் குறித்து இந்த அரசு ஆழ்ந்த கவலை கொண்டுள்ளது. மத்திய அரசின் வழிகாட்டியாகத் திகழும் திருமதி சோனியா காந்தி அம்மையார் அவர்களுக்கும் மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்களுக்கும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இது பற்றி எழுதியுள்ள கடிதங்கள், அக்கடிதங் களுக்கு அவர்கள் அளித்த பதில்கள் இலங்கைத் தமிழர்களுக்கு ஆறுதல் அளிப்பதாகவும்

## தமிழ்நாடு விவசாய - விவசாயத் தொழிலாளர் நலவாரியத் தலைவர் மற்றும் உறுப்பினர்கள் நியமனம்

திராவிட முன்னேற்றக் கழகத்தின் தேர்தல் அறிக்கையில் அறிவிக்கப்பட்டதற்கேற்ப முந்தைய அரசினால் கலைக்கப்பட்ட தமிழ்நாடு விவசாய–விவசாயத் தொழிலாளர் நல வாரியத்தை மீண்டும் அமைத்து அதற்குப் பாதுகாப்பு வழங்கும் வகையில் சட்டம் இயற்றப்பட்டது. அதன்படி அந்த வாரியத்திற்கு தலைவர் மற்றும் உறுப்பினர்களை பின்வருமாறு நியமித்து மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் 16.1.2007 அன்று அறிவித்தார்.

தலைவர் – திரு. ஐ. பெரியசாமி, வருவாய்த்துறை அமைச்சர்

**அலுவல்சாரா உறுப்பினர்கள் :**

திரு. கே.பி.இராமலிங்கம், நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர், திரு. பூதலூர் கலியமூர்த்தி, திரு. கீழானூர் ராஜேந்திரன், திரு. இல.க. சடகோபன், திரு. கே. பாலகிருஷ்ணன், திரு. வே. துரைமாணிக்கம், திரு. எஸ். செல்லமுத்து, திரு. பொன். குமார்.

**அலுவல் சார்ந்த உறுப்பினர்கள்:**

செயலாளர், வருவாய்த்துறை, செயலாளர், நிதித்துறை, செயலாளர், வேளாண்மைத்துறை, வருவாய் நிருவாக ஆணையர், தலைவர் (ம) மேலாண்மை இயக்குநர், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம், சர்க்கரைத்துறை ஆணையர், வேளாண் விற்பனை மற்றும் சந்தைக் குழு ஆணையர், நிலச் சீர்திருத்த ஆணையர்.

நம்பிக்கை ஊட்டுவதாகவும் இருக்கும் வேளையில், பல ஆண்டுகளாக நிலவி வரும் இலங்கைத் தமிழர்களின் இந்த வாழ்வாதாரப் பிரச்சினைக்கு வழிகாண இந்திய அரசு விரும்புகின்ற வகையில் பேச்சுவார்த்தைகள் மூலமாக அமைதியான அரசியல் தீர்வு காணப்பட வேண்டும் என்று இந்த அரசு வலியுறுத்துகிறது.

45. 1989ஆம் ஆண்டு பெண்களுக்குச் சமச் சொத்துரிமை அளிக்கும் சட்டத்தை இயற்றியும் 1996ஆம் ஆண்டில் முதன் முதலாக பெண்களுக்கு உள்ளாட்சி அமைப்புகளில் 33 சதவிகித இட ஒதுக்கீட்டை வழங்கியும் பெண்ணுரிமை காத்தது இந்த அரசுதான் என்பதை நீங்கள் அறிவீர்கள். இந்த முற்போக்குப் பயணத்தின் இலக்கான, நாடாளுமன்றம் மற்றும் சட்டப்பேரவைகளில் மகளிருக்கு 33 சதவிகித இட ஒதுக்கீடு குறித்த சட்ட முன்வடிவு இன்னும் நிறைவேற்றப்படாத நிலையில் உள்ளது. தேசிய வளர்ச்சிக் குழுக் கூட்டத்தில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஏற்கெனவே எடுத்துரைத்தவாறு, திருமதி சோனியா காந்தி அவர்கள் ஐக்கிய முற்போக்குக் கூட்டணியின் தலைவராக இருந்திடும் இந்தக் கால கட்டத்திலேயே இந்தச் சட்டம் நிறைவேற்றப்பட்டால் அது மிகப் பொருத்தமான நிகழ்வாக அமையும் என்பதைக் கருத்தில்கொண்டு, இதுகுறித்து விரைந்து முடிவெடுத்து பெண்ணுரிமையினை நிலைநாட்ட வழிவகுக்கும்படி இந்த அரசு மத்திய அரசை வலியுறுத்திக் கேட்டுக்கொள்கிறது.

46. சமூக நீதியை நிலை நாட்டுவதில் நீண்ட நெடுங்காலப் பாரம்பரியம் கொண்ட இந்த அரசு, இக்கொள்கையை அனைத்துத் துறைகளிலும் முழுமையாகச் செயல்படுத்தத் தொடர்ந்து பாடுபடும். இந்த அரசு பதவியேற்றவுடன், சிறுபான்மையினர் கல்வி நிறுவனங்கள் அல்லாத அரசு நிதியுதவி பெறாத அனைத்துத் தனியார் சுயநிதிக் கல்வி நிறுவனங்களில், தாழ்த்தப் பட்டோர், பழங்குடியினர், பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் ஆகியோருக்குக் கட்டாய இடஒதுக்கீடு வழங்கும் சட்டத்தை இயற்றியது. மேலும், மத்திய அரசின் உயர்கல்வி நிறுவனங்களில் இதர பிற்படுத்தப் பட்டவர்களுக்கு இடஒதுக்கீடு செய்யப்பட வேண்டும் என்பது குறித்து, தொடர்ந்து மேற்கொண்ட முயற்சிகளின் பயனாக, இதற்கான சட்டம் மத்திய அரசால் நிறைவேற்றப்பட்டது, சமூக நீதிக்கான போராட்டத்திற்குக் கிடைத்த மற்றுமொரு மகத்தான வெற்றியாகும். தனியார் நிறுவனங்களிலும் இடஒதுக்கீட்டு முறை பின்பற்றப்படத் தேவையான நடவடிக்கைகளை மத்திய அரசு மேற்கொள்ள வேண்டும் என்று இந்த அரசு வலியுறுத்துகிறது.

47. இவ்வரசு பொறுப்பேற்ற பின்னர், தந்தை பெரியார் அவர்களின் நெஞ்சிலுள்ள முள்ளை அகற்றி அவரது கனவினை நனவாக்கும் வகையில், இந்துக்களில் தகுதி பெற்ற அனைத்துச் சாதியினரும் இந்து சமயத் திருக்கோயில்களில் அர்ச்சகர் ஆகலாம் என்ற சமத்துவக் கொள்கையை நிலைநாட்டும் ஆணையை வெளியிட்டது. இதனை நடைமுறைக்குக் கொண்டு வருவது தொடர்பாக ஆலோசனைகள் வழங்குவதற்காக நீதியரசர் ஏ.கே.இராசன் அவர்கள் தலைமையில் அமைக்கப்பட்ட உயர்நிலைக்குழு தனது பரிந்துரைகளை அரசுக்கு வழங்கியது. இவ்வறிக்கையை ஆய்வு செய்து, உயர்நிலைக் குழுவின் பரிந்துரைகள் அனைத்தையும் ஏற்று அரசு ஆணை வெளியிட்டுள்ளது.

48. சிறுபான்மையினர் நலம் காத்து, மத நல்லிணக்கம் பேண கட்டாய மதமாற்றத் தடைச் சட்டம் நீக்கம், முன்னறிவிப்பின்றி அரசு அலுவலர்களை பணி நீக்கம் செய்ய வகை செய்த டெஸ்மா சட்டம் ரத்து, பெருந்தலைவர் காமராசர் அவர்களின் பிறந்தநாளை 'கல்வி வளர்ச்சி நாள்' ஆக காலமெல்லாம் இம்மாநிலம் கொண்டாடிப் போற்றிடுவதற்கான தனிச்சட்டம், தொழிற்கல்விப் பட்டப்படிப்புகளுக்கான நுழைவுத் தேர்வை நீக்கி, கிராமப்புற மாணவர்களின் நலன் காப்பதற்கான சட்ட முன்வடிவு என பதவியேற்ற முதல் எட்டு மாதங்களிலேயே, சமத்துவமும் சமநீதியும் தழைத்திட, பார்போற்றும் பல சட்டங்களை இயற்றி இந்த அரசு மேற்கொண்டுள்ள நடவடிக்கைகளை நாடும் ஏடும் பாராட்டுகின்றன.

49. மனிதக் கழிவை மனிதனே எடுத்துச் சுமக்கும் கொடுமையை அறவே அகற்றி, இந்தத் தொழிலில் ஈடுபட்டுள்ளோர் அனைவருக்கும் மறுவாழ்வு அளிக்க இந்த அரசு உறுதி பூண்டுள்ளது. இந்தத் தொழிலில் ஈடுபட்டு வருவதாகக் கண்டறியப் பட்டுள்ளவர்கள் வருவாய் ஈட்டக்கூடிய மாற்றுத் தொழில்களை மேற்கொள்ள ரூ.58.45 கோடி மதிப்பீட்டில் திட்டம் வகுக்கப்பட்டுள்ளது.

50. மத நல்லிணக்கச் சமுதாயம் காண விரும்பும் இந்த மதச்சார்பற்ற அரசு, மத நல்லிணக்கத்தைப் பேணிப் பாதுகாக்க உறுதி பூண்டுள்ளது. சிறுபான்மையினர் நலனில் மிகுந்த அக்கறை கொண்டுள்ள இந்த அரசு, பாரதப் பிரதமரின் பதினைந்து அம்சத் திட்டத்திலும், நீதியரசர் இராஜேந்தர் சச்சார் குழுவின் பரிந்துரைகளிலும் குறிப்பிடப்பட்டுள்ள சிறுபான்மையினர் முன்னேற்றத்திற்கான பிரதிநிதித்துவம் குறித்து ஆய்ந்து, அவர்களின் சமூகப் பொருளாதார மேம்பாட்டிற்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளும்.

51. திரையுலகுக்குப் பல சலுகைகளை அறிவித்ததோடு மட்டுமன்றி, திரைப்படங்களைக் காணவருவோர் பயன்பெறும் வகையில் திரையரங்குகளின் கட்டணத் தொகையை இந்த அரசு குறைத்துள்ளது. இந்தக் கட்டணக் குறைப்பு பொதுமக்கள் மீண்டும் திரையரங்குகளுக்குச் சென்று திரைப்படங்களைக் கண்டுகளிக்க வகை செய்ததோடு, திரைப்படத் தொழிலுக்கும் புத்துயிர் அளித்துள்ளது.

52. *நெற்றி வியர்வை நிலத்தில் விழப் பாடுபடும் உழவர்;*
*பட்ட கடன் பல கோடி முழுவதையும் தீர்த்து;*
*பசி தீர்க்கும் உணவுக்கும் அரிசி விலை அக்கணமே குறைத்து—*
*வாரம் இரு முட்டை சிறார்க்கு எனும் திட்டத்தை அளித்து,*
*யாரும் எதிர்பாரா பற்பல சாதனைகள் படைத்து*
*நாளும் நானிலச் செய்திகளை அறிந்திடவே நம்மவர்*
*வாழும் குடில்களிலும் வண்ணத் தொலைக்காட்சி அமைத்து,*
*கையகலத் தரிசு நிலமெனினும் கண்டிப்பாய் ஏழை உழவர்க்கே அளித்து,*
*காணி நிலம் வேண்டும் என்ற பாரதியின் கனவு பலித்திட வைத்து*
*களிப்பிலாடும் மயிலாய் கானம் பாடும் குயிலாய் மகிழ்ந்திட*
*கல்விக்கூடப் பிள்ளைகட்குக் கட்டணச் சுமை இறக்கி,*
*மூதாட்டி பெயரால் இருந்த முத்தான திருமணத் திட்டம்—*
*அதற்கும் உயிர் கொடுத்து ஐயாயிர ரூபாய் சேர்த்து*
*பரிவுடனே ஏழைப் பெண் மணவிழாவுக்கு பதினைந்தாயிரம் தந்து,*
*படித்து விட்டு வேலையின்றி காத்திருக்கும் இளைஞர்க்கு;*
*பணி கிடைக்கும் வரையில் திங்கள்தோறும் பண உதவி புரிந்து*

*கருவுற்ற பாவையர்க்குக் கருணைத் தொகை ஆறாயிரம்;*

*கலந்தாய்வு முறையினிலே இடமாற்றம் ஆசிரியர்க்கு!*

*முதியோர் உதவித் தொகை மேலும் அதிகரிப்பு,*

*முதற்கட்டமாக மூன்று இலட்சம் பேருக்கு வேலைவாய்ப்பு,*

*அடுக்களையில் தாய்மார்கள் அகமகிழ*

*எரிவாயு இணைப்புடனே இலவச அடுப்பு,*

*உதவாதினி உழவர் சந்தை என உதறியதை–*

*உடனடியாக புதுப்பித்து உழவர், நுகர்வோரை வாழ்வித்து,*

*ஊதியம், உழைப்போர்க்கு உயர்த்தி, ஊக்கப்படுத்தி*

*போதிய பயன்களனைத்தும் மழையெனப் பொழிந்துள்ள*

*இந்த அரசு,*

*ஆண்டு கொண்டிருந்தால் மட்டும்*

*போதுமென்றெண்ணாமல்*

*யாண்டும் நமது பணி நாட்டாட்சியில் மட்டுமன்றி,*

*நாடு, நகரம், பேரூர், சிற்றூர் – காடு மேடு கடந்து –*

*பட்டி தொட்டி எங்கணும்*

மக்கள் தொண்டே மகேசன் தொண்டு எனத் தொடர்ந்து நடக்கும் எனும் உறுதியோடு, இந்தச் சிறப்புறு திட்டங்கள் செம்மையாய் நிறைவேற ஆதரவளித்தும், ஒத்துழைத்தும் இடித்துரைக்கும் கருத்துக்களை எடுத்துரைத்தும், மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் மு.கருணாநிதி அவர்கள் தலைமையிலான இந்த ஆட்சிக்கு கரம் கொடுத்து உரம் அளிக்கும் அவையில் உள்ளோர்க்கும் அருமைத் தமிழ்நாட்டின் அனைத்துப் பிரிவு மக்களுக்கும் நன்றி கூறி இவ்வுரையை நிறைவு செய்கிறேன்.

**வணக்கம்**

**ஜெய்ஹிந்த்**


* * *

# மாணவ – மாணவிகளுக்கு தண்டனை வழங்கும் கல்வி விதி பிரிவு 51 நீக்கம்

தமிழ்நாடு கல்வி விதிகளில் விதி 51 என்பது பள்ளிகளில், வேண்டுமென்றே பொய் கூறுவது, ஆபாசமான வார்த்தைகளைப் பயன்படுத்துவது போன்றவைகளை நடைமுறையாகக் கொண்டுள்ள மாணவர்களுக்கு உடல்ரீதியாகத் தண்டனை வழங்குவதை அனுமதிக்கிறது.

அண்மைக்காலத்தில், சில பள்ளிகளில் மாணவர்களுக்குக் கடுமையான தண்டனைகள் வழங்கப்படுவதாகப் பெற்றோர், பொதுமக்கள், தொண்டு நிறுவனங்கள் ஆகியவைகள் மூலம் அரசுக்குப் புகார்கள் வந்துள்ளன. ஊடகங்களிலும் இத்தகைய சம்பவங்கள் எடுத்துரைக்கப் படுகின்றன. இத்தகைய தண்டனைகள் காரணமாக உணர்ச்சி வயப்படும் மாணவ மாணவிகளில் சிலர் தற்கொலை செய்து கொள்ளும் அளவுக்கு வந்து விடுகின்றனர். இத்தகைய போக்குகள் முதலமைச்சர் கலைஞர் அவர்களின் கவனத்திற்கு வந்ததைத் தொடர்ந்தும், பள்ளிக் கல்வித்துறையின் ஓய்வு பெற்ற முன்னாள் இயக்குநர் திரு.அ.முத்துகிருஷ்ணன் அவர்களைத் தலைவராகவும், பத்ம சேஷாத்திரி குழும கல்வி நிறுவனங்களின் இயக்குநர் திருமதி. ஒய்.ஜி. பார்த்தசாரதி அவர்களைத் துணைத் தலைவராகவும் கொண்ட உயர்நிலைக் குழு வழங்கியுள்ள பரிந்துரைகளின் அடிப்படையிலும்,

பள்ளிகளில் முறைகேடாக நடக்கும் மாணவ மாணவிகளுக்குத் தண்டனை வழங்க வகை செய்திடும் தமிழ்நாடு கல்வி விதிகளில் உள்ள பிரிவு 51 என்பது நீக்கப்படுகிறது. என அரசு அறிவிக்கிறது. ■



# திறமையான நிருவாகத்தால் அரசின் நிதிநிலைச் சமன்பாடு சீராக உள்ளது

*மேதகு ஆளுநர் அவர்கள் ஆற்றிய உரையின்*
*மீதான விவாதத்திற்கு சட்டப்பேரவையில்*
*மாண்புமிகு தமிழக முதலமைச்சர்*
***கலைஞர் மு. கருணாநிதி** அவர்கள்*
*ஆற்றிய பதிலுரை (27.01.2007)*

கடந்த ஐந்து நாட்களாக இந்த மாமன்றத்தில் இதுவரையிலே ஆளுநர் உரையின் மீது 37 பேர் உரையாற்றி 38ஆவது நபராக நான் என்னுடைய கருத்துக்களை எடுத்து வைக்க விரும்புகின்றேன்.

ஆளுநர் உரையிலே காங்கிரஸ் கட்சியின் சார்பாக முதல் குரல் எழுப்பிய அருமை நண்பர் பீட்டர் அல்போன்ஸ் அவர்கள் – எப்பொழுதுமே அவருடைய உரை இனிப்பாக இருக்கும், கேட்பதற்கும் ரசிப்பதற்கும். அந்த இனிப்பு சில நேரங்களில் கற்கண்டை மெல்லுவதைப்போல இருக்கும். அதாவது கொஞ்சம் கரடுமுரடாகவும் இருக்கும். ஆனால் இனிப்பாக இருக்கும். அந்த வகையில் அவர்களுடைய உரையை அன்றைக்கு ஆற்றி இந்த அரசுக்கு தரவேண்டிய முன்னறிவிப்புகளை எச்சரிக்கைகளை எடுத்துரைத்திருக்கிறார்கள். அதற்கு நான் நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

கடல்மடை திறந்தாற்போல நம்முடைய கழக உறுப்பினர்களுடைய சார்பில் ஆளுநர் உரையைத் தொடங்கி வைத்துப் பேசிய கருப்பசாமி பாண்டியன் அவர்கள் பல கோரிக்கைகளை எடுத்து வைத்து அவருடைய உரையை நிகழ்த்தி இருக்கின்றார்.

இன்றைக்கு பாட்டாளி மக்கள் கட்சியினுடைய சார்பில் உரையாற்றிய அந்தக் கட்சியினுடைய சட்டமன்றத்தினுடைய தலைவர் திரு. ஜி. கே. மணி அவர்களும், காங்கிரஸ் கட்சியினுடைய சார்பில் உரையாற்றிய நம்முடைய சுதர்சனம் அவர்களும் இந்த அரசுக்குத் தேவையான அறிவுரைகளையெல்லாம் அனுபவரீதியாக எடுத்து வைத்திருக்கிறார்கள். இந்த அரசுக்கு எந்த ஆபத்தும் வந்து

விடக்கூடாது என்பதில் காங்கிரஸ் கட்சியினுடைய சட்டமன்ற தலைவர் சுதர்சனம் அவர்கள் காட்டிய அக்கறை – இப்பொழுது அமைதியாக இருக்கிற தமிழகத்தில் அமளிகளை உருவாக்கு வதற்காக ஏதேதோ செய்திகளை சிலர் வெளியிடுவது பற்றியதாகும்.

அந்தச் செய்திகளின் மூலமாக தமிழகத்திலே மீண்டும் இலங்கை யினுடைய தீவிரவாதிகள் படையெடுத்திருக்கிறார்களோ என்கின்ற அச்சத்தை உருவாக்க, பீதியைக் கிளப்ப பெருமுயற்சி நடைபெறுகிறது என்றெல்லாம் இங்கே எடுத்துக்காட்டினார்கள்.

முக்கியமாக, இலங்கைப் பிரச்சினையைப் பற்றி நான் பேசும்போது, இலங்கையைச் சேர்ந்த தமிழ் அகதி சிவா என்கின்ற சிவகரன் தமிழகத்திலே மண்டபம் முகாமை விட்டு வெளியே வந்து சென்னை, திருச்சி மற்றும் தூத்துக்குடி ஆகிய இடங்களிலே தங்கியிருந்தார். அவர் நடவடிக்கைகளை கண்காணித்ததில் அவர் மேலும் சிலரோடு சேர்ந்து கடத்தல் நடவடிக்கையில் ஈடுபட்டதாக தெரியவந்தது.

23.1.2007 அன்று இந்த சிவகரன் தன் கூட்டாளிகள் 7 பேரோடு (5 இலங்கைத் தமிழர்கள் மற்றும் தமிழ்நாட்டைச் சேர்ந்த 3 பேர்) சென்னை பெரியமேட்டில் ஒரு லாரியில் சந்தேகத்திற்கு இடமான பொருள்களை ஏற்றிக் கொண்டிருக்கும்போது க்யூ பிரிவு போலீசார் சோதனை செய்ததில் ஒரு மினி லாரியில் 8 மில்லி மீட்டர் விட்டம் கொண்ட 2,000 கிலோ எடையுள்ள இரும்பு குண்டுகள் 40 சாக்கு மூட்டைகளில் வைத்திருந்தது கண்டுபிடிக்கப்பட்டது. மேலும் 5 இலட்சம் ரூபாய் ரொக்கம் பணம், மினி லாரி, ஒரு டாடா இன்டிகா கார் மற்றும் 3 செல்போன்கள் இவர்களிடமிருந்து கைப்பற்றப்பட்டது என்றும் செய்தி தரப்பட்டிருக்கிறது.

விசாரணையில் மேற்படி இரும்பு குண்டுகள் மும்பையிலிருந்து லாரி சர்வீஸ் மூலமாகத் தருவிக்கப்பட்டது என்று தெரிவித்தார்கள். மேலும் நடந்த விசாரணையில் 60 சாக்கு மூட்டைகளில் இரும்பு குண்டுகள் இலங்கைக்குக் கடத்தப்படுவதற்காக தூத்துக்குடியிலே வசிக்கும் பிரபாகரன் என்கிற வேலுச்சாமி என்பவர் ஏற்பாடு செய்த வீட்டில் இருப்பதாக கிடைத்த தகவல்படி அவர் அடையாளம் காட்டிய டேவிஸ்புரம் என்ற இடத்தில் உள்ள வாடகை வீட்டை சோதனை செய்ததில் தலா 50 கிலோ எடை கொண்ட 60 சாக்கு மூட்டைகளில் இரும்பு குண்டுகள் கைப்பற்றப்பட்டு எதிரி பிரபாகரன் என்கிற வேலுச்சாமி 24.1.2007 அன்று கைது செய்யப்பட்டுள்ளார். இது தொடர்பாக வழக்குப் பதிவு செய்யப்பட்டு, கைது செய்யப்பட்ட 9 எதிரிகளும் நீதிமன்ற காவலுக்கு அனுப்பப்பட்டு சென்னை மத்திய சிறையில் அடைக்கப்பட்டுள்ளார்கள். க்யூ பிரிவு போலீசார் மராட்டிய மாநிலத்திற்கும், புலன் விசாரணைக்காக சென்றிருக்கிறார்கள்.

இந்தச் செய்தியைத்தான் நம்முடைய சுதர்சனம் அவர்கள் பேசும்போது, இந்த அபாயத்தை மேலும் வளர விடக்கூடாது; அரசு எச்சரிக்கையாக இருக்க வேண்டும் என்று தனக்கே உரிய பாச உணர்வோடு இங்கே சுட்டிக் காட்டியிருக்கின்றார்.

நான் அவருக்கும், இந்த மாமன்றத்திலே இருக்கின்ற எல்லா தோழமைக் கட்சிகளுடைய உறுப்பினர்களுக்கும் சொல்லிக் கொள்வேன், திராவிட முன்னேற்றக் கழக அரசு இதுபோன்ற வன்முறைகளை நிச்சயமாக அனுமதிக்காது என்பதை நான் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

இலங்கைப் பிரச்சினையிலே ஒரு சுமூகமான முடிவு காண வேண்டும் என்று எல்லோரும் எண்ணுகிற நேரத்தில் நடந்தவைகள் நடந்தவைகளாக இருக்கட்டும், நடப்பவைகள் நல்லவைகளாக இருக்கட்டும் என்கிற அளவிற்கு பலர் இன்றைக்கு சிந்திக்கின்ற இந்த கால கட்டத்தில் இது போன்ற செய்திகள் பின்னடைவைத்தான் அவர்களுக்கு ஏற்படுத்தும் என்பதை நான் இங்கே சுட்டிக் காட்டாமல் இருக்க முடியாது.

சில தகவல்கள் இங்கே கூறப்பட்டன. அதில் குறிப்பாக நம்முடைய சுதர்சனம் அவர்கள் சொன்னார்கள், எனக்கே அதிர்ச்சியாக இருந்தது. வேறு மாநிலங்களிலே சுதந்திரப் போராட்ட வீரர்களுக்கெல்லாம் அதிக தொகை வழங்கப்படுகிறது; ஆனால் இங்கே 500 ரூபாய் தான் வழங்கப்படுகிறது என்று சொன்னார்கள். அவருக்கு யாரோ ஒரு சுதந்திரப் போராட்ட வீரர் சுதந்திரமாக ஒரு தவறான கருத்தை சொல்லியிருப்பார் என்று கருதுகின்றேன்.

மாநில அரசின் ஒய்வூதியம் பெறுகின்ற விடுதலைப் போராட்ட வீரர்களுடைய எண்ணிக்கை 1,112. அவர்களுக்கு தரப் படுகின்ற ஒய்வூதியம் 3,000 ரூபாய். அஃதன்னியில் மருத்துவப்படி 15 ரூபாய் தரப் படுகின்றது. அந்த ஒய்வூதியம் பெறுகின்ற விடுதலைப் போராட்ட வீரர்கள் இறந்துவிட்டால் அவர்களுடைய வாரிசுதாரர்களுக்கு அவர்களுடைய எண்ணிக்கை 2,114 அவர்களுக்கு 1,500 ரூபாய் தரப்படுகிறது. 500 ரூபாய் அல்ல. தயவுசெய்து அவர்கள் திருத்திக் கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்கின்றேன். இன்னும் கொஞ்சம் அதிகம் வேண்டுமென்றால் பட்ஜெட் நேரத்திலே நம்முடைய நிதியமைச்சர் அதுபற்றி கவனிப்பார் என்று நான் தெரிவித்துக் கொள்கின்றேன். இப்போது உள்ள நிலைமையை நான் அவருக்கு தெரிவித்துக் கொள்கிறேன்.

இன்னொரு தவறான தகவல், நம்முடைய ஜி.கே. மணி அவர்கள் பேசும்போது சொன்னார், கூட்டுறவு அமைப்புகளில் பணியாற்றும்

பணியாளர்களுக்கு போனஸ் வழங்கப்படவில்லை என்று குறிப்பிட்டார். கூட்டுறவு அமைப்புகளிலே பணியாற்றுகின்ற அலுவலர்களுக்கு உரிய போனஸ் அல்லது பொங்கல் பரிசு வழங்கப்பட்டு இருக்கிறது என்பதை நான் அவருக்கு தெரிவித்துக் கொள்கின்றேன். அவர் இப்போது இல்லாத காரணத்தால் இதுபற்றி கேட்டு வேல்முருகன் அவரிடத்திலே சொல்ல வேண்டும் என்று நான் வேண்டி கேட்டுக்கொள்கின்றேன்.

இப்படி சில தகவல்கள் திருத்தப்பட வேண்டியவைகளாக இங்கே சொல்லப்பட்டாலும் கூட அந்தத் தகவல்களிலே உண்மையிருக்குமானால் அவைகளை நிச்சயமாக கவனித்து இந்த அரசு ஏற்ற நடவடிக்கைகளை எடுக்கும் என்று இங்கே நான் குறிப்பிட விரும்புகின்றேன்.

இன்னொன்றும் குறிப்பிட்டார், மறைமலை அடிகளாரை நாம் மறந்துவிட்டதைப் போல நம்முடைய ஜி.கே. மணி அவர்கள் இங்கே சொன்னார்கள். இல்லை. மறைமலை அடிகளாருடைய புத்தகங்களை எல்லாம் இந்த அரசு பெற்று அதற்கான ஒரு உரிய தொகையை, நல்ல தொகையை ஏற்கெனவே வழங்கி இருக்கிறோம்.

1997 ஆம் ஆண்டு கழக அரசு இருந்தபோது மறைமலை அடிகளுடைய நூல்களை நாட்டுடைமையாக்கி அவரது மரபுரிமையாளர்களுக்கு 30 இலட்சம் ரூபாய் வழங்கியிருக்கின்றது. தற்பொழுது மறைமலை அடிகளுடைய பெயர்த்தி சுந்தரத்தம்மையார் வைத்திருக்கும் நூல்களைப் பெற்றுக் கொண்டு 1 இலட்சம் ரூபாயும், அவருடைய மருத்துவச் செலவிற்கு 50 ஆயிரம் ரூபாயும் வழங்கியதோடு, சுந்தரத்தம்மையாரின் மகள் கலைச்செல்விக்கு அரசுப்பணியும் வழங்கியிருக்கிறோம் என்பதை நான் தெரிவித்துக் கொள்கின்றேன்.

மறைமலை அடிகள் நினைவைப் போற்றி இந்த அரசு அவரது நினைவாக அஞ்சல் தலை வெளியிட, ஆவன செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொண்டார், நிச்சயமாக ஆவன செய்யப்படும் என்பதையும் நான் தெரிவித்துக் கொள்கின்றேன்.




பள்ளிக் கல்வித்துறையில் மேல்நிலைப் பள்ளிகளில் 11 மற்றும் 12ஆம் வகுப்பு மாணவர்களுக்கு கணினிக் கல்வி முதற்கட்டமாக 1999–2000ஆம் கல்வி ஆண்டு முதல் 666 அரசு மேல்நிலைப்பள்ளிகளிலும், இரண்டாம் கட்டமாக 2000–2001 கல்வியாண்டில் 531 அரசு மேல்நிலைப் பள்ளிகளிலும் தமிழ்நாடு மின்னணுவியல் நிறுவனத்தால் நியமிக்கப்பட்ட ஒப்பந்தக்காரர்கள் மூலம் ஒப்பந்த அடிப்படையில் நியமிக்கப்பட்ட கணினி ஆசிரியர்களால் செயல்படுத்தப்பட்டு வருகிறது. அனைத்து அரசு/ நகராட்சி/ மாநகராட்சி மேல்நிலைப் பள்ளிகளிலும் கணினிக் கல்வித் திட்டத்தை சீரிய முறையில் செயல்படுத்தும் வண்ணம் தற்போதுள்ள 1,880 அரசு/ நகராட்சி/ மாநகராட்சி மேல்நிலைப் பள்ளிகளிலும் பள்ளி ஒன்றுக்கு ஒரு கணினி பயிற்றுநர் வீதம் 1,880 கணினி பயிற்றுநர் பணியிடங்கள் தோற்றுவித்து ஆணையிடப்பட்டுள்ளது. மேலும் கணினிக் கல்வித் திட்டத்தை செயல்படுத்த ஏதுவாக தமிழ்நாடு மின்னணுவியல் நிறுவனம் மூலம் 118 கோடியே 15 இலட்சத்து 31 ஆயிரம் ரூபாய் செலவில் கணினி மற்றும் கணினி சார்ந்த பொருள்கள் வாங்கவும், பள்ளிகளில் அவற்றை நிறுவும் பொறுப்பை இந்நிறுவனத்திற்கே வழங்கவும் ஆணை வெளியிடப்பட்டுள்ளது. இதன் மூலம் வரும் கல்வியாண்டு முதல் ஊரக மற்றும் நகர்ப்புறங்களிலுள்ள அரசு/ நகராட்சி/ மாநகராட்சி மேல்நிலைப் பள்ளிகளில் பயிலும் மாணவர்கள் பெரிதும் பயனடைவர்.

★ ★ ★

**ஒகேனக்கல் திட்டம்**

ஜி.கே. மணி அவர்கள் மிக முக்கியமான ஒகேனக்கல் திட்டத்தைப் பற்றி இங்கே எடுத்துச் சொன்னார். ஜப்பான் பன்னாட்டு கூட்டுறவு நிறுவனத்தின் நிதியுதவி அதற்காகக் கோரப்பட்டுள்ளது. இந்த வாரம்தான் ஜப்பான் நாட்டு நிபுணர்கள் தருமபுரி மாவட்டம் சென்று திட்ட ஆய்வை மேற்கொண்டுள்ளார்கள். மைய அரசு இந்தத் திட்டத்திற்கு ஜப்பான் நாட்டு நிதியுதவியைப் பெற மிகுந்த முன்னுரிமை அளித்து ஜப்பான் அரசிற்குத் தெரிவித்துள்ளது. ஜப்பான் அரசிற்குத் தெரிவித்துள்ள இந்தச் செய்தி, ஜப்பான் நாட்டு நிதியுதவி கிடைக்க வாய்ப்புகளை அதிகமாக்கி இருக்கிறது. எனினும், ஜப்பான் நிதியுதவி ஏதேனும் ஒரு காரணத்தால் கிடைக்காவிட்டால் அரசு வேறு நிதி ஆதாரம் பெற்று இத்திட்டத்தை நிச்சயமாக நிறைவேற்றும் என்பதை திரு.மணி அவர்களுக்கு நான் இங்கே உறுதியாக தெரிவித்துக் கொள்கின்றேன்.

அவர்கள் கேட்டுக் கொண்டபடி, மக்கள் தொகை கணக்கெடுப்புத் திட்டத்தில் பணியாற்றிய தற்காலிகப் பணியாளர்களுக்கு உச்சநீதிமன்றத் தீர்ப்பின்படி அரசுப் பணி வழங்கப்பட்டு வருகிறது என்பதையும் நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகின்றேன். அவர்களுக்குப் பணி கொடுக்காமல் இல்லை; பணி வழங்கப்பட்டு வருகிறது.

நம்முடைய ஊராட்சி, நகராட்சி மன்றத் தேர்தல்கள் நடந்ததைப் பற்றியும், பாப்பாபட்டி, கீரிப்பட்டி போன்ற இடங்களில் ஆதிதிராவிட மக்கள் பெற இருந்த உரிமை கடந்த காலத்திலே பெறமுடியாமல் போய் இப்பொழுது இந்த ஆட்சியில் இங்கே வீற்றிருக்கின்ற எல்லா கட்சியினுடைய தலைவர்களுடைய ஒத்துழைப்போடு அங்கே தேர்தல் நடைபெற்று, அந்தத் தேர்தலிலே வெற்றி பெற்றவர்கள் இப்பொழுது அங்கே அந்த கிராம ஆட்சியை நடத்திக் கொண்டிருக்கிறார்கள்.

*“நம்முடைய ஊராட்சி, நகராட்சி மன்றத் தேர்தல்கள் நடந்ததைப் பற்றியும், பாப்பாபட்டி, கீரிப்பட்டி போன்ற இடங்களில் ஆதிதிராவிட மக்கள் பெற இருந்த உரிமை கடந்த காலத்திலே பெறமுடியாமல் போய் இப்பொழுது இந்த ஆட்சியில் இங்கே வீற்றிருக்கின்ற எல்லா கட்சியினுடைய தலைவர்களுடைய ஒத்துழைப்போடு அங்கே தேர்தல் நடைபெற்று, அந்தத் தேர்தலிலே வெற்றி பெற்றவர்கள் இப்பொழுது அங்கே அந்த கிராம ஆட்சியை நடத்திக் கொண்டிருக்கிறார்கள்.”*

அது மாத்திரமல்ல, ஆதிதிராவிட மக்களுக்காக இந்த அரசு எடுத்த முயற்சி அதோடு மாத்திரம் நிற்கவில்லை, உங்களுக்கு ஒன்றைச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

தேனி மாவட்டத்தில், தேனி மாவட்ட கவுன்சிலுக்கு தேர்ந்தெடுக்கப்பட வேண்டியவர் ஒரு ஆதிதிராவிடர். தனித்தொகுதி அது. தேர்தல் நடந்தது. தி.மு.க 6 பேராக இருந்தார்கள். 4 பேர் அ.தி.மு.க. தி.மு. கழகத்தின் சார்பில் 6 பேர் வெற்றி பெற்றிருந்த போதிலும், அதிலே ஒருவர் கூட தாழ்த்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்தவர் இல்லை. ஆனால் அ.தி.மு.க. சார்பில் வெற்றி பெற்ற 4 பேரில் தாழ்த்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்தவர் வாக்களிக்காவிட்டால் அங்கே தேர்ந்தெடுக்கப்பட வேண்டிய ஒரு ஆதிதிராவிட தோழர் தேர்ந்தெடுக்கப்பட முடியாது. இந்த நிலைமையிலே தேர்தல் ஒத்திவைக்கப்பட்டது.

இந்தச் செய்தி பத்திரிகையிலே வந்த பிறகு, நண்பர் திருமாவளவன் அவர்கள் என்னைச் சந்தித்து, நானும் அவரும் இதுபற்றி பேசினோம். நான் அவரிடத்திலே சொன்னேன், யாரும் கவலைப்பட வேண்டாம். ஒரு ஆதிதிராவிடர் மாவட்ட கவுன்சிலுக்கு தலைவராக வருவதை நாம் யாரும் இந்தச் சூழலில் நிறுத்திவிடக் கூடாது. எனவே தி.மு.க தனது ஓட்டுக்களை அவருக்கு போடத் தயாராக இருக்கிறது என்று சொல்லி அ.தி.மு.க.வைச் சேர்ந்த ஆதிதிராவிட தோழருக்கு தி.மு.க.வுடைய 6 ஓட்டுக்களைப் போட்டு அவர் இன்றைக்கு தேனி மாவட்டத்தினுடைய பஞ்சாயத்து குழுத் தலைவராக ஆகியிருக்கிறார் என்பதையும் நான் இங்கே தெரிவிக்க விரும்புகின்றேன்.

அரியலூர் மாவட்டத்தைப் பற்றி மணி அவர்கள் சொன்னார்கள், மாவட்டத்தை பிரித்ததற்காக மகிழ்ச்சி தெரிவித்தார்கள். ஆனால் இன்னும் அதிகாரிகள் வேலையைத் தொடங்கவில்லை என்றார்கள். மணி அவர்களுக்குத் தெரியாததல்ல, இப்பொழுது தேர்தல் ஆணையத்தின் சார்பாக தொகுதிகள் பிரித்துக் கொண்டிருக்கிற காரணத்தால் அது பூரணத்துவம் பெற்ற பிறகுதான், அந்தப் பணிகள் நடக்க முடியும். அது விரைவிலே முடிந்துவிடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

## சென்னையில்
## 20 முக்கியச் சாலை சந்திப்புகளில்
## உள்சுற்று இணைப்புத் தொலைக்காட்சி
## மூலம் கண்காணிப்பு

சென்னையில் மாநகரச் சாலைகளில் போக்குவரத்து விதிகள் முறையாகக் கடைப்பிடிக்கப்படுகின்றனவா என்பதைக் கண்காணித்திட முக்கியச் சாலை சந்திப்புகளாக உள்ள 1) போர் நினைவுச் சின்னம், 2) தலைமைச் செயலக வெளிப்புறவாயில், 3) கத்திப்பாரா சந்திப்பு, 4) வள்ளுவர் கோட்டம் சந்திப்பு, 5) அண்ணா சிலை சந்திப்பு, 6) வீல்ஸ் இந்தியா கம்பெனி சந்திப்பு, 7) பெரியார் சிலை சந்திப்பு, 8) வேளச்சேரி விஜயநகர் பேருந்து நிலைய சந்திப்பு, 9) மத்திய கைலாஷ் சந்திப்பு, 10) ஹால்டா சந்திப்பு, 11) ராஜ்பவன் முதன்மை வாயில் சந்திப்பு, 12) எஸ். ஆர்.பி.டூல்ஸ் கம்பெனி சந்திப்பு, 13) எஸ்.ஐ.ஈ.டி. கல்லூரி – செனடாப் சாலை சந்திப்பு, 14) 100 அடி சாலை – வடபழனி சாலை சந்திப்பு, 15) போரூர் சந்திப்பு, 16) அசோக் பில்லர் சந்திப்பு, 17) அண்ணாநகர் ரவுண்டானா சந்திப்பு, 18. எஸ்.என்.செட்டி சாலை – சுங்கச்சாவடி சந்திப்பு, 19) விமான நிலையச் சாலை சந்திப்பு, 20) கிரீன்வேஸ் சாலை சந்திப்பு ஆகிய இடங்களில் 2 கோடியே ஒரு இலட்சம் ரூபாய் செலவில் உள்சுற்று இணைப்புத் தொலைக்காட்சிப் பெட்டிகள் அமைக்கப்படும் என மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் மு.கருணாநிதி அவர்கள் 2.2.2007 அன்று அறிவித்துள்ளார்.

ஏப்ரல் மாதத்திற்குள் அது முடிந்துவிடும். முடிந்தபிறகு அரியலூர் மாவட்டம் செயல்படத் தொடங்கும் என்பதை நான் இங்கே தெரிவித்துக் கொள்கின்றேன்.

பிற மாநிலங்களிலே உள்ள பள்ளிகளில் தமிழ்ப் பாடம் படிக்கும் மாணவர்களுக்குப் பாடநூலும், தமிழ்வழிக் கல்வி படிக்கும் மாணவர்களுக்கு சம்மந்தப்பட்ட பாடநூல்களும், தமிழ்நாடு பாடநூல் கழகம் மூலம் இலவசமாக வழங்கப்படுகிறது. அவர்களுக்கு கிடைக்கவில்லையே என்ற கவலை மணி அவர்களுக்குத் தேவையில்லை. இப்பொழுது வழங்கப்பட்டுக் கொண்டிருக்கிறது. அதிலே ஏதாவது தயக்கமோ, சுணக்கமோ இருந்தால், தெரிவித்தால் உடனடியாக சம்மந்தப்பட்ட அமைச்சர் நடவடிக்கை எடுப்பார் என்றும் நான் தெரிவித்துக் கொள்கின்றேன்.

நம்முடைய காங்கிரஸ் கட்சியினுடைய தலைவர் இங்கே சுட்டிக்காட்டியதைப்போல எதிர்க்கட்சியின் சார்பாக இங்கே யாரும் கடந்த 5, 6 நாட்களாக அவையிலே நடவடிக்கையிலே கலந்து கொள்வதில்லை, வந்து கையெழுத்துப் போட்டுவிட்டு வாங்க வேண்டியதை வாங்கிக் கொண்டு போய் விடுகிறார்கள். நான் வாங்க வேண்டியது என்று சொல்வது, இன்றைக்கு என்னென்ன குறிப்புகள் அவையிலே வைக்கப்படுகின்றன, உறுப்பினர்களுக்கு தரப்படுகிறது என்ற முறையிலே வாங்கிக் கொண்டு போகிறார்கள் என்று சொன்னேன். தவறாக யாரும் கருதிக் கொண்டு சிரித்தால் அந்த சிரிப்புக்கு நான் பொறுப்பாளி அல்ல.

இந்த 8 மாத காலத்தில், இந்த அரசு மக்களுக்கு எதுவும் செய்யவில்லை. அதையெல்லாம் தொகுத்துத்தான் எதுவும் செய்யாத சர்க்கார் இது, செய்யாததையெல்லாம் தொகுத்துத்தான் இந்த அவையிலே ஆளுநர் உரை என்ற பெயரால் வெளியிட்டு இருக்கிறார்கள். இதை குப்பைத் தொட்டியிலே தான் போட வேண்டும் என்று எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் பேசியிருக்கின்றார். அறிக்கை வெளியிட்டிருக்கின்றார். பேசியிருந்தால் கூட பேசவில்லை என்று மறுத்து விடலாம். அறிக்கையே அச்சடித்து வெளியிடப்பட்டிருக்கிறது. நான் குப்பைத் தொட்டியை இழிவாகக் கருதவில்லை.

நான் 15 ஆண்டுகளுக்கு முன்பு 'குப்பைத் தொட்டி' என்றே ஒரு சிறுகதை எழுதி அந்தக் கதையை ஆங்கிலத்தில், மலையாளத்தில், தெலுங்கில், இந்தியில் இல்லஸ்ட்ரிடேட் வீக்லி வரையிலே மொழிபெயர்க்கப்பட்டு இந்தியா முழுவதும் பரவிய கதை 'குப்பைத்தொட்டி' என்ற அந்தக் கதை. ஒரு வேளை அந்தக் குப்பைத் தொட்டியிலே இதைப் போடவேண்டும் என்றார்களோ என்னவோ எனக்குத் தெரியாது. நான் அதற்காகக் கவலைப்படுவதில்லை. ஆனால் எனக்குள்ள ஒரே ஒரு வருத்தம். இந்த ஆளுநர் உரையில் என்னுடைய வாசகங்கள் மாத்திரம் அல்ல, அறிஞர் அண்ணா அவர்களுடைய வாசகம் இந்திய அரசியல் சட்டத்தை மாற்ற வேண்டும், திருத்த வேண்டும், புதிய சிந்தனை வேண்டும் என்றெல்லாம் 40 ஆண்டுகளுக்கு முன்பு மாநிலங்களவையிலே அண்ணா பேசியதை இதிலே தொகுத்திருக்கிறோம். அதையும் சேர்த்து குப்பைத்தொட்டியிலே போடுங்கள் என்று அண்ணா பெயரை கட்சிக்கு வைத்துக் கொண்டிருக்கிறவர்கள் சொன்னார்களே என்பதை எண்ணும்போது எனக்கு

வேதனையாக இருக்கின்றது. இதை நான் மக்களுடைய தீர்ப்புக்கு விட்டுவிடுகின்றேன்; நான் மனதைக் குழப்பிக் கொள்ள விரும்பவில்லை.

எட்டு மாத காலத்திலே தி.மு.க. ஆட்சியில் எதுவும் செய்யவில்லையா? என்னென்ன செய்யப்பட்டிருக்கிறது என்பதை நீங்களெல்லாம் சொல்லியிருக்கின்றீர்கள். இருந்தாலும்கூட, நானும் பேசி பதிலுரையிலே குறிப்பிட்டு, அவற்றையெல்லாம் பதிய வைக்க வேண்டும் என்று விரும்புவது இயற்கைதான்.

7,000 கோடி ரூபாய் கூட்டுறவுக் கடன் அறவே தள்ளுபடி செய்யப்பட்டது. பயன் பெற்றவர்கள் 22 இலட்சத்து 30 ஆயிரத்து 111 பேர்.


நடப்பாண்டு பயிர்க்கடன் வட்டி விகிதம் 7 விழுக்காடாகக் குறைப்பு. அதனால் பயன்பெற்றோர் 4 இலட்சத்து 22 ஆயிரத்து 872 பேர்.

நடப்பாண்டில் விவசாயக் கடன்களுக்கு ஆயிரம் கோடி ரூபாய் ஒதுக்கீடு. இந்த ஆண்டு புதிதாக விவசாயக் கடன் பெற்றவர்கள் 4 இலட்சத்து 22 ஆயிரத்து 872 பேர். வழங்கப்பட்ட கடன் தொகை 818 கோடி ரூபாய்.

**விவசாயிகளுக்கும், விவசாயத் தொழிலாளர்களுக்கும் சமூகப் பாதுகாப்பு**

விவசாயிகளுக்கும், விவசாயத் தொழிலாளர்களுக்கும் சமூகப் பாதுகாப்பு மற்றும் நல உதவிச் சட்டம், 22.2.2007 அன்று தஞ்சை மாவட்டத்திலே தொடங்க இருக்கிறது. நான் சென்று தொடங்கி வைக்க இருக்கின்றேன். இந்தத் திட்டம் ஏதோ அ.தி.மு.க. ஆட்சிக் காலத்தில் ஒரு கோடி பேருக்குமேல் வழங்கப்பட்டது என்றும், இப்போது 66 இலட்சம் பேர்களுக்குத்தான் என்று சொல்கிறார்கள் என்றும் அறிக்கை விடுகிறார்கள். உண்மை அதுவல்ல. இந்த 70 இலட்சம் பேர் என்பது 72 இலட்சம் குடும்பங்கள். 72 இலட்சம் குடும்பங்கள் என்றால், 2 கோடியே 25 இலட்சம் பேர் பயன் பெறுவார்கள் என்ற கணக்கு அவர்களுக்குத் தெரியவில்லை என்றால் நான் குடும்பம் என்ற கணக்கைச் சொல்கிறேன். அவர்கள் குடும்பத்தை விட்டுவிட்டு தனி நபர் என்ற கணக்கை சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். அது ஒரு கோடியே 99 இலட்சம். 72 இலட்சம் குடும்பங்கள் இந்த வாரியத்தால் தொழிலாளர் குடும்பங்களுக்குப் பயன் ஏற்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

நிலமற்ற விவசாயத் தொழிலாளர் குடும்பங்களுக்கு இலவச நிலம் வழங்கும் திட்டம், இதனால் பயன் பெற்றோர் சுமார் 50 ஆயிரம் பேர். சுமார் 50 ஆயிரம் ஏக்கர் இரண்டு கட்டங்களில் தந்திருக்கிறோம். ஒவ்வொரு மாவட்டத்திலும் ஒவ்வொரு அமைச்சர் சென்று இந்த நிலத்தை விநியோகித்தது, உங்களுக்கு நினைவிருக்கும் என்று கருதுகிறேன். எவ்வளவு நிலம் இருக்கிறது. நாங்கள் வைத்திருக்கிற நிலம் இவ்வளவுதான் என்றெல்லாம் சொன்னபோது கூட அது எவ்வளவு இருந்தாலும் பரவாயில்லை, கையகல நிலமாக இருந்தாலும், அது ஏழை விவசாயிகளுக்குத்தான் வழங்கப்படும் என்று இதே மாமன்றத்தில் நான் சொல்லி, அப்படித்தான் இன்றைக்கு அது வழங்கப்பட்டு வருகிறது.



தரமான அரிசி, கிலோ இரண்டு ரூபாய். இதனால் பயன் அடைவோர் ஒரு கோடியே 79 இலட்சம் குடும்பத்தினர். இது பற்றி நேற்று கூட ஒரு அறிக்கை பார்த்தேன். நாம் கொடுக்கிற அரிசியை மாடுகளுக்குப் போடுகிறார்களாம். அந்த மாடுகள் செத்து விடுகின்றனவாம். எவ்வளவு வேடிக்கையான, வேதனையான அறிக்கை இது என்பதை – அது யார் வெளியிடுகின்ற அறிக்கை – யாரோ ஏனோதானாக்கள் வெளியிட்ட அறிக்கை அல்ல.

750 கோடியில் இலவச வண்ணத் தொலைக் காட்சிப் பெட்டி வழங்கும் திட்டம். இதன் மூலம் 25 இலட்சத்து 30 ஆயிரம் குடும்பத்தினர் பயன் பெறுகிறார்கள். இது மிகப் பெரிய திட்டம், பிரமாண்டமான திட்டம். இதை மிகுந்த ஜாக்கிரதையாக, ஒளிவு மறைவின்றி எந்த விதமான ஊழலுக்கும், புகாருக்கும் இடமின்றி வழங்க வேண்டுமென்பதற்காக சட்ட மன்றத்திலே உள்ள கட்சிகளின் தலைவர்களை யெல்லாம் பங்கு பெறச் செய்து குழு அமைத்து, அந்தக் குழுவின் ஆலோசனைப்படிதான் யாரிடத்திலே வாங்கலாம், எந்தக் கம்பெனியிலே இந்தத் தொலைக்காட்சிகளை வாங்கலாம், அவற்றை யார் யாருக்கு வழங்கலாம், எந்த முறையிலே வழங்கலாம் என்று இவை அத்தனையையும் சிந்தித்து செயல்பட்டுக் கொண்டிருக்கிறோம்.

**அனைத்துக்**
**கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டம்**

நேற்று கூட இங்கே ஒரு விவாதம் நடந்தது. நாங்கள் கிராமங்களில் இந்த அனைத்துக்

கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தை சட்டமன்ற உறுப்பினர்களைக் கலந்து கொண்டு செய்ய வேண்டும், அதை ஏற்கெனவே உள்ளாட்சித்துறை அமைச்சர் ஒத்துக் கொண்டிருக்கிறார் என்றெல்லாம் விவாதம் நடந்தது. ஆனால் அப்போது எண்ணிக் கொண்டேன். சட்டமன்ற உறுப்பினர்களை ஒரு குழுவிலே போட்டால், எல்லோரும் வருகிறார்களா, பார்த்தோமே, அனுபவத்தில், எல்லோருமே வந்தால் பரவாயில்லை, வருவதில்லை. எல்லோரும் அதிலே அங்கம் வகிப்பதில்லை, இடம் பெறுவதில்லை. குறை சொல்வதற்கு வேண்டுமானால் அவர்கள் இருப்பார்களே தவிர, சேர்ந்து ஒத்துழைத்து மக்களுக்குப் போய்ச் சேருகின்ற காரியம் தானே, அரசோடு ஒத்துழைப்போம் என்று எண்ணுகின்றவர்கள் யார் இருக்கிறார்கள்? யாருமே இல்லை என்று சொல்லவில்லை. எதிர்க்கட்சியிலே யாருமே இல்லை. அதையெல்லாம் சிந்தித்துப் பார்த்து அனைத்துக் கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தைக் கூட எப்படி செயல்படுத்தலாம் என்பதை அமர்ந்து பேசுங்கள். ஆனால் நான் கருதுவது, "நெல்லுக்கு இறைத்த நீர் வாய்க்கால் வழியோடி, புல்லுக்கும் புசியக் கூடாது" நெல்லுக்கு நேராகவே செல்ல வேண்டும், அப்படிப்பட்ட முறையிலே போய்ச் சேர நீங்கள் ஒரு ஆலோசனை சொல்லுங்கள், நானே முன் நின்று அந்தக் கூட்டத்தை நடத்துகிறேன். அந்தக் கூட்டத்திலே நீங்கள் எடுக்கின்ற முடிவின்படி அனைத்துக் கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தை கிராமங்களிலே நிறைவேற்றுவதற்குத் தயாராக இருக்கிறோம் என்பதை நான் சுட்டிக் காட்டக் கடமைப் பட்டிருக்கிறேன்.

ஏனென்றால் நேற்றைக்கு இந்தப் பிரச்சினை வந்தபோது உள்ளாட்சித்துறை அமைச்சர் இங்கே இல்லை. அவர் சொன்னதாகச் சொல்லப்பட்டது. ஆனால் இந்தப் பிரச்சினைக்கு அதிக ஆதரவு, அங்கே இருப்பதைவிட, இங்கே அதிகமாக இருக்கிறது. அதனால்தான் சொல்கிறேன், அதிகாரிகளும் அதிலே ஈடுபடலாம், அதே நேரத்தில் மக்கள் பிரதிநிதிகளும் ஈடுபடலாம், இரண்டு பேரும் ஈடுபட்டால்தான் இவர் தவறு செய்தால் அவர் கண்டுபிடிக்கலாம், அவர் தவறு செய்தால் இவர் கண்டுபிடிக்கலாம். இரண்டு பேரும் தவறு செய்தால் அதை நான் கண்டுபிடிக்கலாம் எனவே அந்தத் திட்டம் மிக உயர்ந்த திட்டம், சிறந்த திட்டம், பெரிய திட்டம், மக்களிடையே போய்ச் சேர வேண்டிய திட்டம், அதை நாம் ஒழுங்காக நிறைவேற்ற வேண்டும், அதற்கு நீங்கள் எல்லாம் ஒத்துழைக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

பொங்கல் முதல், நடப்பாண்டில், இலவச எல்.பி.ஜி. இணைப்பு மற்றும் எரிவாயு அடுப்பு (பயனடைவோர் 3 இலட்சம் குடும்பம்) இப்படி நம்முடைய திட்டங்கள் பலவற்றை இடையிலே வந்த ஆட்சி ஒழித்து விட்டது என்றாலும், அவைகளையெல்லம் இன்று மீண்டும் செயல்படுத்துகின்ற ஆட்சியாக இந்த ஆட்சி இருக்கிறது என்பதை இங்கே நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

சுனாமி வந்தது, சுனாமி வந்து இரண்டாண்டு காலமாகிறது. 2004ஆம் ஆண்டு டிசம்பர் 24ஆம் தேதி சுனாமி வந்தபோது, எனக்கே என்னுடைய வாழ்வுக்கே சுனாமி வந்ததைப் போல நான் சுருண்டு படுத்துவிட்டேன். அப்படிப்பட்ட சுகவீனம் எனக்கேற்பட்டது. நான் மருத்துவமனையிலே இருந்ததைப் பார்க்க அன்பிற்கும் பாசத்திற்கும் உரிய திருமதி. சோனியா காந்தி அவர்கள் நேரடியாக மருத்துவமனைக்கே வந்து உடல் நலம் விசாரித்தார்கள். அப்போது கூட ஒரு கோடி ரூபாயை தி.மு.கழக அறக்கட்டளை யிலிருந்து அவர்களிடம் நான் வழங்கி அதை சுனாமி நிதியாகப் பயன்படுத்திக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொண்டேன்.

சுனாமி நிவாரணப் பணிகளுக்காக மத்திய அரசிடமிருந்து ராஜீவ் காந்தி மறுவாழ்வுத் திட்டத்தின் கீழ் இவ்வாறு பெயர் வைக்க வேண்டுமென்று சொன்னதே அப்போது நான் தான்.

**சுனாமி பாதித்த பகுதிகளில் வீடுகள்**

டெல்லியிலே நடைபெற்ற ஒரு கூட்டத்தில், அந்தத் திட்டத்திற்கு, ராஜீவ் காந்தி மறுவாழ்வுத் திட்டம் என்று பெயர் வைக்க வேண்டுமென்று நான் கேட்டு, அது ஏற்கப்பட்டது.அன்றைக்கு அதற்கு 2,347 கோடி ரூபாய்; பன்னாட்டு உதவிகள் மூலமாக 2,550 கோடி; மொத்தம் ரூபாய் 4,897 கோடி ஒதுக்கப்பட்டது. ஒதுக்கப் பட்ட இந்தப் பணத்தில் உடனடி நிவாரணத் திற்காக ஓரளவுத்தொகை வழங்கப்பட்டதே அல்லாமல், நிரந்தர நிவாரணங்களுக்காகச் செலவிடப்படவில்லை, அதற்காகச் சென்ற கோப்புகள் எல்லாம் கையெழுத்துப் போடப் படாமலே தூங்கிக் கொண்டிருந்தன. நாம் ஆட்சிக்கு வந்தபிறகுதான், அந்தக் கோப்புகளையெல்லாம் தட்டியெழுப்பி, வேலை பார்க்க வைத்தோம்.

அது மாத்திரமல்ல; 2004 டிசம்பரில் சுனாமிப் பேரலைகள் வீசியது என்றால் அதற்குப்பிறகு, பல மாதங்களுக்குப்பிறகு, – பதினேழு மாதங்களுக்குப்பிறகு, நாம் ஆட்சிப் பொறுப்புக்கு வந்தவுடன், உடனடியாக, பாதிக்கப்பட்ட கடலோர மாவட்டங்களுடைய ஆட்சித் தலைவர்களுடைய கூட்டத்தை நாமக்கல் கவிஞர் மாளிகையிலே கூட்டினேன். கூட்டத்தைக்கூட்டி, என்ன வேலை நடைபெற்றிருக்கிறது என்று கேட்டால், அவர்கள் என்ன சொன்னார்கள் என்றால், 'பணம் ஒதுக்கப்பட்டிருக்கிறது. ஆனால் நிரந்தரமான வேலைகள் எதுவும் நடைபெறவில்லை என்று சொன்னார்கள்.

# மாநில - மாவட்டச் சாலைகள் இருவழித் தடச்சாலைகளாக மேம்பாடு

283 இடங்களில் மாநில, மாவட்டச் சாலைகள் ரூ.232.66 கோடி செலவில் 911 கி.மீ. நீளத்திற்கு இரு வழித்தட சாலைகளாக மேம்படுத்தப்படுமென்று மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் அறிவித்துள்ளார்.

நெடுஞ்சாலை துறைக்கான மானியக் கோரிக்கை மீது நடைபெற்ற விவாதத்தின்போது, மாநில நெடுஞ்சாலை மற்றும் மாவட்ட முக்கியச் சாலையில் உள்ள ஒருவழித் தடங்கள் அனைத்தும் படிப்படியாக இருவழித் தடங்களாக தரம் உயர்த்தி நடவடிக்கை எடுக்கப்படும் என்றும், மூன்று ஆண்டுகளுக்குப் பின் மாநில நெடுஞ் சாலைகளில் ஒரு வழித் தடங்களே இருக்காது என்றும் அறிவிக்கப்பட்டது. அந்த அறிவிப்பினைப் படிப்படியாக நிறைவேற்றும் வகையில், தமிழகத்தின் பல்வேறு மாவட்டங்களிலும் உள்ள 439 கி.மீ. நீளமுடைய 153 மாநிலச் சாலைகளும், 472 .கி.மீ. நீளமுள்ள 130 மாவட்ட முக்கியச் சாலைகளும், 229 கோடியே 51 இலட்ச ரூபாய் செலவில் இருவழித் தடங்களாக மேம்படுத்தப்படும் என்றும், திட்டக்குடி பேரூராட்சி சாலையில் வெள்ளாற்றின் குறுக்கே 3 கோடியே 15 இலட்சம் ரூபாய் செலவில் உயர்மட்ட பாலம் ஒன்று கட்டப்படும் என்றும், ஆக மொத்தம் 232 கோடியே 66 இலட்ச ரூபாய் செலவில் இப்பணிகள் அனைத்தும் நிறைவேற்றப்படும் என்றும் மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் 2.2.2007 அன்று அறிவித்துள்ளார். *

எப்பொழுது? பதினேழு மாதங்கள் கழித்துச் சொல்கிறார்கள். தற்காலிக உதவிகள், வேலைகள் செய்யப்பட்டிருக்கின்றன. ஆயிரம், இரண்டாயிரம், 500, 800 என்று தற்காலிக உதவி, உடனடி உதவி செய்யப்பட்டதே அல்லாமல், அவர்களுக்கு நிரந்தர வீடுகள் கட்டுகின்ற இந்தப்பணி தொடங்கப்படவும் இல்லை; நிறைவு செய்யப்படவும் இல்லை.

54 ஆயிரம் வீடுகள் கட்டப்பட வேண்டுமென்று ஏற்கெனவே நிர்ணயிக்கப்பட்ட இலக்குக்கு மாறாக, தொண்டு நிறுவனங்கள் மூலம் கட்டப்பட்ட வீடுகள் 8,406 அதுவும் அரசின் சார்பாக அல்ல. 54 ஆயிரம் வீடுகள் கட்டுவதாக இலக்கு நிர்ணயிக்கப்பட்டு, தொண்டு நிறுவனங்கள் மூலம் 8,408 வீடுகள் கட்டி முடிக்கப்பட்டன. இந்தப்பணி, என்னுடைய ஆய்வுக் கூட்டத்திற்குப்பிறகு, 18,828 வீடுகள் கட்டுகின்ற அளவிற்குத் தீவிரப்படுத்தப்பட்டது. மேலும், இந்த நிதியாண்டின் இறுதிக்குள், 32,668 வீடுகள் கட்டி முடிக்கப்படும் என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன். சில தொண்டு நிறுவனங்கள் கட்டுவதாக வாக்களித்து கட்ட இயலாத 3,000 வீடுகளையும் 63 கோடி ரூபாய் மதிப்பீட்டில் தற்போது அரசே கட்ட ஆணைகள் பிறப்பிக்கப்பட்டு, ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டுள்ளது என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

சுனாமி பாதிக்கப்பட்ட நாகப்பட்டினம் பகுதியில், மாதா அமிர்தானந்தமயி அவர்களின் அறக்கட்டளையின் சார்பில் கட்டப்பட்டுள்ள சுமார் 400 வீடுகளை, வரும் 31ஆம் தேதி நானே சென்று திறந்து வைக்க இருக்கிறேன் என்பதையும் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கின்றேன். மாதா அமிர்தானந்தமயி அவர்களைப் பற்றிக் கேள்விப்பட்டிருப்பீர்கள். அவர்கள் இப்படிப்பட்ட நல்ல காரியங்களை, ஏழையெளியோருக்கு, நலிந்தோருக்கு, பாதிக்கப்பட்டோருக்கு செய்கின்ற அருள் உள்ளம் படைத்தவர்கள்; மீனவச் சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள், அப்படிப்பட்ட மிகமிகப் பிற்படுத்தப்பட்ட சமுதாயத்தில் பிறந்து இன்றைக்கு கேரள மாநிலத்தில் மிகப் பிரம்மாண்டமான மருத்துவமனை, கல்லூரி இவற்றையெல்லாம் நடத்துகின்ற அளவிற்கு உயர்ந்தவர்கள். அவர்கள் என்னை அழைத்திருக்கின்றார்கள். நான் நாகைக்குச் சென்று, இந்த 400 வீடுகளை, 31ஆம் தேதி அன்று திறந்து வைப்பதற்காக இருக்கின்றேன்.

24.6.2006 அன்று இந்த அரசு நடத்திய மாவட்ட ஆட்சித்தலைவர்கள் கூட்டத்தில், நான் முன்பு சொன்னேனே, அந்தக் கூட்டத்தில், விடுபட்ட மீனவர்களுக்கு வலைகள், படகுகள் வழங்குதல் மற்றும் ஏற்கெனவே உதவி அளிக்கப்பட்ட மீனவர்களுக்கு கூடுதல் வலைகள், ஐஸ் பெட்டிகள், பாதுகாப்புக் கவச உடைகள், சைக்கிள்கள் போன்றவை வழங்க 110 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது என்பதையும் தெரிவித்துக் கொள்கின்றேன். மேலும், கல்விக் கட்டணச் சலுகைகள் கூடுதலாக ஓராண்டுகள் விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

### ராஜீவ் காந்தி சுனாமி மறுவாழ்வுத் திட்டம்

மத்திய அமைச்சர்களுடைய அதிகார மளிக்கப்பட்ட குழு இத்திட்டத்தை ஏற்றுக்கொண்டுள்ள நிலையில், முதற்கட்டமாக நாகை, கடலூர், கன்னியாகுமரி, தூத்துக்குடி, நெல்லை, திருவள்ளூர், காஞ்சிபுரம், விழுப்புரம், புதுக்கோட்டை, இராமநாதபுரம் மற்றும் தஞ்சாவூர் ஆகிய மாவட்டங்களில் அனைத்து இயற்கைச் சீற்றங்களையும் தாங்கக்கூடிய 325 சதுர அடி பரப்பளவு கொண்ட நிரந்தர வீடுகள் தலா 2 இலட்சத்து 10 ஆயிரம் ரூபாய் செலவிலே கட்டப்படும் என்ற மகிழ்ச்சியான செய்தியை தெரிவித்துக் கொள்கிறேன். அடிப்படை வசதிகளுக்காக ஒரு வீட்டுக்கு சுமார் 40,000 ரூபாயும், 10 ஆண்டுகள் காப்பீடு செய்ய 1,000 ரூபாயும் ஒப்புதல் அளிக்கப்பட்டு, ராஜீவ் காந்தி சுனாமி மறுவாழ்வுத் திட்டத்தின்கீழ் ரூபாய் 550 கோடி மதிப்பீட்டில் 22,000 வீடுகள் கட்டப்படும் என்ற மகிழ்ச்சியான செய்தியையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

நண்பர் பீட்டர் அல்போன்ஸ், தமிழ்மொழிக்கு பேரகராதி தொகுப்பும், அறிவியல் கலைச் சொற்களும், கலைக் களஞ்சியம் புதிதாக உருவாக்கும் பணி மேற்கொள்ள வேண்டுமென்ற கோரிக்கையை விடுத்தார்.

1974ஆம் ஆண்டு தி.மு.க. ஆட்சியில் அகர முதலித் திட்டம் மொழிஞாயிறு தேவநேயப் பாவாணர் அவர்களைத் தலைவராகக் கொண்டு தொடங்கப்பட்டது. அத்திட்டத்தின் கீழ் இதுவரை 18 தொகுதிகள் வெளியிடப் பட்டுள்ளன. ஆறு தொகுதிகள் அச்சில் உள்ளன. எஞ்சிய ஏழு தொகுதிகள் தயாரிப்பில் உள்ளன. அச்சில் உள்ளதையும், தயாரிப்பில் உள்ளதையும் இந்த அரசு விரைவுபடுத்தி வெளியிடும் என்பதை பீட்டர் அல்போன்ஸ் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன். கழக ஆட்சி அமையும் போதெல்லாம் அகர முதலித் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டு விரைவுபடுத்தப்படுவதும், அதற்குப் பிறகு பெரும் தொய்வும், தளர்ச்சியும் ஏற்படுவதும், அது மீண்டும் புத்துயிர் பெறுவதுமான நிலை தொடர்ந்து நிகழ்ந்து கொண்டிருக்கின்றது. அதையொட்டி, தமிழ் அறிவியல் களஞ்சியத்தின் 18 தொகுதிகள் தயாரிக்கப்பட்டுவிட்டது. 17,18,19 மற்றும் 20 தொகுதிகள் தயாரிக்கும் பணி நடைபெற்று வருகிறது. 2008ஆம் ஆண்டுக்குள் இவற்றைத் தயாரித்திட நடவடிக்கைகள் முனைப்போடு மேற்கொள்ளப்படும்.

### தமிழ்ப் பேரகராதி

மேலும், தமிழக அரசால், அறிவியல் தமிழ் மன்றம் அமைக்கப்பட்டுள்ளதை அனைவரும் அறிவீர்கள். தமிழ் மொழியில் புதிய அறிவியல் சொற்களும், கலைச் சொற்களும் கொண்ட அறிவியல் கலைச்சொல் அகராதி தயாரிக்கும் பணி விரைவாக நடைபெற இந்த மன்றம் ஆவன செய்யும். தமிழ்ப் பேரகராதி திருத்தப் பணி தற்போது சென்னைப் பல்கலைக்கழகம் தமிழ் மொழித் துறையில் நடைபெற்று வருகிறது. முந்தைய பேரகராதியைவிட மும்மடங்கு பெரிதாக, சுமார் ஐந்து இலட்சம் சொற்களோடு இந்த அகராதி

> *“அரசுக் கல்லூரிகளில் உள்ள 1,062 விரிவுரையாளர் காலிப்பணியிடங்களை நிரப்பும் பொழுது, 522 பின்னடைவுப் பணியிடங்கள், தனி நியமனம் (Special Recruitment) மூலம் மூன்று கட்டங்களாக நிரப்பப்படும் என்ற உறுதியை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.”*

வெளியிடப்படும் என்பதை பெருமகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

கருப்பசாமி பாண்டியன் அவர்கள் பேசும்பொழுது சொன்னார்கள், அவருடைய மாவட்டத்தில் குலவணிகர்புரம் பகுதியில் அமைந்துள்ள இரயில்வே கதவு எண். 4 வாகன அலகு 1,13,547 ஆக இருக்கிறது. இது குறைந்தபட்ச அளவான 1,00,000 –ஐ விட அதிகமாக இருப்பதால், கடவுக்குப் பதிலாக இரயில்வே மேம்பாலம் கட்டுகின்ற தகுதியைப் பெறுகிறது. ஆனால், இச்சாலை தேசிய நெடுஞ்சாலை 7–இல் வருவதால் தேசிய நெடுஞ்சாலை ஆணையத்திடம் இசைவு பெற்று இரயில்வே மேம்பாலம் கட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

### தகவல் தொழில்நுட்பப் பூங்கா

கருப்பசாமி பாண்டியன் அவர்களும், நன்மாறன் அவர்களும் தகவல் தொழில்நுட்பப் பூங்காவைப்பற்றி இங்கே எடுத்துரைத்தார்கள். அவர்கள் பேசும்போது, சென்னைக்கு அடுத்தப்படியாக, கோயம்புத்தூர், மதுரை, திருச்சி, சேலம், நெல்லை ஆகிய இரண்டாம் நிலை நகரங்களில் தகவல் தொழில்நுட்பப் பூங்கா அமைக்க வேண்டுமென்று கோரிக்கை வைத்தார்கள். நெல்லை ஆகிய இரண்டாம் நிலை நகரங்களில் தகவல் தொழில்நுட்பப்

பூங்கா அமைக்க அரசு முனைப்போடு செயல்பட்டு வருகிறது. அதன் அடிப்படையில் கோவை, மதுரை மற்றும் திருச்சி ஆகிய நகரங்களில் அமைக்கப்படவுள்ள தொழில்நுட்பப் பூங்கா தொடர்பாகத் தேவையான நிலம் கையகப்படுத்தப்பட்டுள்ளது. சேலம் மற்றும் திருநெல்வேலி ஆகிய மாவட்டங்களில் நிலம் கையகப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. மதுரை மாவட்டம், திருமங்கலம் வட்டம், கிண்ணிமங்கலம் கிராமத்தில் 39 ஏக்கர் நிலமும், மதுரை மாவட்டம், மதுரை வடக்கு வட்டம் இலந்தைக்குளம் கிராமத்தில் 21.77 ஏக்கர் நிலமும், தகவல் தொழில்நுட்பப் பூங்கா அமைக்க கையகப்படுத்தப் பட்டுள்ளது.

மேலும், காமராஜ் பல்கலைக்கழகத்திற்குச் சொந்தமான 200 ஏக்கர் நிலம் தகவல் தொழில்நுட்பப் பூங்கா அமைக்க எல்காட் நிறுவனத்திற்கு உரிமை மாற்றம் செய்வது தொடர்பான கருத்துரு அரசின் பரிசீலனையிலே உள்ளது.

**விவசாய நிலங்களை அரசு தொடாது**

இதையெல்லாம் சொல்வதற்குக் காரணம், நிலம் எடுப்பது என்பது இப்போது பெரிய பிரச்சினையாக ஆகியிருக்கிறது. சில நேரங்களிலே, இதிலே அரசியலும் குறுக்கிடுகின்ற காரணத்தால், நிலம் எடுப்பு நினைத்தப்படி நடக்க முடியவில்லை. நினைத்தபடியெல்லாம் நிலத்தை எடுக்க வேண்டுமென்று நான் கருதுபவன் அல்ல. எல்லோரும் நினைக்கிறபடி, ஏழைஎளியவர்கள், குடிசைவாழ் மக்கள், நம்முடைய பல்வேறு கட்சிகளின் தலைவர்கள், கம்யூனிஸ்ட் கட்சி நண்பர்கள், பாட்டாளி மக்கள் கட்சியினுடைய தலைவர்கள் தோழர்கள், இவர்கள் எல்லாம் கருதுகிற இடத்தில்தான் நிலத்தை எடுக்க வேண்டுமென்று கருதுகிறோம். பயிர் செய்யப்படுகிற நிலங்களை நிச்சயமாக இந்த அரசு தொடாது என்ற உறுதியை நான் அளிக்கின்றேன். அதே நேரத்தில், தொழில்கள் வளர வேண்டும் என்று விரும்புகிறபோது, கொஞ்சம் விட்டுக் கொடுக்க வேண்டும். ஒரு 'அரை ஏக்கர் ஒரு ஏக்கர்தான் அதைச் சாக்கிட்டு, அரை ஏக்கர் நிலம், அய்யய்யோ போச்சே' என்று சொன்னால், எதுவுமே ஆரம்பிக்க முடியாது. நாடும் வளம் பெற வேண்டுமென்று கருதுகின்றோம், தொழில் களும் வளர வேண்டுமென்று கருதுகின்றோம், வேலைவாய்ப்பும் பெருக வேண்டுமென்று கருதுகிறோம், இவ்வளவுக்குப் பிறகு, நாம் தொழிற்சாலைகளே உருவாகக் கூடாது என்று எண்ணினால், தடையாக இருந்தால், என்ன ஆகும். என்பதை தயவுசெய்து எண்ணிப் பார்க்க வேண்டும். இப்போது மேற்கு வங்கத்திலே என்னவாயிற்று ? தொழிற்சாலை அமைக்க அவர்கள் எடுத்த முயற்சிக்கு ஏற்பட்ட இடையூறுகள் எல்லாம் உங்களுக்குத் தெரியும். அதற்காக இந்தியா முழுவதும் கொந்தளித்ததும் உங்களுக்குத் தெரியும். ஆகவே, அப்படிப்பட்ட கொந்தளிப்புகளும், குழப்பங்களும் ஏற்படாமல் பார்த்துக் கொள்ள வேண்டிய கடமை நமக்கு எல்லாம் இருக்கின்றது. ஏழை எளியவர்களை, உங்களுக்கு இடமில்லை என்று துரத்திவிட்டு, நாம் அங்கே பங்களா கட்டிக்கொள்வதோ, ஆலை அமைத்துக்கொள்வதோ, இந்த அரசினுடைய கொள்கையாக நிச்சயம் இருக்காது என்பதை மீண்டும் மீண்டும் நான் தெரிவித்துக் கொள்கின்றேன்.

திரு.மணி அவர்களும், திரு.வேல்முருகன் அவர்களும் பேசும் பொழுது, இந்தக் கள்ள லாட்டரிச்சீட்டு விற்பனை முற்றிலும் அகற்றப்பட வேண்டும் என்று கோரிக்கை வைத்தார்கள். இந்தக் கள்ள லாட்டரிச் சீட்டுகள் விற்பனைக்கு எதிராக முதலில் 1,308 வழக்குகள் போடப்பட்டன. இதெல்லாம் 2006–க்கு முன்பே மே மாதத்திற்கு முன்பே 2006–இல் வழக்குகள் போடப்பட்டன. 2006க்குப் பிறகு, அப்பொழுதும் 1,800 வழக்குகள் போடப்பட்டிருக்கின்றன. ஆக, தொடர்ந்து இந்தக் கள்ள லாட்டரிச் சீட்டுகள் விற்பனைமீது நடவடிக்கை எடுக்கப் பட்டிருக்கிறது. ஆனால், தமிழ்நாட்டிலே அனுமதிக்கப்பட்டுள்ளதா என்றால், இல்லை. வேறு மாநிலங்களிலேயிருந்து இங்கே வந்து விற்பனை செய்து கொண்டிருக்கிறார்கள். அதை அடக்குவதற்கு முடக்குவதற்கு, அப்படி நடைபெறுகின்ற காரியங்களைத் தண்டிப்பதற்கு நிச்சயமாக, தீவிரமாக இந்த அரசு முயற்சிகளை மேற்கொள்ளும் என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு.வேல்முருகன் அவர்களுக்கு ஒரு மகிழ்ச்சியான செய்தி, பண்ருட்டி தொகுதியிலே,

*சுமார் 918 கி.மீ. நீளத்தில் 280 சாலை மேம்பாட்டுப் பணிகளை மேற்கொள்ள கூடுதலாக ரூ.230.17 கோடி ஒதுக்கவும் இந்த அரசு முடிவு செய்துள்ளது. இதில் 433 கி.மீ. நீள மாநில நெடுஞ்சாலைகளும், 485 கி.மீ. நீள மாவட்ட சாலைகளும் மேம்படுத்தப்படும்.*

தனி நீதிமன்ற வளாக தேவையென்று அவர் தெரிவித்திருக்கின்றார். இதற்காக ரூ.223 கோடி செலவில், பண்ருட்டியில் தனி நீதிமன்ற வளாகம் அமைக்க ஒப்புதல் அளிக்கப்படும் என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

**சமத்துவப் பொங்கல்**

அவர் இங்கே கலாச்சாரத்தைப் பற்றி மிகக் கவலையோடு குறிப்பிட்டார். புதிய கலாச்சாரத்தை உருவாக்குபவர்களாக நாம் இருக்க வேண்டியிருக்கிறது என்ற கொள்கையை நம்முடைய மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியினுடைய உறுப்பினர் பாலபாரதி அவர்கள் பேசும்போது எடுத்துரைத்தார்கள். கலாச்சாரத்தைப் பற்றிப் பேசுகிற நேரத்தில், பேசுவதே பெண்களை இழிவுபடுத்துகின்ற கலாச்சாரமாக இருக்கிறது என்று நாம் அந்த முறைகளை கண்டித்துப் பேசும்பொழுதே பின் விளைவுகளை ஏற்படுத்தி விடக்கூடாது. அதனால் பாலபாரதி அவர்களுக்கு அவ்வளவு கோபம் என்று கருதுகின்றேன். அவர்கள் தன்னுடைய பேச்சை ஒரு வகையாகத் திருப்பிச் சொன்னார்கள். கலாச்சார நடவடிக்கை என்று பார்த்தால், இன்றைக்கு பொங்கல் நாளை சமத்துவப் பொங்கலாக இந்த அரசாங்கம் அறிவித்திருப்பதே ஒரு புதிய கலாச்சாரத்தை உருவாக்குவதற்காகத்தான் என்று அவர்கள் குறிப்பிட்டார்கள்.

நம்முடைய ரவிக்குமார் அவர்களும், செல்வப் பெருந்தகை அவர்களும், அரசுக் கல்லூரிகளில், விரிவுரையாளர் பணியிடங்களில் தாழ்த்தப்பட்டோர் மற்றும் பழங்குடியினருக்கான பின்னடைவு (Backlog) பணியிடங்கள் நிரப்பப்பட வேண்டுமென்று கோரிக்கை வைத்தார்கள். விரிவுரையாளர் பின்னடைவுப் பணியிடங்கள், அரசுக் கல்லூரிகளில் உள்ள 1,062 விரிவுரையாளர் காலிப்பணியிடங்களை நிரப்பும் பொழுது, 522 பின்னடைவுப் பணியிடங்கள், தனி நியமனம் (Special Recruitment) மூலம் மூன்று கட்டங்களாக நிரப்பப்படும் என்ற உறுதியை நான் தெரிவித்துக் கொள்கிறேன். கைதட்டி விட்டீர்கள். மூன்று கட்டங்கள் என்பது திருப்தியளிக்காது என்று கருதினேன். திருப்தியளிக்காவிட்டால் இன்னும் அதைப்பற்றி யோசிப்பேன்.

**கயிறு குழுமம் அமைக்க ஒப்புதல்**

பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பிலே உரையாற்றிய எதிரொலி மணியன் அவர்கள் பெரணமல்லூர் காவல் நிலையம், வடவணக்கம்பாடி காவல் நிலையம் ஆகியவற்றிற்குக் கட்டடம் மற்றும் காவலர் குடியிருப்புகள் கட்டித்தர வேண்டுமென்று கோரிக்கை வைத்துள்ளார். திருவண்ணாமலை மாவட்டம், வடவணக்கம்பாடி காவல் நிலையம் ஏற்கெனவே புதிய கட்டடத்தில் இயங்கி வருகிறது. பெரணமல்லூர் காவல் நிலையத்திற்குப் புதிய கட்டடம், காவல் துறையை நவீனப்படுத்தும் திட்டத்தின்கீழ் கட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். மேலும், இந்த இரண்டு காவல் நிலையங்களைச் சேர்ந்த பணியாளர்களுக்குக் குடியிருப்புகள், "ஆண்டுதோறும் 3,000 காவலர் குடியிருப்புகள் கட்டும் திட்டத்தின்" கீழ் வரும் நிதியாண்டில் கட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. அ. தமிழரசு அவர்கள் பேசும்போது, ஓமலூர் தொகுதியில் அரசு கயிறு தொழிற்சாலை நிறுவவேண்டுமென்று கோரிக்கை வைத்தார். சேலம் மாவட்டம், தாரமங்கலம், ஓமலூர் பகுதியை உள்ளடக்கிய பகுதிகளில் உள்ள கயிறு திரிக்கும் தொழிலாளர்களுக்காக, மத்திய அரசின் பாரம்பரியமிக்க தொழில்களைப் புத்துயிரூட்டும் நிதித்திட்டத்தின் கீழ், ரூ.117 இலட்சம் மதிப்பீட்டில் கயிறு குழுமம் அமைக்க ஒப்புதல் பெறப்பட்டுள்ளது. இத்திட்டத்தை நடப்பு நிதியாண்டில் செயல்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

தலைவாசல் தொகுதி, திரு.கே. சின்னதுரை அவர்கள், தனது தொகுதியில் கங்கவல்லி தாலுக்கா அலுவலகம், சொந்தக் கட்டடம் இன்றி இயங்கி வருவதால், தாலுக்கா அலுவலகத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்டப்பட வேண்டுமென்று கோரிக்கை வைத்தார். வரும் நிதியாண்டில் கங்கவல்லி தாலுகா அலுவலகத்தில் புதிய வட்டாட்சியர் அலுவலகக் கட்டடம் கட்ட ஆவன செய்யப்படும்.

**அரசு மருத்துவமனைகள் மேம்பாடு**

விவாதத்தின்போது பேசிய பல உறுப்பினர்கள் தமது தொகுதிகளிலுள்ள அரசு மருத்துவமனைகளில் வசதிகள் மேம்படுத்தப்பட வேண்டுமென்றும், போதிய மருத்துவர்கள் பணியமர்த்தப்பட வேண்டுமென்றும் கோரிக்கை விடுத்தார்கள்.

மாண்புமிகு உறுப்பினர்கள் கோரியவாறு இத்திட்டத்திற்கு திருவாரூர் மாவட்டம், குடவாசல் அரசு மருத்துவமனையில் ரூபாய் 95 இலட்சம் செலவிலும், சேலம் மாவட்டம், எடப்பாடி அரசு மருத்துவமனையில் 25 இலட்சம் ரூபாய் செலவிலும், திருச்சி மாவட்டம், லால்குடி அரசு மருத்துவமனையில் 40 இலட்சம் ரூபாய் செலவிலும், நாமக்கல் மாவட்டம், வேலூர் அரசு மருத்துவமனையில் 65 இலட்சம் ரூபாய் செலவிலும், கோவை மாவட்டம், வால்பாறை அரசு மருத்துவமனையில் 10 இலட்சம் ரூபாய் செலவிலும், விழுப்புரம் மாவட்டம், செஞ்சி அரசு

மருத்துவமனையில் 85 இலட்சம் ரூபாய் செலவிலும், காஞ்சி மாவட்டம் திருப்பெரும்புதூர் அரசு மருத்துவமனையில் 85 இலட்சம் ரூபாய் செலவிலும் கட்டட பராமரிப்புப் பணிகள், புதிய கட்டடங்கள் கட்டுதல், வார்டுகள் அமைத்தல், கழிப்பிட வசதி போன்ற பணிகள் மேற்கொள்ளப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர்களுக்கு மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

திருப்பூர் சாயப்பட்டறைபற்றி – நம்முடைய திராவிட முன்னேற்றக் கழகத் தேர்தல் அறிக்கைதான் கதாநாயகன் என்று மரியாதைக்குரிய திரு. சிதம்பரம் அவர்கள் சொன்னார்கள் – அது மாதிரி திருப்பூர் சாயப்பட்டறைதான் இன்றைய சட்டப் பேரவையிலே கதாநாயகனாக ஒரு ஐந்து ஆறு நாட்களாகப் பேசப்படுகின்ற ஒன்று. அந்தக் கழிவுகளை அகற்றுவது பற்றி திரு. சிவபுண்ணியம் அவர்கள் பேசினார். சி.பி.எம். சார்பாக திரு. கோவிந்தசாமி அவர்கள் பேசினார்கள். காங்கிரஸ் கட்சி சார்பாக ஞானசேகரன் அவர்கள் முழங்கினார்கள். பாட்டாளி மக்கள் கட்சி சார்பாக ஜி.கே.மணி அவர்கள் பேசியிருக்கிறார்கள். திரு. விடியல் சேகரும் அதைப்பற்றி பேசினார். இடையிலே புகுந்து நான் பதில் சொல்ல வேண்டுமென்று சொன்னார்கள். இன்றைக்கே பதில் சொல்வதற்கு இவ்வளவு கஷ்டப்படுகிறேன். நேற்று எவ்வளவு கஷ்டப்பட்டிருப்பேன் என்பது உங்களுக்குத் தெரியும், பேசியிருந்தால். பதில் சொல்லாமல் உட்கார்ந்திருந்தேன்.

அதைப்பற்றி அதிகாரிகளுடன் கலந்து பேசினேன். குழாய்களின் மூலமாக சுத்திகரிக்கப்பட்ட கழிவுகளைக் கொண்டுபோய் கடலில் விடுவது என்றால், மற்ற மாநிலங்களுக்கு அது வசதி, இப்போது குஜராத் என்றால் கடலே இருக்கிறது. அருகிலேயே கடல் இருக்கிறது. அதேமாதிரி, மராட்டியத்திலே கடல் இருக்கிறது. தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில் திருப்பூர் தொழிற்சாலைக்கும், கடலுக்கும் வெகுதூரம் இருக்கிறது. அதனால் நீளமாகத்தான் அந்தக் குழாய்களை அமைக்க முடியும் அதற்கு எவ்வளவு தூரத்திற்கு இந்தக் குழாய், எந்தக் கடலில் கொண்டுவிடுவது, நாகப்பட்டினமா அல்லது வேறு இடமா, எந்த இடத்திலே கடலில் கொண்டு அந்தக் குழாய்களை விட்டு கழிவுகளைக் கடலில் கலக்க வைக்கிறது என்று பார்த்தால் அதற்கு சுமார் உத்தேசமாக 700 கோடி ரூபாய் அளவிற்கு செலவாகுமென்று அந்த 700 கோடி ரூபாய் தமிழக அரசு சார்பில் 15 சதவிகிதமும், அது சுமார் 100 கோடி ரூபாயாகும். 15 சதவிகிதமென்றால், மத்திய அரசின் சார்பில் 25 சதவிகிதம் என்றால் 175 கோடி ரூபாய் ஆகும். மீதத் தொகையை சாயப்பட்டறைகளும் செலவிட்டு, அவர்கள் சார்பிலேயே ஒரு நிறுவனத்தை ஏற்படுத்தி அதன் மூலம் நிறைவேறுவது பற்றி பரிசீலிக்கலாம் என்று கருதுகிறேன். அதுபற்றி அவர்களை அழைத்துப் பேசி, நீதிமன்றத்திலே இருக்கின்ற வழக்குகளுக்குத் தொல்லைவராமல் அதை நிறைவேற்றுவதற்கு இந்த அரசு எல்லா விதமான முயற்சிகளையும் மேற்கொள்ளும் என்பதையும் தற்பொழுது நீதிமன்றத்தினுடைய பிரச்சினைகள் முடிந்துவிடும் என்றும் நான் கருதுகிறேன். இரண்டு, மூன்று அறிவிப்புகளை வெளியிட விரும்புகின்றேன்.

**சாலை மேம்பாட்டுப் பணிகள்**

மாநில நெடுஞ்சாலைகளையும், பிற நெடுஞ்சாலைகளையும் மேம்படுத்த சிறப்புத் திட்டத்தின்கீழ் மாநில அரசின் நிதி ஆதாரத்திலிருந்து ரூ.722.40 கோடி ஒதுக்கீடு செய்து பல்வேறு சாலை மேம்பாட்டுப் பணிகளுக்கு ஒப்புதல் அளித்திருக்கின்றோம். இதில், 1078.5 கி.மீ. நீள மாநில நெடுஞ்சாலைகள், 1390 கி.மீ. நீள மாவட்ட முக்கிய சாலைகள் மற்றும் 1354.5 கி.மீ. நீள மாவட்ட இதர சாலைகள் மேம்பாட்டுக்கு எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளன. தவிர 50 பாலப் பணிகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இதனைத் தொடர்ந்து, பல்வேறு சட்டமன்ற உறுப்பினர்களும் பல முக்கியச் சாலைகளை மேம்படுத்தி நிதி ஒதுக்குமாறு கோரிக்கை விடுத்துள்ளார்கள். அதனை ஏற்று, சுமார் 918 கி.மீ. நீளத்தில் 280 சாலை மேம்பாட்டுப் பணிகளை மேற்கொள்ள கூடுதலாக ரூ.230.17 கோடி ஒதுக்கவும் இந்த அரசு முடிவு செய்துள்ளது. இதில் 433 கி.மீ. நீள மாநில நெடுஞ்சாலைகளும், 485 கி.மீ. நீள மாவட்ட சாலைகளும் மேம்படுத்தப்படும்.

முக்கிய அறிவிப்பு – தமிழ்நாட்டில் உள்ள 63 உப வடிநிலங்களில் அமைந்துள்ள ஏரிகள், குளங்கள், கால்வாய்கள், மதகுகள் ஆகியவற்றைச் செப்பனிட்டு நீர் மேலாண்மை செய்து விவசாயிகளுடைய வருவாயைப் பெருக்கும் நோக்கத்துடன் ஒரு ஒருங்கிணைந்த நீர்வள நிலவளத்திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளதை உறுப்பினர்கள் அனைவரும் அறிவீர்கள்.

இத்திட்டத்திற்கான ஒப்புதலை ஜனவரி 23ஆம் தேதி உலக வங்கி அளித்துவிட்டது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். இத்திட்டத்தின் மொத்த மதிப்பீடு ரூ.2,547 கோடியாகும். அதாவது, 566 மில்லியன் டாலர். இத்திட்டத்திற்கான உடன்படிக்கை விரைவில் டெல்லியில் கையெழுத்தாகவுள்ளது. இத்திட்டம் இந்தியாவிலேயே ஒரு முன்னோடித் திட்டமாக அமைந்து தமிழக விவசாயப் பெருமக்களின் வாழ்வாதாரத்தை மேன்மையடையச் செய்யும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

வேலைவாய்ப்பு அலுவலகங்களில், பதிவு செய்து காத்திருப்போர்களில் பலர் பல்வேறு காரணங்களினாலும் மற்றும் முந்தைய அரசால் விதிக்கப்பட்ட வேலை நியமனத் தடையின் காரணமாகவும், தங்களது பதிவுகளைப் புதுப்பிக்கத் தவறியுள்ளார்கள். இவர்களுக்கு உதவும் வகையில், வயது வரம்பை இந்த அரசு ஐந்தாண்டுகள் தளர்த்தியதோடு, 2004 மற்றும் 2005 ஆம் ஆண்டுகளில் பதிவினைப் புதுப்பிக்காதவர்களுக்கு, மீண்டும் வாய்ப்பளித்து சிறப்புச் சலுகையும் வழங்கியுள்ளது.

இதேபோன்று 2001, 2002 மற்றும் 2003 ஆம் ஆண்டுகளில் வேலைவாய்ப்பு அலுவலகங் களில், பதிவினைப் புதுப்பிக்காதவர்களும் புதுப்பித்துக் கொள்ள, சிறப்புச் சலுகை வழங்கி இந்த அரசு ஆணையிடுகிறது. இதனால், இவர்கள் அரசு வேலைவாய்ப்பைப் பெறவும், வேலைவாய்ப்பற்ற இளைஞர்களுக்கு அளிக்கப்படும் மாதாந்திர நிதி உதவித் திட்டத்தின்கீழ் பயன் பெறவும் முடியும்.

**ப.ஜீவானந்தம் நூற்றாண்டு விழா**

தமிழகத்தினுடைய நிதிநிலையைப் பற்றி மாண்புமிகு உறுப்பினர்களுக்குச் சொல்ல வேண்டும். இதற்கிடையில், 1955 ஆம் ஆண்டு 29.9.1955 ஆம் ஆண்டு இதே சட்டப் பேரவையில் " நான் தமிழன், என்னுடைய மொழியே இந்த ராஜ்யத்தில் ஆட்சி மொழியாக இருக்க வேண்டும். கல்விக் கூடங்களிலும், ஆட்சி மன்றத்திலும், நியாய மன்றத்திலும், நிருவாகத் துறையிலும், தமிழ் மொழியே இயங்க வேண்டும். உயர் நீதிமன்றத்திலும் தமிழ்தான் வழக்கு மொழியாக இருக்க வேண்டும். கல்வியில் தமிழே போதனா மொழியாக இருக்க வேண்டும்" என்று பேசியவர் அண்ணன் ப.ஜீவானந்தம் அவர்கள் ஆவார்கள். அவரது நூற்றாண்டுதான் இது. அவரது நூற்றாண்டை தமிழக அரசின் சார்பில் 21.8.2007 அன்று சிறப்பான முறையில் கொண்டாடப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

நான் சொன்ன இந்தத் திட்டங்களைப்போல, மேலும் இந்த அரசு, செலவழிக்க வேண்டிய அரசுக்கு திட்டங்களால் இழப்புதான் ஏற்படும். செலவு என்றாலே இழப்புதான்.

அடுத்து மதிப்புக் கூட்டுவரி – அதனால் இழப்பு ஏற்படும் என்று சொல்லப்படுகிறது, உண்மைதான். ஆனால் ஏற்படுகின்ற இழப்பு எப்படி ஏற்படுகின்றது, எதனால் ஏற்படுகின்றது என்பதைச் சிந்தித்தால், அந்த இழப்பு ஏற்றுக் கொள்ளக் கூடிய இழப்புதான். மதிப்புக் கூட்டுவரி முறைக்கு முன்னர் இருந்த பொது விற்பனை வரி முறையின் கீழ், 1,4,8,10,12,16,20, சதவிகிதம் என அதிகப்பட்சம் 20 சதவிகிதம் வரை பல்வேறு விகிதங்களில் பொருள்களின் மீது வரி விதிக்கப்பட்டு வந்தது.

**மதிப்புக் கூட்டுவரி**

இப்போது மதிப்புக் கூட்டுவரிச் சட்டத்தின் கீழ் 1,4,12.5 சதவிகிதம் என்ற மூன்று வரி விகிதங்களில் மட்டுமே வரி விதிக்கப்பட்டுள்ளது. முன்புபோல் பல பிரிவுகளில் வரி விதிக்கப்படுவது கிடையாது. இதில் அதிகபட்சமே 12.5 சதவிகிதம்தான். 20 சதவிகிதம் என்ற அளவிற்குக் கிடையாது என்கிறபோது அரசுக்கு வருமானம் குறைவாகத்தான் இருக்கும். அதனால் வருவாய் இழப்புதான் ஏற்படும் என்றால் ஆமாம், நஷ்டம்தான், அந்த நஷ்டத்தை வணிகர்களுக்காக, மக்களுக்காக இந்த அரசு ஏற்றுக் கொள்கிறது. அதுதான் மதிப்புக்கூட்டு வரியின் தத்துவம்.

மதிப்புக் கூட்டு வரிச் சட்டம் செயல்படுத்தப்பட்டுள்ளதால், முந்தைய விற்பனை வரிச் சட்டத்தின் கீழ் விதிக்கப்பட்ட கூடுதல் விற்பனை வரி (Additional Sales Tax) உபரி வரி (Surcharge), மறு விற்பனை வரி, (Resale Tax) ஆகியன நீக்கப்பட்டுள்ளன.

எனவே மதிப்புக் கூட்டுவரிச் சட்டத்தின் கீழ் பல்வேறு பண்டங்களுக்கு விதிக்கப்படும் சராசரி வரி விகிதம் குறைந்துள்ளது.

மதிப்புக் கூட்டு வரிச் சட்டத்தின் கீழ் அரசுக்கு வர வேண்டிய வருவாய் மேற்கூறிய காரணங்களால் குறையும். இந்த இழப்பை மக்களுக்காக அரசே ஏற்றுக் கொள்கிறது.

இந்த இழப்பில் 75 விழுக்காட்டினை மைய அரசு தமிழகத்திற்கு இழப்பீடாக வழங்கும். ஏன் மைய அரசு வழங்குகின்றது? எதற்காக வழங்க வேண்டும்? என்ற கேள்வி எழும். மைய அரசு இந்தியா முழுமையும் ஒரே சீரான வரி விதிப்பு இருக்க வேண்டும் என்று கருதுகிறது. ஆகவே இதை அமல்படுத்துகின்ற மாநிலங்களுக்கு ஏற்படுகின்ற இழப்பீட்டைச் சமாளிக்க மைய அரசு இந்தப் பாரத்தை ஓரளவு தாங்குகிறது.

திருப்பூர் பனியன்களுக்கு வரி வேண்டாம் என்று சொன்னீர்கள். தி.மு.கழக ஆட்சியில் அதை எடுத்தோம். இப்போது என்ன நிலையோ? மீண்டும் அவர்கள் ஆட்சியில் போட்டிருப்பார்கள் என்று கருதுகிறேன். (போட்டதாக பீட்டர் அல்போன்ஸ் தெரிவிக்கிறார்) போடாமல் இருந்தால்தான் ஆச்சரியம். அதே போல சமையல் எண்ணெய்க்கு வரி இல்லை என்று

# 14 தமிழ்ச் சான்றோரின் நூல்கள் அரசுடைமை

மாண்புமிகு
தமிழக முதலமைச்சர்
கலைஞர் மு.கருணாநிதி
அவர்கள் அறிவிப்பு

தமிழுக்கு பெருந்தொண்டாற்றிச் சிறப்புமிக்க நூல்களைப் படைத்துள்ள தமிழ்ச் சான்றோர்களின் நினைவைப் போற்றும் வகையிலும் அவர்களின் படைப்புகள் பெருமளவில் மக்களைச் சென்றடையும் நோக்கிலும் அவர்களின் நூல்கள் நாட்டுடைமையாக்கப்பட்டு அவர்தம் மரபுரிமையினருக்குப் பரிவுத் தொகைகள் அரசால் அளிக்கப்பட்டு வருகின்றன. அவ்வகையில் மாயூரம் வேதநாயகம் பிள்ளை, சக்தி வை. கோவிந்தன், தெ.பொ. மீனாட்சி சுந்தரனார், த.நா. குமாரசாமி, கா.சு. பிள்ளை, புலவர் குலாம் காதிறு நாவலர், வை. சதாசிவப் பண்டாரத்தார், டாக்டர் சி. இலக்குவனார், மகாவித்வான் தண்டபாணி தேசிகர், தி.ஜ. ரங்கநாதன் (தி.ஜ.ர.), நாரண துரைக்கண்ணன், டாக்டர் மா. இராசமாணிக்கனார், டாக்டர் வ.சுப. மாணிக்கம், புலவர் கா.கோவிந்தன் ஆகிய பதினான்கு தமிழ்ச் சான்றோர்களின் நூல்களை அரசுடைமையாக்கி அவர்கள் ஒவ்வொருவர் குடும்பத்தாருக்கும் தலா ஆறு இலட்சம் ரூபாய் வீதம் பரிவுத் தொகை வழங்கிட அனுமதித்து மாண்புமிகு தமிழக முதலமைச்சர் கலைஞர் மு.கருணாநிதி அவர்கள் 11.2.2007 அன்று அறிவித்துள்ளார்.

சொன்னோம். அதற்கு என்ன காரணம், மக்களுக்கு நன்மை செய்ய வேண்டும் என்பதற்காக அத்தியாவசிய பொருட்களுக் கெல்லாம் வரியில்லை என்று சொன்னோம். அப்படி வரியில்லை என்று சொன்னபோது, அதனால் யாருக்கு இலாபம் என்றால் மக்களுக்குத்தான் இலாபம்.

அதைப்போல இந்த மதிப்புக் கூட்டு வரியினால் வருவாய் குறைந்தால், அது மக்களுக்கு இலாபமாகப் போய்ச் சேருகிறது. மக்களுக்குத் தான் பயன் அளிக்கிறது, ஆகவே வரியைக் குறைக்க, சீராக ஆக்க, இந்திய அரசு எடுக்கின்ற அந்த முயற்சிக்கு ஆதரவாகத்தான் நாம் இந்த மதிப்புக் கூட்டுவரியை இன்றைக்கு ஏற்றுக் கொண்டிருக்கின்றோம்.

2007–2008ஆம் நிதியாண்டில் மதிப்புக் கூட்டு வரியை செயல்படுத்துவதால் ரூ. 2,700 கோடி இழப்பு ஏற்படும் என்றும் மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது.

பீட்டர் அல்போன்ஸ் இங்கே ஆதங்கமே பட்டார். அய்யா இதோடு நிறுத்துங்கள், இதற்கு மேல் வேண்டாம், எவ்வளவு சாதனைகள்? அடுப்பு கொடுக்கிறீர்கள், தொலைக்காட்சிப் பெட்டிகளைக் கொடுக்கிறீர்கள், நிலம் கொடுக்கிறீர்கள், முட்டை கொடுக்கிறீர்கள், எல்லாவற்றையும் கொடுக்கிறீர்கள், இதற்கு மேல் கொடுக்க ஒன்றும் கிடையாது என்றார். ஏன் சொன்னார் என்றால், அவருக்கும் சுதர்சனம் போன்றவர்களுக்கும், ஜி.கே. மணி போன்றவர்களுக்கும் பயம் – ஆனால் கம்யூனிஸ்ட் நண்பர்கள் இன்னும் கூட கொடுக்க வேண்டுமென்பார்கள், இரண்டு ஏக்கர் நிலம் கொடுத்தால் மூன்று ஏக்கர் கொடு என்பார்கள்.

**ஒட்டுமொத்த வருவாய் உயர்வு**

ஆனால் வேறு சிலர் இப்போதே இந்த அரசு திவாலாகப் போகிறது என்று ரொம்ப (?) வருத்தப்படுகிறார்கள். நான் சொல்கிறேன், ஆங்கிலத்தையும் தமிழையும் சேர்த்துச் சொல்கிறேன் The Wall – தி வால் ஆக போகிறதென்றால் வால் மாதிரி, இந்த அரசின் நிதிநிலைமை அனுமார் வால் மாதிரி நீளப் போகிறதே தவிர குறையப் போவதில்லை. அனுமார் வால் நீண்டதால்தான் ராவணனுக்கு நேராக வாலையே சுற்றிச் சுற்றி அதன்மேலே ஏறி அனுமார் உட்கார முடிந்தது, இராமாயணக் கதையில். அதனால் "தி வால்" ஆனால் எங்களுக்கு இலாபமே தவிர, அதனால் ஒன்றும் நஷ்டம் கிடையாது. திவால் ஆவதற்கு எந்த வழியும் கிடையாது. திருத்த வரவு செலவுத் திட்டத்தில் ரூபாய் 38,732 கோடி என மதிப்பிடப்பட்ட மாநிலத்தின் வருவாய் வரவுகளில் இந்த நிதியாண்டின் முதல் ஒன்பது மாதங்களிலேயே ரூபாய் 24,548 கோடி

அரசால் பெறப்பட்டுள்ளது. இந்த அரசால் செயல்படுத்தப்பட்டு வரும் பல்வேறு திட்டங்கள், நிருவாகச் செலவினங்கள் மற்றும் மூலதனப்பணிகள் ஆகியவற்றிற்காக ரூபாய் 23,594 கோடி இதுவரை செலவிடப் பட்டுள்ளது. குறிப்பாக,அரசின் ஒட்டுமொத்த வருவாய் கடந்த ஆண்டின் இதே காலத்தோடு ஒப்பிடும்போது நடப்பாண்டில் சுமார் 20 சதவிகித அளவிற்கு உயர்ந்துள்ளது என்பதை மாண்புமிகு உறுப்பினர்களுக்கு சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

செலவினங்களைப் பொறுத்தவரையில், இந்த அரசு அறிவித்துள்ள நலத் திட்டங்களுக்கும் அனைத்து திட்டப் பணிகளுக்கும், திருத்த வரவு செலவுத் திட்டத்தில் உரிய ஒதுக்கீடுகள் செய்யப்பட்டுள்ளன. குறிப்பாக, பொது விநியோகத் திட்டத்தின் கீழ் கிலோ ஒன்றுக்கு ரூ.2 என்ற விலையில் அரிசி வழங்கும் திட்டத்திற்கு உணவு மானியமாக ரூபாய் 1,950 கோடி, வண்ணத்தொலைக்காட்சி வழங்கும் திட்டத்தின் முதல் கட்டத்திற்கு ரூபாய் ஒன்பது கோடி மற்றும் இரண்டாம் கட்டத்திற்கு ரூ. 750 கோடி, இலவச அடுப்பு மற்றும் எரிவாயு இணைப்பு வழங்கும் திட்டத்திற்கு ரூபாய் 60 கோடி, விவசாயக் கூட்டுறவுக் கடன் இரத்து செய்ததற்கு கூட்டுறவு நிறுவனங்களுக்காக இந்த ஆண்டிற்கு மட்டும் ரூபாய் 1,435 கோடி, டாக்டர் முத்துலெட்சுமி ரெட்டி மகப்பேறு உதவித் திட்டத்திற்கு ரூபாய் 100 கோடி, மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் நினைவு திருமண உதவித் திட்டத்திற்கு ரூபாய் 60 கோடி மற்றும் அரசு அலுவலர்களுக்கு பொங்கல் பரிசு வழங்க ரூபாய் 250 கோடி என அனைத்துத் திட்டங்களுக்கும், நல உதவிகளுக்கும் தேவையான நிதி ஒதுக்கீடுகள் செய்யப்பட்டுள்ளன. நிதி இல்லை என்று சொல்லி அரசு அலுவலர்களைப் பட்டினி போடவில்லை, எதிர்த்துக் கேட்டவர்களை சிறையிலும் போடவில்லை.

இத்தகைய பெரும் திட்டங்கள் அனைத்திற்கும் போதுமான ஒதுக்கீடுகள் செய்யப்பட்டுள்ள போதிலும் தமிழ்நாடு நிதிநிருவாகப் பொறுப்புடைமைச் சட்டத்தில் வரையறுக்கப் பட்டுள்ள இலக்கின்படியே, அரசின் நிதிப்பற்றாக்குறை மாநிலத்தின் மொத்த உற்பத்தி மதிப்பில் (GSDP - Gross State Domestic Product) 3 சதவிகிதத்திற்கு குறைவாகவே இருக்குமாறு உறுதி செய்யப்பட்டுள்ளது. எனவே, செலவுப் பொறுப்புகள் அதிகரித்துள்ள போதிலும், இந்த அரசின் திறமையான நிதி நிருவாகத்தால் அரசின் நிதிநிலைச் சமன்பாடு சீராகவே உள்ளது என்பதை மாண்புமிகு உறுப்பினர்களுக்கு தெளிவுபடுத்துகிறேன். ஆனால் தவறான பிரச்சாரம் திவாலாகிவிட்டது, தொலைக் காட்சிப் பெட்டிகள் எல்லாம் ஒட்டையாகிப் போய் விட்டது, எரிவாயு அடுப்பெல்லாம் எரியவே இல்லை, அரிசியை மாடு தின்கிறது (அவர்கள் தின்றால் நான் என்ன செய்வது) என்றெல்லாம் சொல்கிறார்கள்.

எதற்கெடுத்தாலும் முதலமைச்சர் ராஜினாமா செய்ய வேண்டும், உள்ளாட்சித் துறை அமைச்சர் ராஜினாமா செய்ய வேண்டும், இந்த அரசைக் கலைக்க வேண்டும் என்றெல்லாம் உண்மையான ஜனநாயகவாதிகள் யாரும் எண்ணிப்பார்க்க முடியாத கோஷங்களை யெல்லாம் எழுப்பிக் கொண்டிருக்கிறார்கள். ஒவ்வொரு நாளும் அதே பணி இங்கே நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. நான் அதைப் பற்றி பேசவில்லை. பேசாததற்குக் காரணம், நான் நானாகவே இருக்க விரும்புகிறேன், நான் அவர்களாக இருக்க விரும்பவில்லை. என்னென்ன பேசி விட்டு இங்கேயிருந்து செல்கிறார்கள் என்பது எல்லாம் உங்கள் காதுகளிலே விழாமல் இல்லை. நான் இவைகளை விட அதிகமான கசப்பான, காழ்ப்பான வார்த்தைகளையெல்லாம் கேட்டுக் கேட்டு பழகியவன். "வாழ்க வசவாளர்கள்" என்று சொன்ன அண்ணாவின் தம்பி நான் என்ற காரணத்தினால், அதைப்பற்றியெல்லாம் நான் கவலைப்படவில்லை.

ஒன்றை மாத்திரம் உங்களுக்குச் சொல்ல விரும்புகிறேன். ஒரு போரில் இரண்டு தரப்பு வீரர்களும் ஓரிடத்தில் சந்தித்துக் கொண்டார்கள். அப்போது ஒரு வீரன், மற்றவனிடம் சொல்கிறான். "என்னப்பா, எங்கள் வீரர்களுக்கு எல்லோருக்கும் மார்பில் காயம் இருக்கிறதே தவிர, முதுகிலே யாருக்கும் காயம் இல்லையே" என்கிறான். அதாவது அவர்கள் புறமுதுகு காட்ட மாட்டார்களாம் என்பதைச் சொல்வதற்காக அவ்வாறு சொன்னான். உடனே மற்றொரு வீரன் அவனிடம் சொன்னானாம். "எங்கள் தளபதி இருக்கிறாரே, அவர் புறமுதுகிட்டு ஒடுகிறவர்களை தாக்குபவர் இல்லை, அதனால்தான் உங்கள் முதுகிலே காயம் படவில்லை" என்று சொன்னானாம்.

எனவே முதுகிலே காயம் படாததற்கு ஓடுகிறவர்களைத் தாக்காததுதான் காரணம் என்பதை மாத்திரம் இங்கே சொல்லி நாங்கள் ஓடுகிறவர்களைத் துரத்திப் பழக்கப்பட்டவர்கள் அல்ல, துரத்தவும் மாட்டோம் என்று சொல்லி என்னுரையை நிறைவு செய்கிறேன்.

* * *




# தமிழகத்திற்கு 2007-2008ஆம் ஆண்டிற்கு ரூ.14 ஆயிரம் கோடி நிதிஒதுக்கீடு

புதுடெல்லியில், 5-2-2007 அன்று, மத்திய திட்டக்குழு ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் கலந்துகொண்ட மாண்புமிகு தமிழக முதலமைச்சர் கலைஞர் மு. கருணாநிதி அவர்கள், தமிழகத் திட்டங்களுக்கு, வரும் நிதியாண்டில் அதிக நிதி ஒதுக்கவேண்டும் என்று கேட்டுக்கொண்டார். அப்போது, தமிழக அரசு செயல்படுத்தி வரும் பல்வேறு சமூகநலத் திட்டங்களை மத்தியத் திட்டக் குழுவின் துணைத்தலைவர் திரு. மான்டேக் சிங் அலுவாலியா பாராட்டினார். குறிப்பாக சமூக வளர்ச்சியில் தமிழகம் இந்தியாவிற்கே முன்னோடி மாநிலமாகத் திகழ்வதாகவும், திட்டப் பணிகளை முறையாக நிறைவேற்றுவதில் சிறப்பாகச் செயல்படும் மாநிலமாக தமிழ்நாடு விளங்குவதாகவும் செய்தியாளர்களிடம் திரு. மான்டேக் சிங் அவர்கள் தெரிவித்தார்.

2005-2006 ஆம் ஆண்டில் ரூ.9,100 கோடி ஆகவும், 2006-2007ஆம் ஆண்டில் ரூ.12,500 கோடி ஆகவும் நிர்ணயிக்கப்பட்ட திட்ட ஒதுக்கீடு, 5.2.2007 அன்று நடைபெற்ற கலந்தாலோசனைக்குப் பின்னர் 2007-2008ஆம் ஆண்டில் ரூ.14,000 கோடி ஆக உயர்த்தப்பட்டது.

திட்ட ஒதுக்கீடு 14 ஆயிரம் கோடி என்பதற்கு மத்திய திட்டக் குழு ஒப்புதல் அளித்திருப்பது குறித்து, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் கலைஞர் அவர்களிடம் செய்தியாளர்கள் கருத்துக் கேட்ட போது, "எங்கள் கோரிக்கையை முழு அளவில் ஏற்றுக் கொண்ட மத்திய திட்டக் குழுவின் துணைத் தலைவர் அவர்களுக்கும், திட்டக் குழு உறுப்பினர்களுக்கும் தமிழ்நாடு அரசு சார்பாக நன்றியைத் தெரிவித்துக் கொள்வதாக கூறியதோடு, 14 ஆயிரம் கோடி ரூபாய் அளவிற்கு வரும் 2007-2008 ஆம் ஆண்டுக்கு திட்ட ஒதுக்கீடு அனுமதிக்கப்பட்டிருப்பது வரவேற்கத்தக்கது, மகிழத்தக்கது" என்றும் தெரிவித்தார்.

செய்தியாளர் எதற்கு முக்கியத்துவம் தரப்பட்டுள்ளது என்று கேட்டதற்கு "தமிழக மக்களுக்கு முக்கியத்துவம் தரப்பட்டுள்ளது" என்று மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் கூறினார்.



# 2007-2008ஆம் ஆண்டிலேயே தென்தீபகற்ப நதிகள் இணைப்புத் திட்டத்தை தொடங்க வேண்டும்

மாண்புமிகு தமிழக முதலமைச்சர்

**கலைஞர் மு. கருணாநிதி** அவர்கள்

புதுடெல்லியில், மத்திய திட்டக்குழு கூட்டத்தில் ஆற்றிய உரை. (5.02.2007)

மத்திய திட்டக் குழுவின் துணைத் தலைவர், உறுப்பினர்கள் மற்றும் உயரதிகாரிகளே!

வணக்கம்.

தமிழ்நாட்டின், 2007–2008ஆம் ஆண்டு திட்டத்திற்கான ஒதுக்கீட்டினை முடிவு செய்வதற்காக இங்கே வந்துள்ளது எனக்கு மிகுந்த மகிழ்ச்சியைத் தருகிறது.

தமிழ்நாட்டின், சுனாமி புனரமைப்புத் திட்டத்தினை மறுசீரமைப்பதற்கு முழு உதவியளித்த மத்திய திட்டக் குழுவின் துணைத்தலைவர் அவர்களுக்கு எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். சுனாமி புனரமைப்புத் திட்டத்தினை மறுசீரமைத்ததால், ராஜீவ் காந்தி தொகுப்பின் கீழ் 22,000 வீடுகள் கட்டுவதற்கான பணிகளைத் தமிழக அரசால் எடுத்துக் கொள்ள முடிந்தது.

பத்தாவது திட்டத்திற்கு ஒப்பளிக்கப்பட்ட ரூ.40,000 கோடிக்கு மாறாக, நாங்கள் பதினோராவது திட்டத்திற்கு மகத்தான திட்ட ஒதுக்கீடாக ரூ.80,000 கோடியினை கோரியுள்ளோம். துரித வளர்ச்சி, சமுத்துவம் மற்றும் சமூக நீதியை மையமாகக் கொண்டு தொடர்ந்து எங்களது நடவடிக்கைகள் அமைந்திடும். இருக்கின்ற நிதி ஆதாரங்களைக் கருத்திற் கொண்டு, 2007–2008ஆம் ஆண்டிற்கான திட்ட ஒதுக்கீட்டை ரூ.13,500 கோடி என நிர்ணயித்துள்ளோம். எனினும், மேற்கூறிய தொகையை, மத்திய அரசின் கூடுதல் நிதியுதவியின் மூலம் அதிகரித்து, பதினோராவது ஐந்தாண்டுத் திட்டத்திற்கு ஒரு வலுவான தொடக்கத்தை ஏற்படுத்திட இயலும் எனக் கருதுகிறேன். ஆகையால், தமிழ்நாட்டிற்கு பெரிய அளவிலான திட்ட ஒதுக்கீட்டை வழங்குவதற்கு, மத்திய திட்டக்குழு, மத்திய நிதியுதவியினை கூடுதலாக உயர்த்தித் தருமாறு கேட்டுக் கொள்கிறேன்.

### வேளாண்மைக்கு முன்னுரிமை

பதினோராவது ஐந்தாண்டுத் திட்டத்தில், வேளாண் துறைக்குப் புத்துயிர் அளிப்பதே, தமிழ்நாட்டின் தலையாய முன்னுரிமையாகும்.







தமிழ்நாடு, நீர்ப் பற்றாக்குறையுள்ள ஓர் மாநிலமாகும். வேளாண் துறையை முன்னேற்றுவதற்கு நாங்கள் பல்வேறு நடவடிக்கைகளை எடுத்த போதிலும், நீர்வளத்தைப் பெருக்குவதே எங்கள் முக்கியப் பொறுப்பாக அமைந்துள்ளது. தேசிய வளர்ச்சிக் குழுக் கூட்டத்தில், என்னுடைய உரையில், நதிகளை இணைப்பதின் உடனடி அவசியத்தை வலியுறுத்தியிருந்தேன். தென்தீபகற்ப நதிகளை இணைப்பதின் சாத்தியக் கூறுகளை, மத்திய அரசின் தேசிய நீர்வள மேம்பாட்டு நிறுவனம் ஏற்கெனவே உறுதிப்படுத்தியுள்ளது. மைய அரசின் குறைந்தபட்ச பொதுத் திட்டத்தில் வாக்களித்தவாறு இத்திட்டத்தைச் செயற்படுத்துவதற்குரிய தருணம் வந்து விட்டது. பதினோராவது ஐந்தாண்டுத் திட்டத்தில் போதிய அளவு மத்திய நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, 2007–2008ஆம் ஆண்டிலேயே இத்திட்டத்தினைத் தொடங்குமாறு, மத்திய திட்டக் குழுவினைக் கேட்டுக்கொள்கிறேன். வேளாண் துறைக்குப் புத்துயிர் அளிப்பதற்கும், எதிர்கால சந்ததியினர் கோடிக்கணக்கானோர் பயனடைவதற்கும், மத்திய திட்டக் குழுவால் செயல்படுத்தப்படவிருக்கும் இத்திட்டம் ஒரு முக்கியப் பங்களிப்பாக அமையும்.

தமிழக அரசு, ஏழை மக்களுக்காக இலவச சமையல் எரிவாயு இணைப்பு மற்றும் இலவச சமையல் அடுப்பு வழங்கும் திட்டத்தினைத் தொடங்கியுள்ளது. விறகினைப் பயன்படுத்தி சமைக்கும் போது ஏழைப் பெண்களின் உடல்நலம் பாதிக்கப்படுகிறது. இது சுற்றுச்சூழலை மாசுபடுத்துவதுடன், மரங்களின் எண்ணிக்கையைக் குறைத்து, காற்று மாசுபடுவதையும் அதிகரிக்கின்றது. இத்திட்டம், மகளிர் நலன், அவர்களது சுகாதாரம், சுற்றுச் சூழலை பேணிக் காத்தல் மற்றும் காடு வளர்த்தல் ஆகிய மூன்று முக்கியத் தேவைகளை ஒரே நேரத்தில் நிறைவு செய்கிறது. வறுமையை ஒழிப்பதற்கு உகந்த இந்தத் திட்டம் பல்வேறு பயன்களையும் நல்கிடும். இத்திட்டம், மத்திய அரசின் ஒத்துழைப்பையும் உதவியையும் பெறுவதற்கு ஏற்றது. தேசிய வளர்ச்சிக் குழுக் கூட்டத்தில், ஊரக மின்வசதி, குடிநீர் வழங்கல், சாலைகள், போன்ற துறைகளில் தமிழ்நாடு முன்னேறியுள்ளதால், பாரத் நிர்மாண் திட்டத்தின் கீழ் எந்தவித நிதியுதவியும் பெறவில்லை என்பதனை நான் ஏற்கெனவே தெரிவித்துள்ளேன். எனவே, பாரத் நிர்மாண் திட்டத்தின் கீழ், இலவச சமையல் எரிவாயு இணைப்பு மற்றும் இலவச சமையல் அடுப்பு வழங்கும் திட்டத்தினைச் சேர்த்து தமிழ்நாட்டிற்கு நிதியுதவி வழங்குமாறு கேட்டுக் கொள்கிறேன். இத்திட்டத்திற்கு, கூடுதலாக மத்திய நிதியுதவியினை வழங்குவதற்கு ஏற்ற கருத்தினை திட்டக் குழு உருவாக்கிட வேண்டும்.

இந்த அரசு பொறுப்பேற்றவுடன், தேசிய ஊரக வேலைவாய்ப்பு உறுதியளிக்கும் திட்டத்தினைச்

சிறந்த முறையில் செயற்படுத்திடத் தேவையான நடவடிக்கைகளை எடுத்துள்ளது. நாங்கள் கிராம ஊதிய வீதத்தை திருத்தம் செய்து அறிமுகப் படுத்தியதன் மூலம், ஏழைப் பெண்களுக்கு குறைந்தபட்ச ஊதியம் பெறுவதை உறுதி செய்துள்ளோம். இத்திட்டம் சிறந்த முறையில் செயற்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தை, தமிழ்நாட்டில் உள்ள மற்ற அனைத்து மாவட்டங் களுக்கும் நீட்டிக்குமாறு, மத்திய திட்டக்குழுவைக் கேட்டுக்கொள்கிறேன்.

பின்தங்கிய பகுதிகளுக்கான வளர்ச்சி நிதி (BRGF) திட்டம் தற்போது, தமிழ்நாட்டில் ஆறு மாவட்டங்களில் நடைபெறுகிறது. பின்தங்கிய மற்றும் மிகவும் வளர்ச்சியடையாத பகுதியான ஒருங்கிணைந்த தருமபுரி மாவட்டத்தை இந்தத் திட்டத்தின் கீழ் சேர்ப்பது அவசியமாகும். எனவே, தருமபுரி பகுதியினை பின்தங்கிய பகுதிகளுக்கான வளர்ச்சி நிதியின் கீழ் உடனடியாக சேர்த்து உதவிடுமாறு மத்திய திட்டக் குழுவினை கேட்டுக் கொள்கிறேன்.

### மத்திய நிதியுதவியை அதிகரிக்க வேண்டும்

இந்த அரசு, செம்மொழி தமிழுக்கு என மத்திய அரசின் நிறுவனம் ஒன்றினை உருவாக்கிட தீவிர முயற்சி எடுத்து வருகிறது. இந்நிறுவனத்தை சென்னையில் நிறுவிட, மத்திய மனிதவள மேம்பாட்டு அமைச்சர் அவர்கள் கொள்கை அளவிலான ஒப்புதலை வழங்கியுள்ளார். இதற்காக, 2007–2008ஆம் ஆண்டில், கூடுதல் மத்திய நிதியுதவியினை வழங்குமாறு மத்திய திட்டக் குழுவை கேட்டுக்கொள்கிறேன்.

தமிழ்நாடு, தொடக்கக் கல்வியில் துரித வளர்ச்சியடைந்துள்ளது. இப்போது, இடைநிலைக் கல்வி அனைவருக்கும் கிடைப்பதற்கு முக்கிய கவனம் செலுத்துகிறோம். தமிழ்நாட்டின் உயர்நிலைக் கல்வியின் வளர்ச்சிக்கு நிதியுதவி வழங்குவதற்கு ஏதுவாக சர்வ சிக்ஷா அபியான் திட்டத்தினை விரிவுபடுத்திட வேண்டுமென்று மத்திய திட்டக் குழுவினை கேட்டுக்கொள்கிறேன்.

கிராம வீட்டு வசதிக்குப் பெருமளவில் மத்திய நிதியுதவி தேவைப்படுகிறது. இந்திரா வீட்டு வசதித் திட்டத்தின் கீழ், ஒவ்வோராண்டும் 61 ஆயிரம் வீடுகள் மட்டுமே கட்டப்பட்டு வருகின்றன. நிரந்தர வீடுகள் அதிக அளவில் தேவைப்படும் கிராம மக்களுக்கு, இந்த எண்ணிக்கை மிகக் குறைவானதே. எனவே, இந்திரா வீட்டுவசதித் திட்டத்தின் கீழ் மத்திய நிதியுதவியினைப் பெருமளவில் அதிகரித்துத் தரும்படி மத்திய திட்டக் குழுவை கேட்டுக் கொள்கிறேன்.

ஏழை எளிய மக்களுக்கு சமூகப் பாதுகாப்பு வழங்குவதில் தமிழ்நாடு முன்னோடியாக விளங்குகிறது. தேசிய சமூக உதவித் திட்டம், குறைந்த அளவிலேயே பயன்தருகிறது. ஊனமுற்றோர், கைம்பெண்கள், ஆதரவற்ற பெண்கள் மற்றும் நிலமற்ற விவசாயத் தொழிலாளர்கள் ஆகியோர் பயனடையும் வகையில் தேசிய சமூக உதவித் திட்டத்தினை விரிவுபடுத்திட வேண்டுமென மத்திய திட்டக் குழுவினை கேட்டுக் கொள்கிறேன்.

திட்டச் செயல்முறையைப் பற்றி ஒரு சில கருத்துகளை எடுத்துரைத்து எனது உரையை நிறைவு செய்திட விரும்புகிறேன். தற்போது, தனித்தனி நெறிமுறைகள் மற்றும் விதிமுறைகளைக் கொண்ட, மத்திய அரசு பொறுப்பேற்கும் ஏராளமான திட்டங்கள் செயற்படுத்தப்பட்டு வருகின்றன. இது, திட்டம் மற்றும் வளர்ச்சி செயல்முறையை மட்டுப்படுத்துகிறது; கடினமாக்குகிறது மற்றும் நிருவாகச் செலவை அதிகரிக்கிறது. மத்திய அரசு பொறுப்பேற்கும் ஏராளமான திட்டங்கள் அனைத்தையும் ஒருங்கிணைத்து, மாநிலங்களின் தேவைகளுக்கேற்ப, இத்திட்டங்களை இணக்கமும் நெகிழ்ச்சித் தன்மையும் உடையதாக்கிடுமாறு மத்திய திட்டக் குழுவினை வலியுறுத்துகிறேன். தேசிய வளர்ச்சிக் குழுவில் ஏற்கெனவே நான் தெரிவித்துள்ளவாறு திட்ட ஆய்வு முறையையும் மற்றும் மாநிலத் திட்டத்திற்கு ஒப்புதல் வழங்கும் முறையையும் எளிதாக்கிட வேண்டும் என விரும்புகிறேன். தற்போதுள்ள நடைமுறை, எளிதில் கையாள முடியாத, மிகவும் பழைமையான காலத்திற்கொவ்வாததாகவே உள்ளது.

உங்களிடமிருந்து முழுமையான உதவியையும், நிறைவான ஒத்துழைப்பையும் நான் எதிர்பார்க்கிறேன். ■



மாண்புமிகு தமிழக முதலமைச்சர் கலைஞர் மு. கருணாநிதி அவர்கள், அவரது இல்லத்தில், போலியோ நோய் ஒழிப்புத் திட்டம் சொட்டு மருந்து சிறப்பு முகாமினைத் தொடங்கி வைத்து போலியோ சொட்டு மருந்தினை ஒரு குழந்தைக்குக் கொடுத்தார்கள்.
மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு.கே.கே.எஸ்.எஸ்.ஆர். ராமச்சந்திரன், வணக்கத்திற்குரிய சென்னை மாநகர மேயர் திரு.மா.சுப்பிரமணியன் மற்றும் தலைமைச் செயலாளர் திரு.எல்.கே.திரிபாதி, இ.ஆ.ப., ஆகியோர் உடன் உள்ளனர்.(7.01.2007)



மாண்புமிகு தமிழக முதலமைச்சர் கலைஞர் மு. கருணாநிதி அவர்கள், சென்னையில் நடைபெற்ற "50ஆவது அகில இந்திய காவல் பணித் திறனாய்வுப் போட்டி-2006" நிறைவு விழாவில், சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்டு, காவலர்களின் அணிவகுப்பு மரியாதையினை ஏற்றுக்கொண்டு, வெற்றிபெற்ற வீரர் மற்றும் வீராங்கனைகளுக்குப் பரிசுகளை வழங்கினார்கள். (18.01.2007)





தேசத் தந்தை மகாத்மா காந்தியடிகளின் 60ஆவது நினைவு நாளையொட்டி,
சென்னை காமராஜர் சாலையில் அமைந்துள்ள அவரது சிலைக்கு
மேதகு தமிழக ஆளுநர் திரு.சுர்ஜித் சிங் பர்னாலா,
மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின்
ஆகியோர் அஞ்சலி செலுத்தினார்கள்.(30.01.2007)



மாண்புமிகு தமிழக முதலமைச்சர் கலைஞர் மு. கருணாநிதி அவர்கள்,
திருவாரூரில் நவீனப்படுத்தப்பட்ட பொதுப்பணித்துறை திட்ட இல்லத்தினையும்,
மின்தூக்கி அமைத்தல் பணியையும் திறந்துவைத்தார்கள்.
உடன், மாண்புமிகு மத்திய இரயில்வேதுறை இணை அமைச்சர் திரு.ஆர்.வேலு,
மாண்புமிகு மின்சாரத்துறை அமைச்சர் திரு. ஆற்காடு நா.வீராசாமி,
மாண்புமிகு பொதுப்பணி மற்றும் சட்டத்துறை அமைச்சர் திரு.துரைமுருகன்,
மாண்புமிகு உயர்கல்வித்துறை அமைச்சர் டாக்டர் க.பொன்முடி,
மாண்புமிகு பால்வளத்துறை அமைச்சர் திரு.உ. மதிவாணன் ஆகியோர் உள்ளனர்.(12.01.2007)




மாண்புமிகு தமிழக முதலமைச்சர்
கலைஞர் மு. கருணாநிதி அவர்களை, அவரது இல்லத்தில்,
சத்ய சாயிபாபா அவர்கள் சந்தித்துப் பேசினார் (20.01.2007)



மாண்புமிகு நிதியமைச்சர் பேராசிரியர் க. அன்பழகன் அவர்கள்,
தமிழ்நாடு கைவினைப் பொருட்கள் மேம்பாட்டுக் கழகத்தால் நடத்தப்படும்
கைவினைப் பொருட்கள் கண்காட்சியினைத் துவக்கி வைத்து,கண்காட்சிப் பொருட்களை பார்வையிட்டார்.
உடன் கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த்துறை செயலாளர்
திரு.விஸ்வநாத் ஷெகோன்கர்,இ.ஆ.ப., மற்றும் தமிழ்நாடு கைவினைப் பொருட்கள்
மேம்பாட்டுக் கழகத்தின் தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநர்
திரு.கே.ஏ. மாத்யூ, இ.ஆ.ப., ஆகியோர் உள்ளனர். (11.01.2007)



அய்யன் திருவள்ளுவர் திருநாளையொட்டி வள்ளுவர் கோட்டத்தில் உள்ள
திருவள்ளுவர் திருவுருவச்சிலைக்கு மாண்புமிகு நிதியமைச்சர் பேராசிரியர் க. அன்பழகன்,
மாண்புமிகு மின்சாரத்துறை அமைச்சர் திரு.ஆற்காடு நா. வீராசாமி,
மாண்புமிகு செய்தித்துறை அமைச்சர் திரு.பரிதி இளம்வழுதி
ஆகியோர் மாலை அணிவித்தனர். (16.01.2007)



முன்னாள் முதலமைச்சர் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்களின் 91ஆவது பிறந்தநாளை முன்னிட்டு,
மாண்புமிகு மின்சாரத்துறை அமைச்சர் திரு.ஆற்காடு நா. வீராசாமி,
மாண்புமிகு செய்தித்துறை அமைச்சர் திரு.பரிதி இளம்வழுதி,
வணக்கத்திற்குரிய சென்னை மாநகர மேயர் திரு.மா.சுப்பிரமணியன் ஆகியோர்,
டாக்டர் எம்.ஜி.ஆர். மருத்துவப் பல்கலைக்கழக வளாகத்திலுள்ள
டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்களின் சிலை அருகே, அன்னாரது திருவுருவப் படத்திற்கு
மலர் தூவி அஞ்சலி செலுத்தினார்கள் (17.01.2007)

# உண்மையை உரைத்துப் போராடிய இரத்தினவேல் தேவர்



திருச்சி மாவட்டத்தில் மறைந்த பெரியவர் பெரும் தியாகி இரத்தினவேல் தேவர் சிலை திறப்பு விழாவில் அரசின் சார்பில் நடைபெறுகின்ற புதிய கட்டடங்களுடைய திறப்பு விழாவிலும், வளர்ச்சித் திட்ட பணிகளுக்கான அடிக்கல் நாட்டு விழாவிலும் நலத்திட்ட உதவிகள் வழங்குகின்ற விழாவிலும் திருச்சி மாநகர காவல்துறையின் வசதிக்காகவும் செயற்கைக்கோள் உதவி யுடன் கூடிய ரோந்து வாகனப் பணிகளைத் துவக்கி வைக்கின்ற நிகழ்ச்சியிலும் போக்குவரத்து விதிகளை அமல்படுத்த கையக கணினிகள் மற்றும் வானலை சுழற் கேமராக்கள் மூன்று கோடி ரூபாய் செலவில் பொருத்தப்படுவதைத் தொடங்கி வைக்கின்ற நிகழ்ச்சியிலும் கலந்து கொண்டமைக்காக நான் பெருமகிழ்ச்சி யடைகின்றேன்.

இங்கே தாமதமாக; ஆனால், நாமெல்லாம் இன்று மகிழத்தக்க விதத்தில் திருச்சியிலே தேவர் பெருமகனாருடைய சிலையைத் திறந்து வைத்திருக்கின்றோம். இந்தச் சிலை இங்கே திறக்கப்பட வேண்டும் என்று ஏறத்தாழ ஐம்பது ஆண்டுகளுக்கு மேலாக திருச்சி நகரத்து மக்களுக்கு ஆவல் எழுந்தபோதிலும், அந்த ஆவலைத் தீர்த்து வைக்கின்ற பணியை நம்முடைய கோபால்ஜி போன்றவர்கள் தொடங்கி, கடந்த சில ஆண்டுகளுக்கு முன்பு அந்தப் பணிக்கான தொடக்க முயற்சிகளெல்லாம் மேற்கொள்ளப் பட்டு, திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி அந்தச் சிலை வைப்பதற்கு ஒப்புதல் தந்து, திறந்து வைப்பதற்கு சம்மதம் வழங்கி எல்லாம் நடந்த பிறகு ஒரு விரும்பத்தகாத காரணத்தால், தமிழகத்திலே அமைதி நிலை நாட்ட வேண்டும் என்ற எண்ணத்தால், அது

மாண்புமிகு
தமிழக முதலமைச்சர்
**கலைஞர் மு. கருணாநிதி**
அவர்கள் பெருமிதம்

ஒத்தி வைக்கப்பட்டு, அதன் பிறகு வந்த ஆட்சியில் இந்தச் சிலை வைப்பதற்கான கோப்பு உருவாக்கப்பட்டு, அந்தக் கோப்பு நகராமலேயே இருந்து விட்ட காரணத்தால், சிலை திறப்பு விழாவும் நடக்காமலேயே ஆகிவிட்டது.

அதன்பிறகு, இந்தச் சிலையை இங்கே அமைக்க வேண்டும் – அதைத் திறந்து வைக்க வேண்டும் என்பதை தம்பி நேருவிடத்திலே சிலை அமைப்புக் குழுவினர் மற்றும் நண்பர்கள் திருச்சி மேயர் போன்றவர்கள் எடுத்துச் சொல்லி உள்ளாட்சித்துறை அமைச்சராகப் பொறுப்பேற்ற தம்பி ஸ்டாலின் என்னிடத்திலே அதை எடுத்துக்கூறி நான் உடனடியாக அந்தக் கோப்பு எங்கே இருக்கிறது என்பதை தேடிக் கண்டுபிடிக்கச் சொல்லி ஏறத்தாழ இரண்டாயிரத்துக்கும் மேற்பட்ட தேங்கிக் கிடந்த கோப்புகளுக்கிடையே இருந்த அந்தக் கோப்பைத் தேடிப்பிடித்து "அப்பாடா; இரத்தினவேல் தேவரைக் கண்டுபிடித்து விட்டோம்!" என்று அவருடைய சிலை அமைக்கின்ற அந்தப் பணியினை உடனடியாக நிறைவேற்ற தொடர்புடைய அதிகாரிகளுக்கும், தொடர்புடைய துறைகளுக்கும் ஆணை பிறப்பித்து அந்த ஆணை இன்றைய தினம் நிறைவேறுகின்ற மகிழ்ச்சிகரமான காட்சியை நாம் இங்கே கண்டு கொண்டிருக்கின்றோம்.

### கதராடையில் காட்சி தந்த உத்தமர்

தேவர் அவர்கள் என்று சொன்னால், தமிழகத்திலே இரண்டு பேருடைய பெயர்தான் எல்லோருக்கும் நினைவுக்கு வரும். ஒன்று – பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர், இன்னொன்று – இன்று திறந்து வைக்கப்பட்டிருக்கின்ற சிலையாக காட்சி தருகின்ற பி.ஆர். தேவர் – இரத்தினவேல் தேவர். இந்த இரண்டு தேவர்களுடைய பெயர்தான் நினைவுக்கு வரும்.

முத்துராமலிங்கத் தேவர் அவர்களுடைய புகழுக்கு ஏற்ப, அவருடைய கீர்த்திக்கு ஏற்ப அவரைப் பற்றி பரவியிருக்கின்ற வீரப்பிரதாபங்களுக்கேற்ப கட்டு மஸ்தான தேகம் படைத்தவர் – திருச்சி தேவரைப் பற்றி அவருடைய வீரத்தைப் பற்றி அவருடைய செயல்பாடுகளைப் பற்றி நாடு பேசினாலும், அவரை நேரில் பார்த்தால் இவரா ? என்று ஆச்சரியப்படத்தோன்றும். எலும்பு உருவம் – ஆனால் இரும்பு இதயம் கொண்ட ஒருவர் உண்டென்றால், அது திருச்சி இரத்தினவேல் தேவர்தான். அப்படிப்பட்ட இரத்தினவேல் அவர்கள் முதலில் நீதிக்கட்சியினுடைய கொள்கைகளால் ஈர்க்கப்பட்டு பின்னர் 1924ஆம் ஆண்டு – எனக்கு நன்றாக நினைவிருக்கக் கூடிய ஆண்டு, நான் பிறந்த ஆண்டு – அவர் காங்கிரஸ் இயக்கத்திலே தன்னை இணைத்துக் கொண்டு, அதுவும் சாதாரணமாக அல்ல, இங்கே வந்த ஒரு காங்கிரஸ் தலைவரிடத்திலே கையெழுத்துப் போட்டு உறுப்பினராகச் சேர்ந்தல்ல – வடக்கே சென்று காந்தியடிகளுடைய ஆசிரமத்திலே தன்னை காங்கிரஸ்காரராக இணைத்துக் கொண்டு வந்தவர்.

அப்படிச் செல்லும்போது வெளிநாட்டு உடைகளை அணிந்து கொண்டு சென்ற அவரைப் பார்த்த காந்தியடிகள் காங்கிரசிலே சேர வருவதாகச் சொல்கிறீர்கள் – அதற்கான உடை இல்லையே இது, என்று கேட்ட பிறகு அன்றைக்கு அந்த உடைகளைத் தூக்கியெறிந்துவிட்டு கதராடை புனைந்தவர்தான், கடைசி வரையிலே அந்தக் கதராடையிலே காட்சி தந்த உறுதி படைத்த ஒரு உத்தமர் இரத்தினவேல் தேவர் அவர்களாவார்கள்.

அவர் எவ்வளவு பிடிவாத குணம் கொண்டவர் – அதே நேரத்தில் எவ்வளவு சாகச குணம் உள்ளவர் – எந்த அளவிற்கு அவர் இளம் வயதிலேயே அந்த குணங்களையெல்லாம் பெற்றிருந்தார் என்பதை அவருடைய இளமைக்கால வரலாறு விளக்குகிறது. அவர் சென்னையிலே கிறித்தவக் கல்லூரியிலே படித்துக் கொண்டிருந்தபோது, அப்போது – இப்போது இருப்பதைப்போல கிரிக்கெட் பந்தயங்கள் அடிக்கடி சென்னையில் நடப்பதுண்டு. இரத்தினவேல் தேவர் மாணவப் பருவத்தில் கிரிக்கெட் விளையாட்டில் மிகுந்த ஆர்வம் படைத்தவர்.

இப்பொழுது சென்னையில் அமைந்திருக்கின்ற சேப்பாக்கம் மைதானத்தில் கிரிக்கெட் பந்தயம் நடைபெறப் போகிறது என்ற செய்தி விளம்பரப்படுத்தப்பட்டதும் அந்தக் கல்லூரியிலே படிக்கின்ற மாணவர்கள் எல்லோருமல்ல – ஒரு பகுதியினர் அந்தப் பந்தயத்தைக் காண வேண்டும் என்பதற்காக – மாணவர்களைப் பற்றி நான் சொல்ல வேண்டியதில்லை உங்களுக்கு – நானும் மாணவனாக இருந்தவன்தான் – பந்தயத்திற்குச் செல்லவேண்டும் என்று கடிதம் எழுதினால் விடுப்பு தர வேண்டுமென்று கேட்டால், லீவு லெட்டர் எழுதினால் கிடைக்காது என்பதற்காக வயிற்று வலி என்றும் தலைவலி என்றும் பாட்டி இறந்து விட்டார் என்றும் அண்ணன் இறந்துவிட்டார் என்றும் சில மாணவர்களுக்கு பலமுறை பாட்டி இறப்பார்கள் இப்படியெல்லாம் லீவு லெட்டர் எழுதி விட்டு, கிரிக்கெட் மைதானத்திற்கு மாணவர்கள் சென்றார்கள்.

அதிலே அவர்களை எல்லாம்விட கிரிக்கெட்டில் அதிக ஆர்வம் உடைய இரத்தினவேல் தேவர் அவர்கள் அப்படிக் கடிதம் எழுதாமல், "நான் இன்றைக்கு கிரிக்கெட் விளையாட்டைப் பார்க்கப் போகிறேன் – ஆகவே எனக்கு லீவு வேண்டும்" என்று கடிதம் எழுதி, கல்லூரி முதல்வருக்கு எழுதி அனுப்பிவிட்டு கிரிக்கெட்



மைதானத்திற்குச் சென்றார். மறுநாள் வந்தால், அவரை உள்ளே அனுமதிக்காமல், உனக்கு ஒரு அணா அபராதம் என்று விதித்து – அந்த லீவை அனுமதிக்க முடியாது என்று சொல்லி விட்டார்கள் கல்லூரி நிருவாகத்தினர். அதற்காக ஒரு அணா அபராதம் கட்டினாரா என்றால், இல்லை. அவர் ஒன்றும் வறுமையிலே உழலுகின்ற குடும்பத்தைச் சேர்ந்தவர் அல்ல. ஒரு அணா கிடைக்காதவர் அல்ல. ஒரு அணா கிடைத்தாலும்கூட ஏன் நாம் ஒரு உண்மையைச் சொல்லி லீவு கேட்டபோது, அதற்கு அபராதம் கட்ட வேண்டும் என்ற பிடிவாத குணம் காரணமாக ஒரு அணா கட்ட முடியாது என்றார். ஒவ்வொரு நாளும் இந்த ஒரு அணா அபராதமாக ஒரு அணா வீதம் சேர்ந்து ஒரு மாத காலத்திலே முப்பது அணாக்களுக்குமேல் அது ஆகிவிட்டது. கடைசியாக அவரை அழைத்து விசாரித்தபோது இன்னென்னார் வயிற்று வலி என்றும், தலைவலி என்றும், பாட்டி செத்து விட்டார் என்றும், பொய்க் கடிதங்களை காரணங்களாகச் சொல்லி அவர்கள் லீவு கேட்டார்கள். பொய்யர்களுக்கு நீங்கள் கிரிக்கெட் பார்க்க அனுமதி கொடுத்திருக்கிறீர்கள். நான் உண்மையைச் சொல்லி கிரிக்கெட் பார்க்க என்று லீவு கேட்டால் உண்மையானவனுக்கு லீவு கொடுக்க மறுத்து விட்டீர்கள். அதனால்தான் அந்த ஒரு அணா அபராதத்தை நான் கட்ட மறுத்தேன் என்று சொன்னவுடன், அத்தனை ஆசிரியர்களும் அவருடைய வாய்மையைப் பாராட்டி, அவரை அந்த அபராதமே கட்ட வேண்டாம் என்று சொல்லி, கல்லூரியில் அனுமதித்தார்கள் என்பது அவருடைய இளமைக்கால வரலாற்றிலே ஒரு எழுச்சிமிக்க செய்தியாகும்.

இதனை நான் சொல்லுவதற்குக் காரணம், அப்பொழுதே உண்மையை உரைத்து, வாய்மைக்கு வாய்ப்பளித்து, வாய்மையின்படி நடந்து, தவறு இழைக்காமல், தண்டனை வந்தாலும் பரவாயில்லை என்று தைரியமாகப் போரிட்ட அந்த போராட்டக் குணம் இளமைக் காலத்திலே தேவர் அவர்களுக்கு இருந்தது என்பதற்கு இது ஒரு அடையாளமாகும்.

அப்படிப்பட்ட தேவருடைய சிலையைத்தான் இங்கே நாம் திறந்து வைத்திருக்கிறோம். இந்த நல்ல நாளில் அவருடைய புகழைப் பேசுகிற நாளில் தமிழக மக்கள் அன்றைக்கு இந்தியா விடுதலை பெறவேண்டும், சுதந்திரம் பெறவேண்டும் என்று எதற்காக அவர்களெல்லாம் போரிட்டார்களோ, பாடுபட்டார்களோ அது நிறைவேறி இத்தனை ஆண்டுகளுக்குப் பிறகு இடையிடையே ஏற்பட்ட பல சங்கடங்களால் காலதாமதங்களால் கவலையற்ற தன்மைகளால் முந்தைய ஆள வந்தவர்களுடைய அலட்சியத்தால் மத்தியிலும் சரி, மாநிலத்திலும் சரி, மொத்த இந்தியாவின் மக்கள் கவனிக்கப்படாமல் குறிப்பாக ஏழை எளியவர்கள், நடுத்தர மக்கள், நலிந்த பிரிவினர், பிற்படுத்தப்பட்ட மக்கள், மிகவும் பிற்படுத்தப்பட்ட மக்கள், ஆதிதிராவிட மக்கள், தொழிலாளத் தோழர்கள் இவர்களெல்லாம் கவனிக்கப்படாமல் அவர்கள் வேதனையிலே, இத்தனை ஆண்டுகாலம், பல ஆண்டுகாலம், வாடிட நேரிட்டது.

எதற்காக சுதந்திரம் பெற்றார்களோ, அந்த சுதந்திரத்தினுடைய சுகத்தை யாரும் சரியாக நூற்றுக்கு நூறு அனுபவிக்க முடியவில்லை. ஆனால் யார் அனுபவித்தார்கள் என்றால் நான் நேற்றைக்கு ஒரு புள்ளி விவரத்தை எடுத்து படித்துப்பார்த்தேன். இந்தியாவில் ஒரு இலட்சத்து 17 ஆயிரம் கோடி ரூபாய் அளவிற்கு வருமான வரி கட்டாதவர்கள் இன்றைக்கு இருக்கிறார்கள் என்பதால் அந்த அளவிற்கு வருமான வரிப் பணம் அரசுக்கு வராமலே இன்றைக்கு ஏமாற்றப்பட்டிருக்கிறது. கோடிக்கணக்கான ஏழை எளிய மக்கள் விவசாயப் பெருங்குடி மக்கள், குடிசையிலே வாழ்வோர், ஒழுங்காக வரி செலுத்துவோர், இவர்களெல்லாம் ஆளப்படுகிறார்கள். இப்படி ஆளப்படுகின்ற மக்களுக்கு அவர்களுடைய தேவைகளை வழங்க, நிறைவு செய்ய, ஒரு அரசு தன்னுடைய பொருளாதாரத்தை நிதி ஆதாரத்தை வளமாக வைத்துக் கொள்ள வேண்டும்.

இல்லாதவர்கள் இடத்திலே இருந்து சுரண்டுவதற்குப் பதிலாக இருப்பவர்களிடம் இருந்து எடுத்து இல்லாதவர்களுக்கு கொடுக்க வேண்டும், அதுதான் இறைவனுடைய தத்துவம், இறைவன் என்பது ஒரு உருவம் அல்ல, இறைவன் என்றால் அதற்கு நாலுகால், நாலுகை, எட்டுத்தலை அதுதான் இறைவன் என்பது அல்ல. இறைவன் என்பது ஏழையின் சிரிப்புத்தான் இறைவன் என்றார் அண்ணா. அந்த ஏழையின் சிரிப்பைக் காண ஏழு அடுக்கு மாளிகையிலே வாழுகிறானே அவன் உதவ வேண்டும். அவனையும் இந்த ஏழையையும் சமநிலைக்குக் கொண்டு வரவேண்டும். அதைத்தான் நான் 'பராசக்தி' படத்திலேகூட கடைசிக் காட்சியிலே சொன்னேன். மாளிகைகளெல்லாம் மண் மேடுகளாக ஆக வேண்டும் என்று சொல்லவில்லை, மண்மேடு, மாளிகை உயரத்திற்கு உயர வேண்டும். இரண்டும் சமமாக வேண்டும் ஏழையும், பணக்காரனும் சமமாக வேண்டும். அந்த சமத்துவத்தைத்தான் நாடு காணவேண்டும் என்று சொன்னேன். அப்படிப்பட்ட சமத்துவத்தைக் காண வேண்டுமேயானால்.

"சிற்றூரும் வரப்பெடுத்த வயலும்
ஆறு தேக்கிய நல் வாய்க்காலும்
நெற்சேர உழுதுழுது பயன் விளைக்கும்
நிறையுழைப்புத் தோள்கள்"

பூரிக்க வேண்டுமேயானால், பாட்டாளி பரவசம் அடைய வேண்டுமேயானால், ஏழை வீட்டில் விளக்கெரிய வேண்டுமேயானால், ஏழைத்தாய் தன்னுடைய மகனுக்கு ஆடம்பரமாக இல்லாவிட்டாலும், சுமாராகவாவது, ஒரு திருமணத்தை நடத்தி வைக்க வேண்டுமேயானால், அவர் கஷ்டப்படாமல், கண்ணீர் மல்காமல் அந்தக் காரியத்தை நடத்த அவர்களுக்கு சமநிலை – தமிழகத்திலே மாத்திரமல்ல, குமரிமுனையில் இருந்து இமயமலை வரையிலே உள்ள இந்திய பிரதேசத்தில், இந்திய மண்ணில் ஏற்பட்டாக வேண்டும்.

அந்தச் சமநிலை ஏற்பட முடியாமல் பணத்தை சுருட்டி வைத்திருப்பவன் கருப்புப் பணம் வாங்குகின்றவன், கள்ள மார்க்கெட் நடத்துகின்றவன் இவர்களெல்லாம் குவித்து வைத்திருக்கின்ற பணம், அரசுக்குச் செலுத்தாமல் வீட்டிலே ஒளித்து வைத்திருக்கின்ற பணம், புதைத்து வைத்திருக்கின்ற பணம், நான் சொன்ன கணக்கின்படி ஒரு இலட்சத்து 17 ஆயிரம் கோடி ரூபாய். இந்த ஒரு இலட்சத்து 17 ஆயிரம் கோடி ரூபாயை இந்திய அரசு கொஞ்சம் தீவிரமாக, கொஞ்சம் வேகமாக, விறுவிறுப்பாக, விரைவாக, தோண்டி எடுக்கிற, வெளியில் கொண்டு வருகின்ற அந்த முயற்சிகளை மேற்கொள்ளுமேயானால் இந்தியா மற்ற நாடுகளைப்போல குறைவான மக்கள்தொகை கொண்ட நாடு அல்ல, இது நூறு கோடியை இன்றைக்கு எட்டிக் கொண்டிருக்கிறது. கிரிக்கெட்டிலே கேள்விப்படுகிறோமே, பார்க்கிறோமே, செஞ்சுரி அடித்தார் டெண்டுல்கர், செஞ்சுரி அடித்தார் கங்குலி என்றெல்லாம் படிக்கிறோமே, கேள்விப் படுகிறோமே, இந்தியா மக்கள் தொகையில் இப்பொழுது செஞ்சுரி அடித்து அதையும் தாண்டி ரன் ஓடிக் கொண்டிருக்கிறது.

ஆகவே இவ்வளவு பெரிய நாட்டிலே உள்ள மக்கள், கோடிக்கணக்கான மக்கள் வாழ ஒரு இலட்சத்து 17 ஆயிரம் கோடி முடங்கிக் கிடக்கிறதே அது வெளியிலே கொண்டு வரவேண்டும். அதையெல்லாம் முடக்கி விட்டு மக்களைப்பார்த்து நான்தான் புனிதன், புத்தன் நான்தான் மக்களுக்காக என்னை அர்ப்பணித்துக் கொண்டவன், நான்தான் சமதர்ம சஞ்சீவி, என்னால் எதுவும் முடியும், என்னை கொஞ்சம் ஆளவிட்டுப் பாருங்கள். நான் என்ன செய்கிறேன் பாருங்கள், என்றெல்லாம் கருப்புப் பணத்தை ஒளித்து வைத்திருப்பவர்கள் சொல்லிக் கொண்டிருக்கின்ற பித்தலாட்டக்காரர்கள் இன்றைக்கு நாட்டிலே தோன்றி இருக்கிறார்கள். அவர்களுக்கெல்லாம் பாடம் போதிக்க இரத்தினவேலு தேவருக்கு இருந்த நெஞ்சுரம் உங்களுக்குத் தேவை, தமிழ்நாட்டு மக்களுக்குத் தேவை, அந்த நெஞ்சுரத்தைப் பயன்படுத்தி போலிகளை அடையாளம் காணுங்கள், மக்களை ஏமாற்றுகின்ற மதோன் மத்தர்களை மக்களுக்கு காட்டிக் கொடுங்கள். நாடு வாழ, நலிவு தீர, இரத்தினவேலு தேவர் சிலைக்கு நேராக சபதம் எடுத்துக் கொள்ளுங்கள், சூளுரையுங்கள் என்று கேட்டுக்கொள்கிறேன்.

– திருச்சிராப்பள்ளியில்
28.01.2007 அன்று நடைபெற்ற
இரத்தினவேல் தேவர் சிலை திறப்பு விழாவில்
மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள்
ஆற்றிய உரை.

* * *

# சுனாமியால் பாதிக்கப்பட்டோருக்கு அரசின் சார்பில் இந்த ஆண்டில் மேலும் 32,668 வீடுகள் கட்டி முடிக்கப்படும்

## மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் மு. கருணாநிதி அவர்கள் அறிவிப்பு



இன்று ஒரு மகிழ்ச்சிகரமான நாள். மகிழ்ச்சி அன்பு காட்டுவதிலும் ஏற்படும். ஆறுதல் கூறுவதிலும் ஏற்படும். அப்படி ஆறுதல் கூறுகின்ற பொறுப்பை ஏற்று; இழப்பவர்களுக்கு ஈடுசெய்யக் கூடிய வாய்ப்பை உருவாக்கி, அந்த வாய்ப்பே தானாக மாறி அவர்களுக்கு–வாடுகின்றவர்களுக்கு வீடுகளை வழங்க வந்துள்ள அம்மா அவர்களை உங்களோடு சேர்ந்து நானும் வருக வருக என்று வாழ்த்திப் பாராட்டி மகிழ்கின்றேன்.

அம்மா அவர்கள் கேரள மாநிலத்திலே கொல்லம் மாவட்டத்தில் இருக்கும் பரையக்கடவு என்னும் கடலோர மீனவ கிராமத்திலே உதித்தவர்கள். கடலோரத்தில் என்ன உதிக்கும் ? பொதுவாக முத்து

உதிக்கும். அதனால்தான் முத்தாக அவர்கள் நமக்கெல்லாம் கிடைத்திருக்கிறார்கள். அந்த முத்து, நன்முத்தாக அருள் முத்தாக ஏழைக்கு இரங்குகின்ற முத்தாக, நோய் வாய்ப்பட்டோருக் கெல்லாம் இரக்கம் காட்டுகின்ற முத்தாக, குழந்தைகளை பேணிப் பாதுகாக்கின்ற முத்தாக, குடிசைகளை வாழ்விக்கின்ற முத்தாகத் தன்னை ஆக்கிக் கொண்டு, தொண்டுள்ளதோடு பணியாற்றி வருகிறார்கள்.

இவர் ஆற்றி வருகின்ற பணிகளால் கேரளம், தமிழகம் உள்ளிட்ட இந்திய மாநிலங்களிலும், அயல்நாடுகளிலும் அன்பர்கள் ஆயிரக்கணக்கில், இலட்சக்கணக்கில் பரவி உள்ளனர். அவர்கள் அளித்து வரும் நன்கொடைகள் மூலமாக மனிதாபிமான உணர்வுகளின் அடிப்படையில் பாராட்டத்தக்க வகையிலே அம்மையார் தொண்டு புரிந்து வருகிறார்கள்.

கேரளாவில் ஆதரவற்ற குழந்தைகள் இல்லம் – முதியோர் இல்லம், உயர்தர இலவச மருத்துவமனை முதலியவற்றை நடத்தி வருகிறார். அமெரிக்காவில் கத்ரினா சூறாவளியால் பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவிட கிளிண்டன், புஷ் பவுன்டேஷன்களுக்கு ஒரு மில்லியன் டாலர் நிதி வழங்கியுள்ளார்கள் என்பதைக் கேட்டு நான் மிகுந்த மகிழ்ச்சிடைகிறேன்.

குஜராத் பூகம்பத்தால் பாதிக்கப்பட்ட கட்ச் மாவட்டத்தில் மூன்று கிராமங்களை பதினைந்து கோடி ரூபாய் செலவில் புதுப்பித்து, வீடுகளும், சமுதாயக் கூடங்களும், பள்ளிகளும் கட்டியுள்ளார்கள். காஷ்மீர் பூகம்ப நிவாரணத்திற்கு 50 இலட்சம் ரூபாய் செலவில் உதவிகள் வழங்கியுள்ளார். விதவைப் பெண்களின் முன்னேற்றத்திற்காக கேரளா – தமிழகம் உள்ளிட்ட பல மாநிலங்களிலும் பல உதவிகளைச் செய்து வருகிறார்கள். ஆண்டுதோறும் ஏழை எளியோர்களுக்கு பத்தாயிரம் வீடுகள் கட்டும் திட்டம் ஒன்றையும் செயல்படுத்தத் தொடங்கியுள்ளார். மனிதாபிமான உணர்வுகளை சமுதாயத்தில் வளர்ப்பதில் மாதா அவர்கள் ஆற்றிவரும் பணிகள் என்றும் பாராட்டுதற் குரியவை.

தமிழகத்தில் ஏற்பட்ட சுனாமி கொடுமைக்கு வருந்தி நாகப்பட்டினம் உட்பட பல பகுதிகளிலும் 80 கோடி ரூபாய் மதிப்பில் இலவசமாக வீடுகளும் மீன்பிடிப் படகுகள் போன்ற பிற சாதனங்களும் அம்மையார் அவர்களால், வழங்கப் பட்டிருக்கின்றன. தமிழகத்திலே சுனாமியால் ஏற்பட்ட பாதிப்புகளையும் அந்த பாதிப்புகளுக்கு ஆட்பட்ட மக்களுக்கு ஆறுதல் வழங்க, அரசின் சார்பில் அளிக்கப்பட்ட நிவாரணங்களையும் பல தொண்டு நிறுவனங்களின் சார்பாக அளிக்கப்பட்ட நிவாரணங்களையும் நீங்களெல்லாம் மிக நன்றாக அறிவீர்கள்.

2004ஆம் ஆண்டு 26.12.2004 அன்று சுனாமி பேரலை சீற்றத்தால், தமிழகத்தில் 13 கடலோர மாவட்டங்கள் பாதிக்கப்பட்டன.

238 கிராமங்கள் 418 குடியிருப்புகள் அழிந்தன.

7,995 மனித உயிர்கள் பறிக்கப்பட்டன.

223 குழந்தைகள் பெற்றோர்களை இழந்து ஆதரவற்றவராயினர்.

1,495 குழந்தைகள் பெற்றோரில் தாயை அல்லது தந்தையை இழந்தனர்.


846 பேர் காணாமலே போயினர்.


3,504 பேர் பலத்த காயமடைந்துள்ளனர்.

45,892 வீடுகள் முற்றிலும் அழிந்தன.

11,662 வீடுகள் பெரும்பகுதி சேதமடைந்தன.

ஏறத்தாழ ஐந்து இலட்சம் பேர் குடியிருப்புகளை விட்டு வெளியேறினர்.





10 இலட்சத்திற்கும் மேற்பட்ட மக்கள் கடுமையான பாதிப்புக்கு ஆளாகினர்.

16,000 கால்நடைகள் அழிந்தன.

42,178 மீன்பிடிப் படகுகள் முழுவதும் சேதமடைந்தன.

8,900 மீன்பிடிப் படகுகள் ஓரளவு சேதமடைந்தன.

3 இலட்சம் மீனவக் குடும்பங்கள் தொழில் வாய்ப்புகளை இழந்தன. 4,250 கோடி ரூபாய் அளவுக்கு இழப்பு ஏற்பட்டது.

14 சிறு துறைமுகங்கள் மீன் இறங்கு தளங்கள் பாதிக்கப்பட்டன.

சுனாமி தாக்குதலால் சுருண்டு கிடந்த மக்களை அன்றைய அரசு, கடந்த காலத்து அரசு உடனடி உதவிகள் செய்து, அவர்களுக்கு உதவி புரிந்தது என்றாலும், நிலையான நிரந்தரமான, அமைதியான வாழக்கூடிய சூழ்நிலையை அவர்கள் உருவாக்கவில்லை. ஒருவேளை அதற்கிடையே தேர்தல் வந்து, அந்தத் தேர்தல் பணிகளிலே ஈடுபட்ட காரணத்தால், அன்றைய அரசு அந்தப் பணிகளைத் தொடர முடியவில்லை. 24.12.2004 சுனாமி பேரலையால் தமிழகம் பெரிதும் பாதித்தது.

## அரசின் முயற்சியால் கட்டி முடிக்கப்பட்ட வீடுகள்

சுனாமி நிவாரணப் பணிகளுக்காக மத்திய அரசிடமிருந்து ராஜீவ் காந்தி மறுவாழ்வு திட்டத்தின்கீழ், ரூபாய் 2,347 கோடி பன்னாட்டு உதவிகளின் மூலமாக 2,550 கோடி ரூபாயும் ஆக மொத்தம் 4,897 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு பெறப்பட்டது. அப்படிப் பெறப்பட்ட நிதியை தற்காலிக அவசர நிவாரணத்திற்குத்தான் அன்றைய அரசு பயன்படுத்த முடிந்ததே தவிர, நிலையான, நிரந்தரமான காரியங்களுக்கு பயன்படுத்தவில்லை. காரணம், அந்த 4,897 கோடி ரூபாய் அடங்கிய அந்தக் கோப்புகள் எல்லாம் கூட சுனாமி களைப்பில் தூங்கிக் கொண்டிருந்தன. அந்தக் கோப்புகள் செயல்படவில்லை.

எனவே அதற்குப் பிறகு ஆட்சிக்கு நாங்கள் வந்தோம். 17 மாதங்கள் அவர்கள் ஆட்சியிலே இருந்த பிறகு, ஆட்சிக்கு வந்த நாங்கள்,

பாதிக்கப்பட்ட மாவட்டங்களின் ஆட்சித் தலைவர்களையெல்லாம் அழைத்து ஆய்வு நடத்தி என்னென்ன பாதிப்புகள், யார் யாருக்கு எந்தெந்த வகையிலே ஏற்பட்டிருக்கிறது என்பதையெல்லாம் கண்டுபிடித்து சுனாமி மறுவாழ்வு சீரமைப்புப் பணிகள் குறித்து நடத்திய ஆய்வின் பயனாக எல்லா மாவட்டங்களிலும் அதிகாரிகள் முடுக்கி விடப்பட்டார்கள். 31.12.2006 வரை நாங்கள் எடுத்த முயற்சிகளின் காரணமாக 18,828 வீடுகள் கட்டி முடிக்கப்பட்டிருக்கின்றன என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலும் இந்த நிதியாண்டின் இறுதிக்குள் அந்த ஆய்வில் நாங்கள் எடுத்த முடிவின்படி 32,668 வீடுகள் கட்டி முடிக்கப்படும் என்பதை நான் அம்மையார் அவர்களுக்கும், உங்களுக்கும் தெரிவித்துக் கொள்கிறேன்.

### அழகான வீடுகள்

தொண்டு நிறுவனங்கள் கட்டுவதாக உறுதியளித்து இன்னும் கட்டப்பட இயலாத 3,000 வீடுகளை கட்டிமுடிக்க 63 கோடி ரூபாய் செலவாகும் என்று மதிப்பீடு செய்யப்பட்டு,அரசின் சார்பிலேயே அதனைச் செய்ய ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டிருக்கின்றன என்பதையும் நான் இங்கே தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

அம்மா அவர்களுடைய அறக்கட்டளையின் சார்பாக கட்டப்பட்டுள்ள வீடுகள் இன்றைக்கு திறந்து வைக்கப்பட்டுள்ளன. அந்த வீடுகளை முதலில் நான் தொலைவில் இருந்து பார்த்தபோதே நான் மகிழ்ந்து போனேன், பூரித்துப் போனேன். இவ்வளவு அழகான வீடுகள், நமக்கொன்று கொடுத்தால் கூட நன்றாக இருக்கும் போலிருக்கிறதே என்று எண்ணுகின்ற அளவிற்கு அவ்வளவு அழகான வீடுகள் இங்கே கட்டப்பட்டுள்ளன. அப்படி பார்த்தபோது எனக்கேற்பட்ட பரவசத்தால், எனக்கேற்பட்ட ஆர்வத்தால் காரை அந்த இடத்திற்கே விடச் சொல்லி, அந்த வீடுகளைப் பார்த்து விட்டு, அதிலே ஒரு வீட்டின் உள்ளேயே சென்று நாங்கள் பார்த்தோம். மிக அழகாக, அதே நேரத்தில் வசதியாக, வாழ்வதற்கேற்றதாக அந்த வீடுகள் அமைந்துள்ளன. அந்த வீடுகளிலே மீனவ மக்கள், பாதிக்கப்பட்ட மக்கள், ஏழையெளிய மக்கள் வாழப்போகிறார்கள் என்பதை எண்ணிப் பார்க்கும்போது நான் மிகுந்த நம்பிக்கை கொண்ட பூரிப்பும், மகிழ்ச்சியும் அடைகிறேன்.

### ஏழைகளுக்கு இலவச வீடுகள்

சுனாமியால் பாதிக்கப்பட்ட இத்தகைய வீடுகளை கண்டறிய விரிவான கணக்கெடுப்புப் பணிகளை மேற்கொள்ள தேவைப்படும் நிலங்களைக் கையகப்படுத்த 30 கோடியே 12 இலட்சம் ரூபாய் அரசின் சார்பில் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இவ்வாறு வீடுகளைக் கட்டுவதற்கான முயற்சிகளில் ஈடுபட்டு என்னதான் அரசு திட்டங்களைத் தீட்டினாலும், ஏன் நம்முடைய அம்மையார் அவர்களின் மடத்தின் சார்பிலே கூட திட்டங்களைத் தீட்டினாலும் அடுத்த வரிசையில் இருக்கின்ற அதிகாரிகளின் ஒத்துழைப்பு, அவர்களின் வேகம் இருந்தால்தான் இவைகள் விரைவில் முடிவடைய முடியும். நான் அரசின் சார்பில் அதிகாரிகளைக் கேட்டுக்கொள்வேன். விரைவில் இந்த வீடுகள் எல்லாம் கட்டி முடிக்கப்பட வேண்டும்.

இது தவிர, ராஜீவ் காந்தி சுனாமி மறுவாழ்வுத் திட்டத்தின் கீழ், 550 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 22,000 வீடுகள் கட்ட தற்போது ஒரு திட்டம் தீட்டப்பட்டுள்ளது. நான் டெல்லிக்குச் சென்றபோது இந்தத் திட்டத்தை வகுத்துக் கொண்டிருந்தார்கள். அப்போது நான்தான் இந்தத் திட்டத்திற்கு "ராஜீவ் காந்தி சுனாமி மறுவாழ்வுத் திட்டம்" என்று பெயர் வைக்கலாம் என்று சொன்னேன். அது ஏற்றுக் கொள்ளப்பட்டு இந்தத் திட்டம் தீட்டப்பட்டு, விரைவில் இது நடைமுறைக்கு வரவிருக்கிறது என்பதையும் நான் மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

அது மாத்திரமல்ல, இங்கே மாதா அமிர்தானந்தமயி மடத்தின் சார்பாக அதன்

அறங்காவலர் என்னிடம் ஒரு கடிதம் கொடுத்திருக்கிறார். அந்தக் கடிதத்தில், மாதா அமிர்தானந்தமயி மடம் ஏழைகளுக்காக "அமிர்த குடீரம்" என்ற பெயரில் இலவச வீடுகளைக் கட்டிக் கொடுத்து வருகிறது. 220 சதுர அடி பரப்பில் ஒரு சிறிய அறை, தனிச் சமையல் அறை, குளியல் அறை மற்றும் கழிவறை வசதிகளுடன் இந்த வீடுகள் கட்டப்படுகின்றன. மாண்புமிகு முதல்வர் அவர்கள் விரும்பினால் தமிழ்நாட்டில் இலவசமாக மனை வழங்கும் பகுதிகளில், மாதா அமிர்தானந்தமயி மடம் இதைப் போல 500 வீடுகள் கட்டிக் கொடுக்க "தாயாராக" உள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறது" என்று எழுதிக் கொடுத்திருக்கிறார்கள்.

நான் தமிழில் எது வந்தாலும் அதைப் படிக்கும்போது "ப்ரூப்" பார்க்கும் வழக்கம், அதாவது எழுத்துப் பிழை இருக்கிறதா என்று பார்ப்பது வழக்கம். பிழை கூட நாம் போற்றத்தக்க வகையில் இந்தக் கடிதத்தில் அமைந்திருக்கிறது. அதாவது "இதைப் போல 500 வீடுகள் கட்டிக் கொடுக்க தயாராக உள்ளது" என்பதற்குப் பதிலாக "தாயாராக உள்ளது" என்று எழுதியிருக்கிறார்கள். ஏன் என்றால், இது மாதா மடம் அல்லவா? அதனால் "தாயாராக" உள்ளது என்று எழுதியிருக்கிறார்கள். அம்மா, நீங்கள் தாயாராகவே இருந்து, தமிழ்நாட்டு மக்களுக்கு – தமிழ்நாட்டு மக்களும் கேரளத்து மக்களைப் போன்றவர்கள்தான் – எப்படி ஐரோப்பா கண்டத்தில் இருக்கின்ற மக்களையெல்லாம் உங்களின் மக்களாகக் கருதுகிறீர்களோ, அதைப்போல இங்கே உள்ள மக்களையும், உங்கள் மக்களாகவே கருதி, இந்த 500 வீடுகள் அல்ல, இதை நாங்கள் மகிழ்ச்சியோடு ஏற்றுக் கொள்கிறோம் – தொடர் முயற்சியாக ஒரு அரசே எல்லா காரியங்களையும் மக்களுக்காக செய்து விட முடியாது.

அரசு மக்களிடத்தில் வரி வாங்குகிறது, அந்த வரியை மக்களுக்கே திருப்பித் தருகிறது. அதைப்போலத்தான் தங்களுக்கும் மக்கள் காணிக்கை அளிக்கிறார்கள். அந்தக் காணிக்கையை நீங்கள் மக்களுக்கே திருப்பி அளிக்கிறீர்கள். அதைத்தான் ஏழை மக்களுக்கு – அவர்களின் சிரிப்பைக் காண்பதற்கு நீங்கள் செலவழிக்கிறீர்கள். உங்கள் சிரிப்பே கவர்ச்சிகரமானது, அதைப்போல ஏழை மக்களை நீங்கள் சிரிக்க வைத்தால், அந்தச் சிரிப்போடு இணைந்து உலகமே கவர்ச்சிகரமாக இருக்கக்கூடிய அளவிற்கு உங்கள் சிரிப்பு அமைந்திருக்கின்றது. "ஏழையின் சிரிப்பில் இறைவனைக் காண்போம்" என்றார் எங்களை ஆளாக்கிய அண்ணா, அண்ணாவை உருவாக்கிய பெரியார். அவர்கள் இருவரும் சேர்த்த அந்த இலட்சியங்களை உங்களிடம் எடுத்துச் சொல்லி, நீங்கள் வழங்குகின்ற இந்த வீடுகளை மகிழ்ச்சியோடு, நன்றியோடு பெற்றுக்கொள்கிறோம்.

விதவைகள், ஊனமுற்றோருக்கு 50 ஆயிரம் பேருக்கு மாதா மாதம் ரூபாய் 150 வீதம் உதவித் தொகை வழங்கி வருவதாகவும், அந்தத் திட்டத்தின் கீழ் நாகப்பட்டினம் மாவட்டத்திலும் உதவி வழங்க அதனைத் தொடங்கி வைக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டிருக் கின்றீர்கள்.

அது போலவே சுயதொழில் தொடங்கும் திட்டத்தின் கீழ் ஏழைகளுக்கு இலவச தையல் இயந்திரம் வழங்கும் திட்டத்தையும் தொடங்கி வைக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டிருக்கிறீர்கள். அதனைத் தொடங்கி வைப்பதில் எனக்கென்ன ஆட்சேபணை? அவற்றைத் தொடங்கிவைத்து அனைவருக்கும் நன்றி கூறி, அம்மையார் அவர்களுக்கும் நன்றி தெரிவித்து விடைபெறுகிறேன்.

*31–1–2007 அன்று நாகப்பட்டினத்தில் சுனாமியால் பாதிக்கப்பட்டோருக்காக மாதா அமிர்தானந்தமயி மடம் சார்பில் கட்டப்பட்ட வீடுகளை திறந்துவைத்து மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் ஆற்றிய உரை.*

# தமிழகத்திலுள்ள ஏழை எளிய தாய்மார்களுக்காக தமிழக அரசு எண்ணற்ற சாதனைகளை செய்து வருகிறது

*மாண்புமிகு தமிழக முதலமைச்சர்*
***கலைஞர் மு. கருணாநிதி** அவர்கள்*

நடைபெற்றுக் கொண்டிருக்கின்ற இந்த நல்ல நிகழ்ச்சியில் நம்முடைய மத்திய பெட்ரோலியத் துறையின் அமைச்சர் அவர்கள் கலந்துகொண்டு தமிழக அரசு மக்களுக்காக ஆற்றுகின்ற இந்தப் பணிக்கு தங்களுடைய ஒத்துழைப்பு என்றைக்கும் இருக்கும் என்ற நம்பிக்கையை வழங்கியமைக்காக நான் என்னுடைய நன்றியை உங்கள் சார்பாக அவருக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

நாம் பொறுப்பேற்று ஓராண்டு முடிவதற்குள்ளாக பல வாக்குறுதிகளை நிறைவேற்றியிருக்கிறோம். கடந்த சட்டமன்றத் தேர்தலில் தோழமைக் கட்சிகளோடு இணைந்து திராவிட முன்னேற்றக் கழகம் அரசு அமைப்பதற்கு முன்பு, ஆற்றிய தேர்தல் பணிகளினூடே நாம் வெளியிட்ட தேர்தல் அறிக்கை மிக முக்கியமாக மக்களைக் கவர்ந்த ஒன்றாகும். கவர்வதற்காக அல்ல, மக்களுடைய கவலைகளைத் தீர்ப்பதற்காக, கஷ்டங்களைப் போக்குவதற்காக, அவர்களுடைய தலையிலே ஏற்றப்பட்டிருக்கின்ற கனமான சுமைகளைக் குறைப்பதற்காக அளிக்கப்பட்ட வாக்குறுதிகள் அந்த



வாக்குறுதிகள் அளிக்கப்பட்ட போது, தேர்தல் நேரமாக இருந்த காரணத்தால் நாமும் பிறரும் வாக்காளர்களைச் சந்திக்கின்ற அந்த வாய்ப்பில் மக்களைச் சந்தித்த அந்தக் காலக் கட்டத்தில் நம்மைப் பற்றி என்ன தவறான பிரச்சாரம் நடைபெற்றது என்பதையெல்லாம் நீங்கள் மறந்திருக்க மாட்டீர்கள். வாக்குறுதிகள் காற்றிலே பறந்து விடும் என்றுதான் உங்களுக்குச் சொல்லப்பட்டது. ஆனால் அளிக்கப்பட்ட வாக்குறுதிகள் அவர்கள் சொன்னபடி காற்றிலே பறந்தது உண்மை, ஆனால் பறந்த வாக்குறுதிகள், பறந்து வந்து உங்களுடைய இல்லங்களிலே ஒட்டிக் கொண்டிருக்கின்றது, உள்ளங்களிலே ஒட்டிக் கொண்டிருக்கிறது என்பதை கண்கூடாகக் காண்கிறீர்கள்.

அந்த நிகழ்ச்சிகளிலே ஒன்றுதான் இன்றைக்கு இங்கே நடைபெற்றுக் கொண்டிருக்கின்ற நிகழ்ச்சியாகும். பதவியேற்ற முதல் நாள் பெருமக்கள் எல்லாம் குழுமியிருந்த மேடையில், அதே நாளில், அளிக்கப்பட்ட வாக்குறுதிகளை நிறைவேற்றிய வரலாற்றை உருவாக்கிய ஆட்சி, இந்த ஆட்சிதான் என்பதை நீங்கள் அறிவீர்கள். பதவியேற்ற மேடையிலேயே 7,000 கோடி ரூபாய் விவசாயிகளுடைய கூட்டுறவு கடன்கள் ரத்து என்று அறிவிக்கப்பட்டதும், அரிசி கிலோ இரண்டு ரூபாய்க்குக் கொடுக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டதும், ஏழையெளிய இளஞ்சிறார்க்கு பள்ளிகளில் பரிமாறப்படும் சத்துணவோடு நிறுத்தப்பட்டிருந்த முட்டைகள், இனிமேல் வாரம் இரண்டு முட்டைகளாக வழங்கப்படும் என்று அறிவித்த இந்த மூன்று வாக்குறுதிகளும் நாங்கள் பதவியேற்ற முதல் நாளே நிறைவேற்றப்பட்டதை யாரும் மறந்திருக்க முடியாது.

தொடர்ந்து மாதந்தோறும், வாரந்தோறும் ஏன் நாள்தோறும் கூட சாதனைகள் இன்றைக்கு இந்த அரசின் சார்பில் ஆற்றப்படுகின்றன. நீங்கள் தெரிந்திருக்கிறீர்கள். ஆனால் இது சிலருக்கு சோதனைகளாக இருக்கின்றது. நம்முடைய சாதனைகள் சோதனைகளாக இருப்பதால், வேதனைகளை அறிக்கைகளாக விட்டுக் கொண்டிருக்கின்றார்கள். நான் அதற்காகக் கவலைப்படவில்லை. அவர்கள் வேதனைப்பட, வேதனைப்பட நான் உள்ளபடியே மகிழ்ச்சியடைகிறேன், ஏனென்றால் பிறர் வேதனையைக் கண்டு மகிழ்ச்சி அடைகின்ற அந்தக் குறுகலான மனம் எனக்கில்லை. அவர்கள் வேதனை அடைகின்ற அளவிற்கு நாம் சாதனை செய்கின்றோமே என்கின்ற அந்த மகிழ்ச்சிதான் எனக்கு. அந்த மகிழ்ச்சி எனக்கு ஏற்படுத்த காரணமாக இருந்தவர்கள்தான், என் எதிரே இங்கே அமர்ந்திருக்கிறீர்கள். தமிழகம் முழுவதும் நிறைந்திருக்கின்றீர்கள். நம்முடைய மத்திய அமைச்சர் இங்கே சொன்னார்கள். அண்மையிலே அவர் டெல்லியிலே என்னைச் சந்தித்தபோது, தமிழ்நாட்டில் இன்னும் பல முன்னேற்றங்களை, நலத் திட்டங்களைக் கொண்டுவர வேண்டுமென்பதிலே நான் எவ்வளவு அக்கறை உடையவனாக இருக்கிறேன் என்பதை அவர்கள் இங்கே எடுத்துச் சொல்லி, அதற்கெல்லாம் நிச்சயமாக மத்திய அரசு உதவுமென்று குறிப்பிட்டார்கள். நேற்றைக்குக் கூட நான் என்னுடைய சொந்த ஊருக்குச் சென்றிருந்தேன். அங்கே புதிய ரெயில் பாதை ஒன்று தொடங்கப்பட்ட நிகழ்ச்சி. அந்த நிகழ்ச்சியிலே பேசும்போது கூடச் சொன்னேன். அதைப்பற்றி நம்முடைய நண்பர் பீட்டர் அல்போன்ஸ் அவர்கள் இன்று காலையிலே அமைச்சரிடத்திலே குறிப்பிட்டார். அகல ரெயில் பாதை தொடக்க விழா – இந்த ரெயில் பாதை தொடக்க விழாவைக் குறிப்பிட்டு நான் சொல்கிறேன் – மத்திய அரசும், மாநில அரசும் இந்த ரெயில் பாதையிலே இருக்கின்ற இரண்டு தண்டவாளங்களைப்போல இருந்தால், ஒழுங்காக இருந்தால், ரெயில் ஒழுங்காகச் செல்லும். அப்படித்தான் இந்த நாட்டை; இரண்டு தண்ட வாளங்களாக இருந்து பரிபாலிப்போம், நடத்துவோம், நன்மைகளைக் குவிப்போம் என்று சொன்னேன். அதைப்போல இந்த தண்டவாளங்கள் நம்முடைய அமைச்சர் முரளி தியோரா குறிப்பிட்டதைப் போல் மத்திய அரசு, மாநில அரசின் தேவைகளை உணர்ந்து, மாநில அரசின் கோரிக்கைகளுக்கு, நியாயமான கோரிக்கைகளுக்கு செவிசாய்க்க வேண்டும், நாங்கள் கேட்டுக் கொண்டேதான் இருப்போம், ஊத ஊதத் தான் நெருப்பு பற்றும். ஏனென்றால் இது அடுப்பு வழங்குகின்ற விழாவாக இருப்பதால் நான் சொல்கிறேன். ஆனால் ஊதாமலே நெருப்பு பற்ற வேண்டும் என்பதற்காகத்தான் இந்த அடுப்பைத் தருகிறோம். இதை நம்முடைய மாண்புமிகு மத்திய அமைச்சர் அவர்கள் புரிந்து கொண்டு, அடுப்பின் தேவை எங்களுக்கு இருக்கின்றது. நெருப்பின் தேவையும் எங்களுக்கு இருக்கின்றது. சமையலில் அவசியமும் எங்களுக்கு இருக்கின்றது.



அதெல்லாம் நடைபெற வேண்டுமேயானால், அவர்கள் ஊதிக் கஷ்டப்படாமலே, அப்படி ஊதுகின்ற காரணத்தால் உடல் நலத்தைக் கெடுத்துக் கொள்ளாமலே எப்படி ஒரு பெண்மணியினுடைய ஆசைகள், அடுக்களையிலே நிறைவேற வேண்டுமோ, அதைப்போல எங்களுடைய ஆவலும் நிறைவேறுவதற்கு மத்தியிலே இருக்கின்ற அரசு ஆவன செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

இந்த அரசு, நான் முதலிலே குறிப்பிட்டதைப் போல், வாக்குறுதிகளை நிறைவேற்றிய அந்த வரிசையிலேதான் பள்ளிக் குழந்தைகளுக்கு வாரம் இரண்டு முட்டைகள் மாத்திரமல்ல, வாடுகின்ற உழவர்கள், நிலமற்ற உழவர்களுக்கெல்லாம் நிலம் வழங்கப்படும் என்று சொன்னோம். என்ன சொன்னார்கள் எதிர்க்கட்சிக்காரர்கள்? நிலமே கிடையாது, எப்படி வழங்கப் போகிறார்கள் என்றார்கள்? இப்படி சொன்னவர்கள், இன்றைக்கு வெட்கப்படுகின்ற அளவிற்கு நாங்கள் மாவட்டந்தோறும் நிலங்களை வழங்கி வருகிறோம்.

இந்த ஆண்டு கூட இதுவரையிலே மூன்று மாதங்களுக்கு ஒரு முறை இரண்டு ஊர்களிலே நானே நிலத்தை வழங்கியிருக்கிறேன். நம்முடைய தமிழக அமைச்சர் பெருமக்கள் ஒவ்வொரு மாவட்டத்திற்கும் சென்று அங்கே நிலங்களை வழங்கியிருக்கிறார்கள். இதுவரை பல்லாயிரக்கணக்கானவர்கள், ஏழை நிலமற்ற விவசாயிகள் பயனடைந்திருக்கிறார்கள். நிலத்தை எப்படித் தருவாய், யாருக்குத் தருவாய் என்று கேட்டபோது, சட்டசபையிலே சொன்னேன். கையகல நிலம் இருந்தாலும், அதை ஒரு ஏழை உழவனுக்குத்தான் தருவேன் என்று குறிப்பிட்டேன். அப்படித்தான் இன்றைக்கு நிலமற்ற ஏழை உழவர்களுக்கு நிலத்தை வழங்கி வருகிறோம்.

இதையெல்லாம் விட முக்கியமாக வேலைவாய்ப்பு – ஒரு நாட்டில் அபரிமிதமாக இருக்க வேண்டும். ஆனால் இந்தியாவைப் பொறுத்தவரையில் அதிலே நாம் மகிழ்ச்சிகரமாக இல்லை. இந்தியா என்றால் தமிழ்நாடும் இணைந்ததுதான், எல்லா மாநிலங்களும் இணைந்ததுதான். தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில் இலட்சக்கணக்கான வாலிபர்கள் படித்து விட்டு பட்டம் பெற்று, வேலையில்லாமல் இருக்கிறார்கள். அவர்களுக்கெல்லாம் வேலை கிடைக்கின்ற வரையில், அவர்களுக்குப் படிப்படியாக 150 ரூபாய் என்றும், 200 ரூபாய் என்றும், 300 ரூபாய் என்றும் மூன்று மாதங்களுக்கு ஒரு முறை வழங்கப்படும் என்று சொல்லி அந்தத் தொகை அவர்களுக்கு வழங்கப்பட்டு வருகிறது, அதுவும் உங்களுக்குத் தெரியும்.

இன்றைக்குக் கூடப் பத்திரிகைகளிலே பார்த்தேன். ஏதோ விவசாயிகளுக்கு ஒரு திட்டம் கடந்த கால ஆட்சியிலே வைத்திருந்ததாகவும், அதை நாம் வேரோடு சாய்த்து விட்டதாகவும் ஒரு செய்தியைச் சொல்கிறார்கள். இல்லை, விவசாயிகளுக்காக ஒரு திட்டத்தை

அறிவித்ததே நான் தான் கடந்த காலத்தில். அந்தத் திட்டத்தை செம்மையாக நிறைவேற்றியதும் நாம் தான். அந்தத் திட்டம்தான் இப்போது மேலும் வலுப்பெற்று, மேலும் விரிவாக ஆக்கப்பட்டு, அந்தத் திட்டத்தின்படி நான் தாய்மார்களுக்குச் சொல்லிக் கொள்கிறேன். இன்றைக்கு இந்த அடுப்பு கொடுக்கிறோம், அதிலே உங்களுக்கு அக மகிழ்ச்சிதான். ஆனால் தாய்மார்களுக்கு அந்தத் திட்டத்தின்படி கொடுக்கப்பட்ட தொகையை விட கருவுற்ற தாய்மார்களுக்கு, அவர்கள் காலத்திலே இரண்டாயிரம் ரூபாய் தரப்பட்டதென்றால், ரூபாய் வீதம் ஆறாயிரம் ரூபாய் தருகிறோம் என்பதை நம்முடைய மத்திய அமைச்சர் மூலமாக மத்தியிலே உள்ளவர்களுக்கு தகவல் அனுப்ப விரும்புகிறேன்.

இதையெல்லாம் எண்ணிப் பார்த்து எங்களுக்கு வழங்குகின்ற திட்டத்தொகை, உதவித்தொகை இவைகளை மத்திய அரசு அதிகமாக வழங்க வேண்டும், நாங்கள் கேட்கும்போதெல்லாம் கொடுக்க வேண்டும், பணமாகக் கொடுக்காவிட்டாலும் திட்டங்களாகக் கொடுக்க வேண்டும், அந்தத் திட்டங்கள் தமிழகத்தை



இப்போது மாதந்தோறும் ஆயிரம் ரூபாய் வீதம் ஆறு மாதங்களுக்கு ஆறாயிரம் ரூபாய் ஒரு கர்ப்பஸ்திரிக்குத் தரப்படுகின்ற ஒரே மாநிலம் இந்தியாவிலே, ஏன் உலகத்திலேயே தமிழ்நாடுதான். அதற்காக கருவுறுவதற்கு யாரும் கவலைப்படத் தேவையில்லை. கவலைப்பட வேண்டாம் என்பதால், கருவுற்றுக் கொண்டே இருக்கவும் கூடாது. ஏனென்றால் குடும்ப நலத் திட்டத்தையும் மறந்து விடக் கூடாது. ஒரு நாட்டின் முன்னேற்றம் மக்கள் தொகையில் இருக்கிறது, அதையும் மறந்து விடக் கூடாது. காதலுக்கு வழி வைத்து, கருப்பாதை சாத்த, கதவொன்று கண்டறிவோம், அதில் என்ன குற்றம் என்றான் பாரதிதாசன். அந்தப் பாட்டையும் மறந்து விடாமல் குடும்ப நலத் திட்டத்தைக் காப்பாற்ற வேண்டும், அதே நேரத்திலே கருவுற்று விட்டால், அவள் ஏழைத் தாயாக இருந்தால், வேலை செய்து பிழைக்கின்ற பெண்ணாக இருந்தால், அந்தப் பெண், அந்தக் கருவைச் சுமந்து, அந்தக் குழந்தையை பிறக்கின்ற வரையிலே கிட்டத்தட்ட ஆறு மாதங்களுக்கு, முதலிலே மூன்று மாதம், குழந்தை பிறந்த பிறகு, குழந்தையை வளர்க்க மூன்று மாதம் என்று இந்த ஆறு மாதமும், மாதம் ஆயிரம் மேலும் மேலும் வளர்க்க, முன்னேற்றப் பயன்படக் கூடிய திட்டங்களாக இருக்க வேண்டுமென்பதற்காகத்தான் இதையெல்லாம் சொல்கிறேன்.

இந்தியாவிலே இருக்கின்ற எந்த மாநிலத்தையும் நான் ஆணவத்தோடு பேசவில்லை, அல்லது எங்களுக்கு யாரும் ஈடு அல்ல, இணை அல்ல என்கின்ற இறுமாப்போடு பேசவில்லை. நாங்கள் ஆற்றியிருக்கின்ற பணிக்கு எங்களுக்கு ஏற்படுகின்ற பெருமிதம், நாங்கள் மாத்திரம் தனியாக இருந்து ஆற்றிவிடவில்லை. நான் தொடக்கத்திலே சொன்னதைப்போல மத்திய அரசின் உதவியோடு, மத்திய அரசின் தோழமையோடு ஆற்றியிருக்கிறோம் என்கிறார்களே, இன்றைக்கு சேது சமுத்திரத் திட்டம் வந்திருக்கிறதென்றால், அந்தத் திட்டத்தை நாங்களே கொண்டு வந்து விடவில்லை. அந்தத் திட்டத்திற்கு அனுமதியளித்து அந்தத் திட்டம் வருவதற்கு உதவியளித்து, அந்தத் திட்டம் இங்கே வர ஒப்புதல் அளித்த மத்திய அரசு, பிரதமர் மன்மோகன் சிங், அங்கே அந்த அரசுக்கு வழிகாட்டியாக இருக்கின்ற நம்முடைய அன்பிற்குரிய திருமதி சோனியா காந்தி

இவர்கள் எல்லாம் தருகின்ற ஒத்துழைப்பு தான் இன்றைக்கு தமிழகத்திலே சேது சமுத்திரத் திட்டம் வரவும், நூறாண்டு காலக் கனவு தமிழை செம்மொழியாக ஆக்க வேண்டும் என்ற கனவு. கனவு கண்டவர் சாதாரணமானவர் அல்ல. சூரிய நாராயண சாஸ்திரி என்ற பரிதிமாற்கலைஞர் கண்ட கனவு. அந்தக் கனவு பலிக்குமா என்பது கேள்விக் குறியாக இருந்து தமிழ் செம்மொழி என்று ஆனது மாத்திரமல்ல, செம்மொழிக்காக ஆக்கப்பட்ட குழுவிற்கு இடம் இது வரையிலே மைசூர் தான் தலைநகரம் என்றிருந்தது, அதை மாற்றி சென்னைக்கே கொடுங்கள் என்று கேட்டு, அந்தத் தலைநகரம், செம்மொழி தலைநகரமும் சென்னைக்குக் கிடைத்திருக்கிறது என்றால் அது வடக்கே மத்தியில் இருக்கின்ற நம்முடைய மத்திய அமைச்சர் பெருமக்கள், காங்கிரஸ் கட்சியின் தலைவியார், காங்கிரஸ் கட்சியின் அமைச்சர்கள் காட்டிய அன்பால், பாசத்தால் தான் இவைகளையெல்லாம் நான் பெற முடிகிறது.

அப்படிப்பட்ட நாம் இன்று அவர்களுடைய உதவியோடு செய்து வருகின்ற இந்தப் பணிகள் எல்லாம் தமிழகத்திலே உள்ள ஏழையெளியவர்களுக்கு, பாட்டாளி மக்களுக்கு, சாதாரண சாமான்ய மக்களுக்கு, குறிப்பாக தாய்மார்களுக்கு உதவிட வேண்டுமென்பதற்காகத்தான். ஒன்று சொல்கிறேன். கர்ப்பஸ்த்ரீகளுக்கு ஆறாயிரம் ரூபாய் தருகிறோம் என்று சொன்னேன். அடுப்புத் தருகிறோம் என்று சொன்னேன், அது மாத்திரமல்ல, நிலம் தருகிறோம் அல்லவா, ஏழை உழவர்களுக்கு, அப்படித் தரப்படுகின்ற நிலம் கூட யார் பெயரால் பதிவு செய்யப்படுகிறதென்றால், அந்த விவசாயிகளின் மனைவியின் பெயரால்தான். ஆகவே தான் பெண்கள் இடத்தில், தாய்மார்களிடத்தில், அவர்களுடைய உரிமையில் எந்த அளவிற்கு அக்கறை கொண்ட ஆட்சி இங்கே நடைபெறுகின்ற ஆட்சி என்பதற்காக இதைச் சொல்கிறேன்.

இன்றைக்குத் தரப்படுவது ஒரு அடுப்பு. இதை நான் ஒரு பெரிய வள்ளல் தன்மையாகக் கருதவில்லை. ஆனால் இதைப் பெறுகின்ற ஏழையெளிய தாய்மார்களுக்கு இது பெரும் சீதனமாகத்தான் இருக்கும் என்பதை நான் நன்றாக அறிவேன். அது மாத்திரமல்ல. இதற்கான முன் தொகை, டெபாசிட், அதைக் கூட அரசு தான் தருகிறது. இந்த அடுப்பைப் பயன்படுத்துகின்றவர்களை நான் ஒன்று மட்டும் வேண்டிக் கேட்டுக் கொள்வேன். மிக எச்சரிக்கையாக, ஜாக்கிரதையாக இதைப் பயன்படுத்த வேண்டும். எப்படியும் பயன்படுத்தலாம் என்று பயன்படுத்தக் கூடாது. ஏனென்றால், நம்முடைய தமிழகத்தில் எல்லா வீடுகளும் மாடி வீடுகள் அல்ல. மண் குடிசைகளும் உண்டு. ஓலைக் குடிசைகளும் உண்டு. அப்படிப்பட்ட ஓலை வேய்ந்த வீடுகளில், இந்த அடுப்புக்கள் அமைக்கப்படும்போது, ஓலைக் கூரைக்கும், அடுப்பு எரிகின்ற இடத்திற்கும் மிக அதிகமான இடைவெளி இருக்க வேண்டும். அப்படி இல்லாவிட்டால் தீ தாவக் கூடும். ஒரு பொறி பறந்தால், அதன் காரணமாக என்ன விளைவுகள் ஏற்படும் என்பதை நீங்கள் அறிவீர்கள். அதற்கு இடம் தராமல் பாதுகாப்பாகப் பார்த்துக் கொள்ள வேண்டும். ஒரு பொறி பறந்தால், அந்த இல்லம் மாத்திரம் நாசமாகி விடாது. அதைக் கேள்விப்பட்டால் என்னுடைய உள்ளமும் ரத்தக் கண்ணீர் வடிக்கும் என்பதை ஞாபகத்தில் வைத்துக் கொள்ள வேண்டும். நல்ல காரியத்திற்காகத் தந்தோமே, இப்படி ஆகிவிட்டதே என்ற அந்தக் கவலை எனக்கேற்படாமல் பார்த்துக் கொள்ள வேண்டுமென்று ஒவ்வொரு இல்லத்தரசியையும் ஜாக்கிரதையாக இதைக் கையாளுங்கள் என்று கேட்டுக் கொண்டு, இந்த இனிய நிகழ்ச்சியிலே கலந்து கொண்ட உங்கள் அனைவருக்கும் என்னுடைய வாழ்த்துக்களை, நன்றியைத் தெரிவித்து இந்த விழாவிலே கலந்து கொண்ட நம்முடைய மத்திய அமைச்சர்கள் இருவருக்கும், மாநில அமைச்சர்களுக்கும் மற்றும் அதிகாரிகளுக்கும், நண்பர்களுக்கும், மற்றக் கட்சிகளைச் சேர்ந்த தோழர்களுக்கும் நன்றியினைத் தெரிவித்து விடைபெறுகிறேன்.

---

*சென்னையில் நடைபெற்ற இலவச எரிவாயு இணைப்பு மற்றும் எரிவாயு அடுப்பு வழங்கும் விழாவில் மாண்புமிகு முதலமைச்சர்*
**கலைஞர் மு. கருணாநிதி** *அவர்கள் ஆற்றிய உரை. (14.1.2007)*



# இயல், இசை நாடகம் என்கிற முத்தமிழை வளர்ப்போம்

கடந்த மூன்று நான்கு நாட்களாக பாராட்டு மழையிலேயே நனைந்து கொண்டிருக்கின்ற நான் இன்றைக்கும் அந்த மழை தொடருகின்ற நிலையில் பாராட்டுகளைப் பெறுகின்ற வகையில் இந்த மாமன்றத்திலே உங்களையெல்லாம் சந்திக்கின்ற நல்ல வாய்ப்பைப் பெற்றிருக்கின்றேன். முத்தமிழ்ப் பேரவை 31ஆம் ஆண்டு விழாவினை நடத்துகின்றது. இதுவே ஒரு பெரிய வியப்புக்குரிய செய்தி. தமிழின் பெயரால் ஒரு பேரவை அமைந்து, அது 31 ஆண்டு காலம், தமிழ்நாட்டிலே வாழ்ந்து கொண்டிருக்கின்றது, விழா நடத்துகின்ற அளவிற்கு ஏற்றம் பெற்றிருக்கிறது என்றால், அதுவே வியப்புக்குரிய செய்திதான். ஏனென்றால் இந்தப் பேரவையை நிறுவியவர்கள், நிகழ்ச்சிகளை நடத்தியவர்கள், இந்தப் பேரவையின் குறிக்கோளை நிறைவேற்ற வேண்டுமென்று விரும்பியவர்கள், விரும்பியவற்றை செயல்படுத்தியவர்கள் எல்லாம் இந்த 31 ஆண்டு காலமாக இந்த மாமன்றத்திலே என் கண் எதிரிலே அமர்ந்து அதுதான்

சென்னை, முத்தமிழ்ப் பேரவையின் 31ஆம் ஆண்டு இசை விழாவில் மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் ஆற்றிய உரை (24.1.2007)




நடைபெற்ற நிகழ்ச்சிகளையெல்லாம் ரசித்து, சுவைத்து, வாழ்த்தி, பாராட்டி இன்று நினைவிலே வாழ்பவர்களாக பல பேர் ஆகியிருக்கிறார்கள்.

அன்றைய தினம் நான் சந்தித்தவர்கள், என் பார்வையிலே பட்டவர்கள், இந்த மேடைக்கு வந்து வாழ்த்தியவர்கள் எல்லாம் யார் என்பதை எண்ணிப் பார்த்தால், திருவாடுதுறையார், திருவெண்காட்டார், நீடாமங்கலத்தார் என்றெல்லாம் ஊர் பெயர்களைச் சொல்லி, அதன் மூலமாக விளம்பரம் ஆனவர்கள், புகழ் பெற்றவர்கள். அப்படிப்பட்ட மேதைகள் இருந்து நடத்திய விழாக்களை நான் நன்றாக அறிவேன். அந்த மேதைகளே கலந்துகொண்டு கலை நிகழ்ச்சிகளை வழங்கியதையும், இசை நிகழ்ச்சிகளை வழங்கியதையும், நாட்டிய நடன நிகழ்ச்சிகளை வழங்கியதையும் கண்ணாரக் கண்டு மகிழ்ந்தவன் நான். அவர்கள் எல்லாம் இன்றைக்கு நம்மிடையே இல்லாவிட்டாலும்கூட, அவர்கள் வழங்கிய இசைச் செல்வம், கலைச் செல்வம், கவிதைச் செல்வம், நாட்டியச் செல்வம், நாயனச் செல்வம், தவில் செல்வம் போன்ற இத்தனை இசைச் செல்வங்களும் நம்மிடையே இருக்கின்றன என்றால் இந்த முத்தமிழுக்கு, இயல், இசை, நாடகத்திற்கு என்றைக்குமே அழிவில்லை என்ற உறுதியை என்னால் பெற முடிகிறது. அதனால் தான் 31ஆம் ஆண்டு விழாவை இங்கே நடத்த முடிகிறது.

தமிழின் பெயரால், தமிழர்களின் பெயரால் எந்தவொரு அமைப்பை உருவாக்கினாலும், அதன் ஆயுட்காலம் குறைவாகத்தான் இருக்கும் என்பது நாம் கண்ட வரலாற்று நிகழ்ச்சி. ஆனால் அதற்கெல்லாம் முற்றிலும் விதி விலக்காக, மாற்றாக, இந்த மாமன்றம் 30 ஆண்டுகளைக் கடந்து 31ஆம் ஆண்டில் அடியெடுத்து வைத்திருக்கிற தென்றால், இதற்காகப் பாடுபட்ட உழைத்த இன்னமும் உழைத்துக் கொண்டிருக்கின்ற அனைவருக்கும் நான் என்னுடைய வாழ்த்துகளையும் பாராட்டுகளையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த விழாவில் நீண்ட நாளாக நிறைவேறாமல் இருந்த ஒரு நிகழ்ச்சி இன்றைக்கு நிறைவேறியிருக்கின்றது.

அதுதான் நம்முடைய தவத்திரு குன்றக்குடி பொன்னம்பல அடிகளாருக்கு "இயல் செல்வம்" விருது வழங்கப்பட்டிருப்பதாகும். அவர் இந்த மேடையில் விருது பெற்று உரை நிகழ்த்துகின்ற நேரத்தில் நான் எண்ணிக் கொண்டேன். என்னுடைய வயது உங்களுக்குத் தெரியும். என்னுடைய அரசியல் வாழ்வு எப்போது தொடங்கியது என்பதும் உங்களுக்குத் தெரியும். என்னுடைய இலக்கிய நுழைவு எப்போது என்பதும் உங்களுக்குத் தெரியும். எனவே இத்தனை ஆண்டுக்காலம் நான் வாழ்ந்து கொண்டிருக்கின்ற காரணத்தால், எனக்குத் தனி பெருமை, தலைமுறைகளைச் சந்திக்கின்ற, தலைமுறைகளை வாழ்த்துகின்ற, தலைமுறைகளால் பாராட்டப்படுகின்ற அந்தப் பேற்றினை நான் பெற்றிருக்கின்றேன். அந்தப் பேறுகளிலே ஒன்றுதான் நம்முடைய குன்றக்குடி பொன்னம்பல அடிகளார் அவர்கள் இங்கே என்னைப் பாராட்டிய பேறாகும்.

தமிழகத்திலே ஆன்மீகத்திற்கு ஒரு புதுப்பொலிவை, ஒரு தனி வலிவை, ஒரு தனி கீர்த்தியை உருவாக்கிக் காட்டியவர் பெரிய குன்றக்குடி அடிகளார் அவர்களாகும். அவரும் நானும் சந்தித்த நிகழ்ச்சியே ஒரு விசித்திரமான வேடிக்கையான நிகழ்ச்சி. திராவிட இயக்கத்தினுடைய தாக்கம் வெகு வேகமாக தமிழகத்தில் பரவிக் கொண்டிருந்த காலத்தில் பெரியாரும், அண்ணாவும், புரட்சிகரமான கொள்கைகளை மக்கள் மத்தியிலே எடுத்து வைத்த அந்தக் காலத்தில் எங்களைச் சுற்றிலும் நான்கு பக்கமும் வேடர் சூழ நடுவிலே சிக்கிய மான் போல என்பாரே பாரதிதாசன், அதுபோல நாங்கள் எதிர்ப்புகளுக்கு ஆளாகிய நேரத்தில், நம்முடைய பொள்ளாச்சி மகாலிங்கம் போன்றவர்கள் எல்லாம், எங்களுடைய கருத்துக்களை ஏற்காமல் எதிர்த்துக் கொண்டிருந்த அந்தக் காலக் கட்டத்தில், குன்றக்குடி அடிகளாரும் எங்களுடைய சமுதாயக் கருத்துக்களை விமர்சிக்கின்ற மேடைகளிலே தோன்றினார் என்பதும், அவரை எப்படிச் சந்திப்பது என்பதைப் பற்றி நாங்கள் சிந்தித்தோம் என்பதும் பழைய வரலாறு.

ஒரு நாள் நான் மயிலாடுதுறையில் பயணியர் தங்கும் விடுதியில் தங்கியிருக்கிறேன். பக்கத்து அறையில் குன்றக்குடி அடிகளார் பெரியவர் தங்கியிருக்கிறார். இதிலே எங்களுக்குள் யார் யாரைப் போய்ச் சந்திப்பது என்ற ஒரு ஐயப்பாடு. நான் போய்ச் சந்திப்பதாகச் சொன்னால் ஒரு வேளை ஏற்றுக் கொள்வாரோ இல்லையோ, சம்மதிப்பாரோ இல்லையோ என்று நான் என்னுடைய அறையிலே இருக்கிறேன். நண்பர் கருணானந்தம் அவர்கள் தந்தை பெரியாரிடத்தில் மாணவர்களாக இருந்தவர்களில் ஒருவர். அவர் செய்த ஏற்பாட்டின்படி நானும், குன்றக்குடி அடிகளார் அவர்களும் அந்த விடுதியில் சந்தித்து அரை மணி நேரத்திற்கு மேலாகப் பேசிக் கொண்டிருந்தோம். ஒருவரையொருவர் சந்தித்த பிறகுதான் திராவிட இயக்கக் கொள்கைகளுக்கும், பெரியாரின் கொள்கைகளுக்கும், அண்ணாவின் இலட்சியங்களுக்கும் அடிகளார் மக்களிடம் சென்று சொல்கின்ற தத்துவங்களுக்கும் உள்ள ஒற்றுமை வேற்றுமைகளை நானும் உணர்ந்து கொள்ள முடிந்தது. அவரும் உணர்ந்து கொள்ள முடிந்தது. நாங்கள் இருவரும் ஒன்றாக முடிந்தது. அதுதான் மயிலாடுதுறையில் உள்ள அந்தப் பயணியர் விடுதி எனக்குத் தந்த பேறு.

அவரிடம் நான் கொண்ட அன்பு, அவர் என்னிடம் கொண்ட அன்பு சிறிதும் மாறாமல் பழகி வந்தோம். பல போராட்டங்கள் தமிழகத்திலே நடைபெற்றன. மொழிக்காக நடைபெற்ற ஒரு போராட்டத்தில் அடிகளார் அவர்களும் கலந்து கொண்டு, அதன் காரணமாக எத்தகைய இன்னல்களுக் கெல்லாம் ஆளானார் என்பது அனைவருக்கும் தெரியும்.

அவ்வழியிலேயே இங்கு வந்துள்ள நம்முடைய இளம் அடிகளார் அவர்கள் எப்படி இருப்பாரோ என்று நாங்கள் கருதிய நேரத்தில், அவர் தன்னுடைய வாழ்க்கையின் மூலம், தன்னுடைய கருத்துக்களை எடுத்துத் தருகின்ற செயலின் மூலம் நானும் அப்படித்தான் இருக்கிறேன் என்று தன்னை அடையாளம் காட்டிக் கொண்டிருக்கிறார். இது வழி வழி

தமிழை வளர்க்கவும், தமிழர்களுடைய பண்பாடு, கலாச்சாரம், தமிழர்களுடைய மரபு இவைகளை வளர்க்கவும் பயன்படக் கூடிய ஒன்று.

அவர் இங்கே என்னை வாழ்த்தும்போது சொன்னார் – நான் நீண்ட காலம் இருந்து நாட்டிற்கு, மொழிக்கு என்னென்ன நன்மைகளையெல்லாம் செய்ய வேண்டுமென்றார். நீங்கள் எல்லாம் இருந்தால், இன்னும் கூட ஒரு பத்து, இருபதாண்டு காலம் ஆயுள் எனக்கு நீண்டு அவைகளையெல்லாம் செய்யக் கூடிய வாய்ப்பு எனக்கு ஏற்படும். இந்த நம்பிக்கை எனக்கு இருக்கின்றது. எத்தனையோ பேர் நான் நூறாண்டு காலம் வாழப் போகிறேன் என்றெல்லாம் சொன்னார்கள். அவர்கள் தங்களை நம்பிச் சொன்னார்கள், நான் உங்களையெல்லாம் நம்பிச் சொல்கிறேன். எனவே இதில் எந்தவிதமான தவறும் இருக்க முடியாது.

ராஜரத்னா விருது இங்கே வழங்கப்பட்டது. இந்த ராஜரத்னா விருது வழங்குவதற்கு ஒரு சிறிய நிகழ்ச்சியே உண்டு. இங்கே நம்முடைய இசைச் செல்வம் விருதுபெற்ற கீதாராஜசேகர் அவர்கள் சி. சுப்பிரமணியம் அவர்களின் பெயரை நினைவு படுத்தினார். சி. சுப்பிரமணியம் அவர்கள் நம்முடைய அருட்செல்வர் பொள்ளாச்சி மகாலிங்கம் அவர்களுக்கு மிக மிக நெருங்கிய உறவினர். இருவரும் கோவை மாவட்டத்தில் சக்கரவர்த்திகளாக இருந்தவர்கள். ஆனால் இந்தச் சக்கரவர்த்திகளை சாதாரண சாமான்யமான நாங்கள் ஒரு தேர்தலில் எங்களைப் போலவே ஆக்கி விட்டோம். எங்களைப் போல ஆக்கி விட்டோம் என்றால் செல்வ நிலையிலே அல்ல, குடும்ப நிலையிலே அல்ல, உள்ள நிலையிலே அப்படி ஆக்கி விட்டோம்.

பொள்ளாச்சி மகாலிங்கம் அவர்கள் செல்வச் சீமான் மாத்திரமல்ல, அருட்செல்வர். வடலூர் வள்ளலாருடைய புகழைப் பரப்புகின்றவர். இவரைப் போலவே சி. சுப்பிரமணியம் அவர்கள் தமிழகக் காங்கிரஸ் கட்சியிலே மாத்திரமல்ல, அகில இந்திய காங்கிரஸ் கட்சியிலே பெரும் பொறுப்புகளிலே இருந்தவர். பெருந்தலைவர் காமராஜருக்கு உற்ற தொண்டராக, தோழராக, துணைவராக இருந்தவர். அப்படிப்பட்ட சி. சுப்பிரமணியம் தமிழகச் சட்டப் பேரவையிலே நிதியமைச்சராக இருந்தபோது, 57ஆம் ஆண்டு அறிஞர் அண்ணாவும், நானும், பேராசிரியர் அன்பழகனாரும் சட்டமன்றத்திற்குள் நுழைந்தோம். அன்றைக்கு நுழைந்த நாங்கள், இன்றைக்கும் அங்கேதான் நான் இருக்கிறேன். எத்தனை ஆண்டுகள் என்ற கணக்கை நீங்களே பார்த்துக் கொள்ளுங்கள். ஏனென்றால் நான் கணக்கிலே கொஞ்சம் “வீக்”. சென்ற ஆண்டு நம்முடைய வரவு செலவுத்திட்டம் 35,000 கோடி ரூபாய்க்கு மேல் என்றெல்லாம் சொல்லப் பட்டது. இதிலேதான் நாம் திட்டங்களை நிறைவேற்றிக் கொண்டிருக்கின்றோம்.

ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். 57 ஆம் ஆண்டு அண்ணாவும், நாங்களும் சட்டசபையிலே அடியெடுத்து வைத்த போது, நிதியமைச்சர்



"அவர் (குன்றக்குடி பொன்னம்பல அடிகளார்) இங்கே என்னை வாழ்த்தும்போது சொன்னார் – நான் நீண்ட காலம் இருந்து நாட்டிற்கு, மொழிக்கு என்னென்ன நன்மைகளையெல்லாம் செய்ய வேண்டுமென்றார். நீங்கள் எல்லாம் இருந்தால், இன்னும் கூட ஒரு பத்து, இருபதாண்டு காலம் ஆயுள் எனக்கு நீண்டு அவைகளையெல்லாம் செய்யக் கூடிய வாய்ப்பு எனக்கு ஏற்படும். இந்த நம்பிக்கை எனக்கு இருக்கின்றது. எத்தனையோ பேர் நான் நூறாண்டு காலம் வாழப் போகிறேன் என்றெல்லாம் சொன்னார்கள். அவர்கள் தங்களை நம்பிச் சொன்னார்கள், நான் உங்களையெல்லாம் நம்பிச் சொல்கிறேன். எனவே இதில் எந்தவிதமான தவறும் இருக்க முடியாது."

சி. சுப்பிரமணியம் அவர்கள் பட்ஜெட் உரையைப் படித்தார். என்ன படித்தார் தெரியுமா, "நான் இன்றைக்கு கிரிக்கெட்டில் செஞ்சுரி அடிப்பதைப் போல, இந்தப் பட்ஜெட்டில் அடிக்கப் போகிறேன் என்றார். செஞ்சுரி என்றால் 100 சதம் அடித்தல். இந்த ஆண்டு பட்ஜெட்டில் 3 கோடி ரூபாய் குறைகிறது, அது குறையாமல் இருந்தால், பட்ஜெட் 100 கோடி ரூபாய் பட்ஜெட்டாக இருக்குமென்று குறிப்பிட்டார். 1957ஆம் ஆண்டு தமிழ்நாடு அரசின் பட்ஜெட் 100 கோடி ரூபாய், இன்றைக்கு 35ஆயிரம் கோடி ரூபாய். அடுத்த ஆண்டு இது மேலும் அதிகமாகும். இது பட்ஜெட் உயர்ந்ததா ? பணமதிப்பு குறைந்ததா ? என்ற இந்தக் கேள்விக்கெல்லாம் இடமில்லை என்றாலுங்கூட இன்றையதினம் உலகத்தின் பொருளாதாரம், இந்தியாவின் பொருளாதாரம் இவைகளையெல்லாம் எண்ணிப்பார்த்து கிடைக்கின்ற அந்தப் பொருளாதாரத்தை வைத்துக் கொண்டு மக்களுடைய திட்டங்களைத் தீட்ட அந்த 100 கோடி ரூபாய் அன்றைக்கு இருந்த ஆட்சிக்கு போதுமானதாக இருந்தது. காரணம் பணத்தின் மதிப்பைப் பொறுத்து அந்த 100 கோடி ரூபாய் போதுமானதாக இருந்தது. அப்போது சி.எஸ் அவர்கள் நிதியமைச்சராக இருந்து திறம்பட பரிபாலித்தார்.

அதற்குப் பிறகு எத்தனையோ மாறுதல்கள். இன்றைக்கு திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. இங்கே தலைமையுரை ஆற்றிய நம்முடைய பொள்ளாச்சி மகாலிங்கம் அவர்கள் சொன்னதைப்போல், தமிழுக்கு, தமிழர்களுக்கு உயர்வு தருகின்ற ஆட்சியாக இந்த ஆட்சி இப்போது நடைபெற்றுக் கொண்டிருக்கின்றதென்றால், இது தமிழர்களால் நடத்தப்படுகின்ற ஆட்சி என்ற காரணம்தானே தவிர, வேறு ஒன்றும் அல்ல.

"தமிழாய்ந்த தமிழன் தான் தமிழகத்தின் முதலமைச்சராய் இருத்தல் வேண்டும்" என்ற புரட்சிக்கவிஞர் பாரதிதாசன் சொன்னாரே, அந்த வரிகளை மறந்து விடவில்லை, நாங்களும் மறந்து விடவில்லை, தேர்தல் நேரத்தில் வாக்களிக்கும் தமிழர்களும் மறந்து விடாத காரணத்தினால் தமிழாய்ந்த தமிழன் இந்தத் தமிழகத்தின் ஆட்சிப் பொறுப்பிலே இருக்கின்ற வாய்ப்பு ஏற்பட்டிருக்கின்றது. இந்த வாய்ப்பைப் பயன்படுத்தி இந்த ஒரு விழாவிலே இயல் செல்வம், ராஜரத்னா, இசைச் செல்வம், நாட்டியச் செல்வம், தவில் செல்வம், மிருதங்கச் செல்வம் போன்ற இந்தச் செல்வங்களை மாத்திரமல்ல, என்றைக்கும் வற்றாத செல்வத்தை, பகுத்தறிவுச் செல்வத்தை, தன்மானச் செல்வத்தை தமிழர்களுக்கு அளிக்க இந்த ஆட்சி தொடர்ந்து நீடிப்பதற்கு நீங்கள்தான் துணையாக இருக்க முடியும். அப்படி துணையாக இருந்திடுக என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

ஒருமுறை இந்த ஆட்சி ஒட்டை விழுந்த ஆட்சி என்று தி.மு.க. ஆட்சியைப் பற்றிச் சொன்னார்கள்.

அப்போது அண்ணா திருவாரூர் கூட்டத்தில் சொன்னார். திருவாரூர் தான் சங்கீத விஷயங்களை உதாரணமாகச் சொல்வதற்கேற்ற ஊர். ஏனென்றால் எந்த ஒரு வித்வானும் திருவாரூரில் வந்து நிகழ்ச்சி நடத்தி புகழ் பெற்றால்தான், அவன் தமிழ்நாட்டிலே புகழ்பெற முடியுமென்ற அளவிற்கு திருவாரூர் அத்தகைய ரசிகத் தன்மை வாய்ந்த ஊர். அங்கேதான் அண்ணா சொன்னார், "ஆமாம், இது ஓட்டைகள் நிறைந்த ஆட்சிதான் என்று சொல்லி விட்டு, ஆனால் இந்த ஓட்டைகள் எல்லாம் ஏனோதானோவென்று விழுந்த ஓட்டைகள் அல்ல. நாதஸ்வரத்திலே இருக்கின்ற ஓட்டைகளைப் போன்றது, புல்லாங்குழலிலே இருக்கின்ற ஓட்டைகளைப் போன்றது, எந்தத் துவாரத்தை அடைத்தால் என்ன நாதம் வரும் என்று எனக்குத் தெரியும். ஆகவே எத்தனை ஓட்டைகள் இருந்தாலும் இருக்கட்டும், அந்த ஓட்டைகளை அடைக்க எனக்குத் தெரியும்" என்று அண்ணா சொன்னார்.


அண்ணாவின் தம்பிகளாகிய நாங்கள் இன்றைக்கு இந்த ஆட்சியை நடத்திக் கொண்டிருக்கிறோம். அடைக்க வேண்டிய ஓட்டைகளை அடைத்து, நடத்த வேண்டிய வேட்டைகளையும் நடத்தி வெற்றிகரமாக இயல், இசை, நாடகம் என்கிற இந்த முத்தமிழை வளர்ப்போம், வாழ்த்துவோம் என்று இங்கே வீற்றிருக்கின்ற கலைஞர்கள் சார்பாக நான் உறுதியெடுத்துக் கொண்டு சூளுரைத்து இந்தப் பேரவை மேலும் பல ஆண்டு விழாக்களைக் கொண்டாடுகின்ற அளவிற்கு வாழ வேண்டுமென்று வாழ்த்தி இந்த அளவோடு விடைபெறுகிறேன்.

★ ★ ★

## நூலகங்களுக்கு தரமான நூல்களைத் தெரிவு செய்ய நூல் தேர்வுக்குழு அமைப்பு

பொது நூலகத்துறையில் தரமான நூல்களைத் தெரிவு செய்து, நூலகங்களுக்கு வழங்க, நூல் தேர்வுக்குழு அமைக்கப்படுகிறது. இந்த அரசு பொறுப்பேற்றுக் கொண்டதும், பொது நூலகத்துறை மேம்பாட்டிற்கு பல சிறப்பான காரியங்களைச் செய்துள்ளது. அதன் தொடர்ச்சியாக புதிதாக நூல் தேர்வுக்குழு பின்வருமாறு அமைத்து அரசு ஆணையிடுகிறது:

| | | |
|---|---|---|
| 1. | பொது நூலக இயக்குநர் | தலைவர் |
| 2. | தமிழ் வளர்ச்சித்துறை இயக்குநர் | உறுப்பினர் |
| 3. | கன்னிமாரா பொது நூலக இயக்குநர் | உறுப்பினர் |
| 4. | பேராசிரியர் க. பாலகிருட்டிணன் | உறுப்பினர் |
| 5. | கவிக்கொண்டல் மா. செங்குட்டுவன் | உறுப்பினர் |
| 6. | கவிஞர் இளையபாரதி | உறுப்பினர் |
| 7. | பேராசிரியர் ஆ. இரா. வேங்கடாசலபதி | உறுப்பினர் |
| 8. | கல்லூரிக் கல்வி முன்னாள் இயக்குநர் திரு. விக்டர் | உறுப்பினர் |
| 9. | காயிதேமில்லத் கல்லூரி முன்னாள் முதல்வர் பேராசிரியை அன்புக்கொடி | உறுப்பினர் |
| 10. | மாநிலக் கல்லூரி பேராசிரியர் எஸ். ஏ. அப்துல் சலாம் | உறுப்பினர் |
| 11. | பச்சையப்பன் கல்லூரி பேராசிரியர் டாக்டர் தருமன் | உறுப்பினர் |
| 12. | பேராசிரியர் பி. எஸ். பாலசுப்பிரமணியன் | உறுப்பினர் |
| 13. | மாநிலக் கல்லூரி பேராசிரியை எஸ்.மேரி வெண்ணிலா | உறுப்பினர் |
| 14. | நந்தனம் அரசினர் கலைக் கல்லூரி பேராசிரியர் வெங்கட்ராமன் | உறுப்பினர் |
| 15. | முனைவர் சேலம் பி. கே. பழனிசாமி | உறுப்பினர் |
| 16. | முனைவர் கா. செல்லப்பன் | உறுப்பினர் |
| 17. | வழக்கறிஞர் வி.ஆர்.எஸ்.சம்பத் | உறுப்பினர் |
| 18. | கவிஞர் சல்மா | உறுப்பினர் |
| 19. | பொது நூலக உதவி இயக்குநர் | உறுப்பினர் மற்றும் செயலாளர் |





# வேளாங்கண்ணி - நாகூர் - எட்டுக்குடியை இணைக்கின்ற இரயில் பாதை விரைவில் அமைக்க வேண்டும்

**மாண்புமிகு தமிழக முதலமைச்சர் கலைஞர் அவர்கள் வேண்டுகோள் (12.01.2007)**

இன்றைய தினம் திருவாரூரில் நடைபெறுகின்ற இந்த மகத்தான விழாவில் உங்களையெல்லாம் சந்திப்பதிலும், தஞ்சை–திருவாரூர் இடையே புதியதாக அமைக்கப்பட்டுள்ள அகல இரயில் பாதையை தொடங்கி வைப்பதிலும், நான் மிகுந்த மகிழ்ச்சியும், பெருமையும் கொள்கிறேன்.

திருவாரூரை பொறுத்தவரையில் 1861 ஆம் ஆண்டிலேயிருந்து இங்கே இரயில் போக்குவரத்து நடந்து கொண்டிருந்தது. 55 கிலோமீட்டர் நீளமுள்ள இந்த இரயில் பாதை 1861ஆம் ஆண்டு தொடங்கப் பட்டதிலிருந்து அகல இரயில் பாதையாகவே இருந்தது. ஆனால் அந்த அகல இரயில் பாதை, இடையே மீட்டர்கேஜ் பாதையாக மாற்றப்பட்டது.

முதலில் இதேபோல் அகல இரயில் பாதை அமைக்கப்பட்டு இடையிலே ஏற்பட்ட கோளாறால் – எப்பொழுதும் இடையில்தான் கோளாறு ஏற்படும். உங்களுக்குத் தெரியும், நல்ல காரியங்கள் கெடும். அப்படி கெட்ட வரிசையில் ஒன்றாக இரண்டாம் உலகப் போரின் போது போர்க்காலத் தேவை என்று கூறப்பட்டு அந்த அகல இரயில் பாதை

மீட்டர்கேஜ் பாதையாக மாற்றப்பட்டு இருந்தது. அதை இப்பொழுது நாங்கள் வந்து மீண்டும் அகல இரயில் பாதையாக ஆக்குகிறோம். இப்படித்தான் இடையில் கெட்டதையெல்லாம் நாங்கள் வந்து மீண்டும் திருத்த வேண்டிய கடமை, அவசியம் இருக்கின்றது என்பதை நீங்கள் அறிவீர்கள். அதுதான் இன்றைக்கு நானும் நம்முடைய நண்பர் வேலு அவர்களும் இங்கே வந்து ஆற்றிக் கொண்டிருக்கிறோம் என்பதை நீங்கள் அறிந்து கொள்ள வேண்டும்.



இன்றைக்கு இந்தியாவில் இருக்கின்ற மத்திய அரசு சார்புடைய பல துறைகளில் மேம்பாடு, சீர், சிறப்பு, ஏற்றம், முன்னேற்றம் எல்லாம் இருந்தபொழுதிலும் மக்களுக்கு மிக அவசியமாகத் தேவைப்படுகின்ற போக்குவரத்தில் முதல் இடத்தைப் பெற்று விளங்குகின்ற ஒரு துறையாக இரயில்வே துறை விளங்குகின்றது என்றால் அதை நான் பாராட்டாமல் இருக்க முடியாது.

அப்படிப் பாராட்டும் பொழுது நான் கொஞ்சம் உரிமை எடுத்துக் கொண்டு பாராட்ட வேண்டியவனாக இருக்கின்றேன்.

ஒன்று; நான் ஏற்றுக் கொண்டிருக்கின்ற பிற்படுத்தப்பட்டோர் நலக் கொள்கைக்கு என்றைக்கும் ஆதரவாக இருக்கின்ற நம்முடைய லல்லு அவர்கள் மத்திய இரயில்வே துறை அமைச்சராக இருப்பதும், என்னோடு இன்று நேற்றல்ல, நான் முன்பு முதலமைச்சராக இருந்தபோதெல்லாம், என்னுடைய அரசாங்கத்திலே பல இடங்களில், கலக்டராக இருந்து, பல பணிகளை பொதுப்பணிகளை ஆற்றி, சில மாவட்டங்களிலே சரியாக இல்லையென்றால், அந்த மாவட்டத்திற்கு யாரை ஆட்சித் தலைவராக நியமிக்கலாம் என்று நான் எண்ணிப் பார்க்கும்போதெல்லாம், வேலுதான் சரியான ஆள் என்று அவரை மாவட்ட ஆட்சித் தலைவராக நான் ஆக்கிய, கணித்த காலமெல்லாம் உண்டு.

ஆனால், வேலு அவர்களைப் பொறுத்தவரையில் முதலமைச்சராக இருக்கின்ற கருணாநிதி அல்லவா, நம்மை இந்தப் பொறுப்புக்கு நியமித்திருக்கிறார் என்று அதற்காக நியாயத்தை, நீதியை விட்டுக் கொடுப்பதில்லை, கடமையை விட்டுக் கொடுப்பதில்லை. ஆனால் என்னுடைய ஜாதகம் என்னவென்றால், நான் யாரை பரிந்துரை செய்கின்றேனோ, யாரை நியமிக்கின்றேனோ, அவர்கள்தான் எனக்கு எதிராகச் செயல்படுவார்கள். ஆனால், நம்முடைய வேலு அவர்கள் எனக்காக அல்ல, நாட்டிற்காக, கடமைக்காக, சமுதாயத்திற்காக நல்லவைகளையே செய்ய வேண்டும் என்று கருதுகின்ற ஒரு நல்லவர். எனவே இன்றைக்கு இரயில்வே இலாகா நம்முடைய மத்திய அமைச்சர் அவர்களுடைய கையிலே இருந்தாலும் கூட, அது பூரண பொலிவு பெறுவதற்கு மிக முக்கிய காரணமாக துணையாக இருப்பவர் நம்முடைய நண்பர் வேலு என்பதை அறியும் போது, நானும் மகிழ்ச்சியடைகின்றேன். என்னைப் போலவே டாக்டர் இராமதாஸ் அவர்களும் மகிழ்ச்சியடைவார்கள் என்று நான் நம்புகிறேன்.

ஏனென்றால், பா.ம.க. இயக்கத்தில் தன்னை ஒப்படைத்துக் கொண்டு டாக்டர் இராமதாஸ் அவர்களுடைய தலைமையில் இயங்குகின்ற ஒரு நண்பர் அவர். அவர் இன்றைக்கு தமிழகத்திலே ஆற்றியிருக்கின்ற பணிகள், ஒன்றல்ல, இரண்டல்ல. இந்தப் பெரும் பணிகளிலே ஒன்றுதான் இன்று தஞ்சை – திருவாரூர் இரு நகரங்களுக்கிடையிலே ஒரு இரயில் போக்குவரத்து மீட்டர் கேஜ் ஆக இருந்ததை மாற்றி, பிராட் கேஜ் அகல இரயில் பாதையாக ஆக்கியிருப்பது என்று சொன்னால் அது மிகையாகாது.

நான் அவரிடத்தில் மேலும் கேட்டுக் கொண்டிருக்கிறேன். நம்முடைய பழனிமாணிக்கம் போன்றவர்களும், விஜயன் போன்றவர்களும், திருவாரூர் அமைச்சர் மதிவாணன் போன்றவர்களும் மற்றவர்களும் பல கோரிக்கைகளை இங்கே அவரிடத்திலே வைத்தார்கள். நான் பக்கத்திலே இருப்பதால் சிபாரிசு செய்வேன் என்ற நம்பிக்கையோடு தந்திருக்கலாம். ஆனால் வேலு அவர்கள் என்னைப் பார்த்து "நீங்கள் இதற்கு எல்லாம் உதவி செய்ய வேண்டும்" என்று என்னைக் கேட்டார். அவர் மின்சாரத்தைப் பற்றி பேசினார். அப்பொழுது நம்முடைய



வீராசாமி அருகில் இருந்து கேரளத்தில் மின்சாரம் கொடுக்கிறார்கள் என்றால் அங்கே 60 காசுதான். இங்கே மூன்று ரூபாய், அங்கே கேரளத்திலே புனல் மின்சாரம் அவ்வளவு சுலபமாக அவர்களுக்கு கிடைக்கிறது. நமக்கு அனல் மின்சாரம் பெறுவது என்றால் மூன்று ரூபாய் ஆகின்றது. அதையும் யோசிக்க வேண்டியிருக்கின்றது என்று சொன்னார். நான் வேலு அவர்களுக்கு சொல்லிக் கொள்வேன்; மின்மயமாக ஆக வேண்டும் என்பது மாத்திரமல்ல. தமிழர்களுடைய வாழ்வு, எதிர்காலம் பொன்மயமாக ஆக வேண்டும். அதற்கு என்னென்ன செய்ய வேண்டுமோ அதையெல்லாம் நாம் இருவரும் சேர்ந்து செய்வோம்.

மத்திய அரசும் மாநில அரசும் மத்திய அரசிலே இருக்கின்ற வேலு போன்ற அமைச்சர்களும் மாநில அரசிலே இருக்கின்ற எங்களைப் போன்றவர்களும் இரயிலின் இரண்டு தண்டவாளம் போல் இருக்க வேண்டும். ஒரு தண்டவாளம் வளைந்தால் இரயில் ஓடாது. இரண்டு தண்டவாளம் அமைந்திருந்தால்தான் இரயில் ஓடும். அப்படி நாம் இரண்டு தண்டவாளங்களாக இருப்போம். நாம் இரண்டு பேரும் தண்டவாளங்களாகவே இருப்பது பல பேருக்குக்கூட பிடிக்காது, இருந்தாலும், நாம் தண்டவாளங்களாக இருந்தால்தான் இரயிலையும் நகர்த்த முடியும்; இரயில் நகர்ந்தால்தான் மக்கள் பலன் அடைய முடியும். பொதுமக்கள் அடைகின்ற அந்தப் பெரும் பயனுக்காக மத்திய மாநில அரசுகள் ஒன்றோடு ஒன்று மோதிக்கொள்ளாமல் ஒன்றோடு ஒன்று அணுகுமுறையிலே அனுசரித்துச் சென்று இரண்டு அரசுகளும் நல்ல காரியங்களை ஆற்றிட வேண்டும்.

உதாரணமாக மத்திய மாநில அரசுகளுக்கிடையே இன்றைக்கு இருக்கின்ற உறவின் காரணமாகத்தான் இந்த திருவாரூர் பாதை மாத்திரமல்ல, தஞ்சை பாதை மாத்திரமல்ல. இன்னும் எத்தனையோ பாதைகள் சேலம் இரயில்வே கோட்டம் இன்றைக்கு கிடைத்திருக்கின்றது என்றால், சேலத்திலே பல ஆண்டுகாலமாக தம்பி வீரபாண்டி ஆறுமுகம் எடுத்த முயற்சி பலிக்காமல் போய், இப்பொழுது அதற்கான அனுமதி கிடைத்திருக்கின்றது. அதற்கான பச்சைக் கொடி அங்கே காட்டப்பட்டிருக்கின்றது. அதுமாத்திரமல்ல; எத்தனையோ திட்டங்களை மத்திய அரசோடு மாநில அரசும் இன்றைக்குத் தந்திருக்கின்றது என்ற கணக்கை நாம் மறந்துவிடக்கூடாது.

சேது சமுத்திரத் திட்டம் நம்முடைய கனவல்லவா, கடந்த நூறாண்டு, இருநூறு ஆண்டு காலமாக கண்ட கனவு, சேது சமுத்திரத்திட்டம். அந்தத் திட்டம் நிறைவேற்றப்பட்டால் எத்தனையோ மைல் தூர கடல் பயணத்தை குறைக்க முடியும் என்பதும், எவ்வளவு பொருளாதார இலாபம் அதனால் கிடைக்கும் என்பதும், நம்முடைய நாட்டிலே கிடைக்கின்ற பொருள்களை எந்த அளவிற்கு வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி, செய்யலாம் என்பதும், அதைப்போல வெளிநாடுகளிலிருந்து எவ்வளவு பொருள்களை இங்கே இறக்குமதி செய்யலாம் என்பதும் எந்த அளவிற்கு வாணிபம் செழிக்கும், கொழிக்கும் என்பதும், கணக்கிட்டுப் பார்த்து அன்றைக்கு

ஏ. இராமசாமி முதலியார் காலத்தில் இருந்து அவரையொத்தவர்கள் மிகுந்த பாடுபட்டும் பயன்தராத அந்த திட்டம் இன்றைக்கு அனுமதிக்கப்பட்டு நம்முடைய தம்பி பாலு அவர்களுடைய முயற்சியினால் வேகமாக வளர்ந்து வருகின்றது என்றால், சேது சமுத்திரத் திட்டம் சாதாரணமானதல்ல, இரண்டாயிரம், மூவாயிரம் கோடி அளவிற்கு தீட்டப்பட்டுள்ள மாபெரும் திட்டம் அது.

அதுமாத்திரமல்ல; ஒரகடத்தில் வாகனங்களை ஆய்வு செய்து, வாகனங்களை சீர்செய்கின்ற அந்த ஒரு தொழிற்சாலை இரண்டாயிரம் கோடி ரூபாயில், மத்திய அரசு மாநில அரசோடு இருக்கின்ற இணக்கத்தின் காரணமாக மத்திய அரசால் நமக்காகத் தரப்பட்டிருக்கின்ற ஒரு மாபெரும் திட்டம்.

அது மாத்திரமல்ல, இவைகளுக்கெல்லாம் மேலாக இப்படிப்பட்ட விசாலமான ஒரு ஆழமான துறைமுகம் வேறு எங்கும் இல்லை என்று சொல்லுகின்ற அளவிற்கு அமைந்த குளச்சல் துறைமுகம் அந்த குளச்சல் துறைமுகத்தை நாம் விரிவாக்கி பெரியதாக்கி, அதை பயன்படுத்திக்கொள்ள ஆரம்பித்தால், தமிழகத்தினுடைய செழிப்பு இன்னும் பல மடங்கு வளர்வதற்கு வழி வகை இருக்கின்றது என்பதால் அந்தக் குளச்சல் துறைமுகத் திட்டத்திற்கும் மத்திய அரசு சம்மதித்திருக்கின்றது.

இவைகளிலெல்லாம் சிலவற்றைத்தான் சொன்னேன். இன்னும் உணர்ச்சிமயமாக சொல்ல வேண்டுமேயானால் நூறாண்டு காலமாக சூரிய நாராயண சாஸ்திரி என்கின்ற பரிதிமாற் கலைஞர் பாடுபட்டும் கிடைக்காத ஒன்று தமிழுக்கு செம்மொழி என்ற அந்தஸ்து வேண்டும் என்ற அந்த வேண்டுகோள், கேட்பாரற்று கிடந்து இங்கே திராவிட முன்னேற்ற கழக ஆட்சியில் மத்தியில் திருமதி சோனியாகாந்தி அவர்களுடைய வழிகாட்டுதலோடு நடைபெறுகின்ற மன்மோகன்சிங் அவர்களுடைய ஆட்சியும் வந்தப் பிறகுதான் நாம் அவர்களிடம் வேண்டுகோள் விடுத்து இன்றைக்கு தமிழ் செம்மொழி என்று அறிவிக்கப்பட்டு அதற்குக்கூட மைசூரில்தான் குழு என்று இருந்ததை நான் சென்று அர்ஜுன் சிங் அவர்களிடம் வாதாடி அங்கே இருக்கின்ற மைசூர் குழுவை அகற்றி தமிழகத்திலே சென்னையிலேயே அந்தக் குழு இனிமேல் நடைபெறலாம் என்கின்ற அளவிற்கு செம்மொழிக் குழு தமிழகத்திற்கு இன்றைக்கு கிடைத்திருக்கின்றது.

இதையெல்லாம் சொல்வதற்குக் காரணம் மத்திய மாநில அரசுகள் பிணக்கு இல்லாமல் உறவுக்கு கை கொடுத்து, அதே நேரத்தில் உரிமைக்கு குரல் கொடுத்து இரண்டு அரசுகளும் பாடுபட்டால், பணியாற்றினால் பலன் உண்டு என்பதற்கு நான் எடுத்துக்காட்டிய இவைகளெல்லாம் சான்றுகளாகும்.

எனவே இந்த அருமையான தொடக்க விழாவில் நாம் மகிழத்தக்க அளவிற்கு நடைபெற்றுக் கொண்டிருக்கக்கூடிய இந்த தொடக்க விழாவில் நம்முடைய வேலு அவர்கள் சொன்னார்களே, நான் அவர்களுக்கு வைத்த கோரிக்கைகளை யெல்லாம் சொன்னார். நான் அவரிடத்திலே வைத்த கோரிக்கை கொஞ்சம் சுயநலம் கொண்டதுதான். திருக்குவளைக்கு இரயில் வேண்டும் என்று சொன்னேன். திருவாரூர் வரைக்கும் வந்த இரயில் திருக்குவளைக்கும் வேண்டும் என்ற சொன்னேன். அது சுயநலம் மாத்திரமல்ல, அதில் மிகப் பிரம்மாண்டமான ஒரு பொது நலமும் இருக்கின்றது. ஒரு பொது கொள்கையும் இருக்கின்றது இப்பொழுது அவரே இங்கே சொன்னார். நாகூர் வேளாங்கண்ணி இரண்டையும் இணைக்கின்ற ஒரு இரயில் பாதை என்று சொன்னார்.

இதை பார்க்க வேண்டும்; நாகூர் இஸ்லாமியர்களுடைய இடம், அவர்களுக்கு முக்கியமான இடம் வேளாங்கண்ணி கிறித்துவர்களுக்குரிய இடம். எட்டுக்குடி என்ற ஊர் இருக்கின்றது. அது இந்துக்களுக்குரிய,

மேவும் எட்டுக்குடி வாழும்
சிங்காரவேலனே வா! வா!

– என்று காவடி எடுத்துக் கொண்டு பாடுவார்களே அந்த எட்டுக்குடி அது இந்துக்களுக்கு உரியது. எனவே வேளாங்கண்ணி, நாகூர், எட்டுக்குடி இந்த மூன்றையும் இணைக்கின்ற இரயில்பாதை வருமேயானால் இந்தியாவினுடைய மத நல்லிணக்கத்திற்கேகூட அது ஒரு நல்ல அடையாளமாக இருக்கும் என்பதை நான் அவருக்கு தெவித்துக்கொள்ள கடமைப் பட்டிருக்கிறேன்.

எனவே அந்த மத நல்லிணக்க அடையாளமாக அந்தப் பாதையை விரைவிலே அமைப்பதற்கு அவர் முயற்சிக்க வேண்டும். அந்த முயற்சிக்கு என்னென்ன உதவிகள் செய்ய வேண்டுமோ, எப்படியெல்லாம் நாங்கள் துணை நிற்க வேண்டுமோ, அப்படியெல்லாம் துணை இருக்கத் தயாராக நாங்கள் இருக்கின்றோம் என்று கூறி நம்முடைய வேலு அவர்களுடைய முயற்சிகள் மேலும் மேலும் வெற்றிகரமாக அமைந்திட வேண்டுமென்று வாழ்த்துக்களைச் சொல்லி இந்த இனிய விழாவிலே திருவாரூர் மக்களாகிய உங்களையெல்லாம் சந்திக்கின்ற நல்ல வாய்ப்பை தந்தமைக்காக மகிழ்ச்சி தெரிவித்து இந்த அளவில் விடைபெறுகிறேன்.

★ ★ ★




# நாடு வாழ, நலிவு தீர துணை நிற்போர் அனைவருக்கும் நன்றி தெரிவிப்போம்

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் கலைஞர் **மு.கருணாநிதி** அவர்கள்

அருள்மிகு சத்திய சாயிபாபா அவர்களுக்கு தமிழகத்தில் ஒரு நன்றி தெரிவிக்கின்ற விழா நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. பாராட்டுகின்ற விழாவாகவும் சேர்ந்து நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. இந்த இரண்டையும் விட முக்கியமாக சிலருக்கு ஒரு எதிர்பார்ப்பு விழாவாகவும் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது.

இங்கே நம்முடைய வேணு சீனிவாசன் அவர்கள் வரவேற்புரையாற்றும்போது அன்புக்கும் பாசத்துக்கும் உரிய அருள்மிகு சத்திய சாயிபாபா அவர்கள் ஆற்றி வருகின்ற அரும்பணிகளைப்பற்றியெல்லாம் எடுத்துச் சொன்னார்கள். அவர்கள் ஆற்றுகின்ற பணி என்ன என்பதை சுருக்கமாகச் சொல்ல வேண்டுமானால், இங்கே ஆங்கிலத்திலே எழுதப்பட்டிருக்கின்ற பொன்மொழிகளிலேயே அது அடங்கியிருக்கின்றது. "Service to Man is Service to God" என்று இங்கே எழுதப்பட்டுள்ளது. அந்த பொன்மொழிக்கு மதிப்பளிக்கின்றவன் என்ற முறையில் நான் இந்த விழாவிலே கலந்து கொண்டிருக்கின்றேன்.

பலபேருக்கு ஆச்சரியமாக இருக்கக்கூடும், என்ன இந்த இரண்டு பேரும் ஒரு விழாவிலே கலந்து கொள்கிறார்கள் என்று! இது ஒன்றும் ஆச்சரியத்திற் குரியதல்ல. காவேரியும் கொள்ளிடமும் ஒன்றாகப் போகிறதே, அது எப்படி ஆச்சரியத்திற்குரிய தில்லையோ, அதற்கு காவேரி என்று பெயர் தனியாக இருக்கலாம், மற்றொன்றுக்கு கொள்ளிடம் என்ற பெயர் தனியாக இருக்கலாம். ஆனால் இரண்டிலும் ஓடுவது தண்ணீர்தான், அந்த இரண்டு தண்ணீரும் பாய்வது கழனிக்குத்தான், அந்தக் கழனியிலே விளைவது கதிர்தான், அந்தக் கதிரிலே கிடைப்பது நெல்தான், அந்த நெல்லுக்குள் இருப்பது அரிசிதான், அந்த அரிசிதான் எல்லோருக்குமே உணவு. அதைப்போலத்தான் காவேரியும், கொள்ளிடமும் போல இங்கே நாங்கள் இருவரும் அமர்ந்திருக்கிறோம் என்பதை நீங்கள் மறந்து விடக்கூடாது.

காவேரியைப் பற்றி நான் இங்கே சொல்லும்போது, நம்முடைய கர்நாடக முதலமைச்சர் மாண்புமிகு குமாரசாமி அவர்கள் பேசியது எனக்கு நினைவுக்கு வந்தது. தென்னகத்தைப் பொறுத்தவரையில் அதை ஒரு தீபகற்பம் என்று சொன்னாலும், தமிழகத்தைப் பொறுத்தவரை தண்ணீர்ப் பிரச்சினையில் ஒரு பக்கத்தில் ஆந்திரா, ஆந்திராவின் தயவு இல்லாவிட்டால் தமிழகத்திற்கு தண்ணீர் இல்லை. இன்னொரு பக்கம் கர்நாடகா, கர்நாடகாவின் தயவு இல்லாவிட்டால் தமிழகத்திற்கு தண்ணீர் இல்லை. இன்னொரு பக்கம் கேரளா, அவர்களின் தயவு இல்லாவிட்டால் தமிழகத்திற்கு தண்ணீர் இல்லை. இப்படி நான்கு பக்கமும் வேடர் சூழ்ந்திட நடுவில் சிக்கிய மான் போல், தமிழகத்தை சுற்றிலும் தண்ணீர் உள்ள மாநிலங்கள். ஆனால் தமிழகம் கண்ணீர் வடிக்கும் மாநிலமாக இன்றைக்கு இருக்கின்றது. இந்தக் கண்ணீரைத் துடைக்கத்தான் அரசு எடுக்கின்ற முயற்சிகளுக்கு, அருந்துணையாக அருள்மிகு சாயிபாபா அவர்களும் விளங்குகிறார்கள் என்பதை நான் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

பலபேருக்குச் சந்தேகம் பிரச்சாரம் கூடச் செய்வார்கள். இவன் கடவுளை ஏற்றுக்கொள்ளாதவன். இவன் சாயிபாபாவோடு அமர்ந்து இந்தக் கூட்டத்திலே பாராட்டுகிறான் என்று நாளைக்குப் பேசுவார்கள். கடவுளை ஏற்றுக் கொள்வதும், ஏற்றுக் கொள்ளாததும் பற்றி அந்தத் தத்துவத்தை சில பேர் உணராமல் பேசுகிறார்கள். கடவுளை நான் ஏற்றுக்கொள்கிறேனா என்பது பிரச்சினை அல்ல. கடவுள் என்னை ஏற்றுக் கொள்கின்ற அளவிற்கு நான் நடக்கிறேனா இல்லையா என்பதுதான் பிரச்சினை. நான் நடந்து கொண்டால், கடவுள் இருந்தாலும் இல்லாவிட்டாலும் நம்மை மக்கள் ஏற்றுக்கொள்வர். கடவுள் நம்மை ஏற்றுக்கொள்கின்ற அளவிற்கு நாம் நடந்து கொள்கிறோமா இல்லையா என்ற கேள்விக்கு நமது செயல்களே பதிலளிக்க வேண்டும்.

இங்கே வேணு சீனிவாசன் பேசும்போது சொன்னார். எத்தனை இலவச உதவிகள்? எத்தனை பேருக்கு சிகிச்சை? எத்தனை பேருக்கு அறுவை சிகிச்சைகள்? இவற்றையெல்லாம் இலவசமாகவே சாயிபாபா அவர்கள் செய்து உயிர் கொடுத்திருக்கிறார்; பல பேருக்கு; எவ்வளவு பேருக்கு சாயிபாபா கல்வி தானம் செய்திருக்கிறார் என்றெல்லாம் சொன்னார். அங்கேயும்

---

## புதிய தமிழ்ச் சொற்கள்

***24.11.2006 அன்று நடைபெற்ற 41ஆவது சொல்வங்கிக் கூட்டத்தில் உருவாக்கப்பட்ட புதிய தமிழ்ச்சொற்கள்***

| வ.எண். | ஆங்கிலம் | தமிழ் |
|---|---|---|
| 1. | Client | கிளைமை |
| 2. | Painstaking | கவனப்பாடு |
| 3. | Quarry | அகழ்வெளி |
| 4. | Quartz | வன்படிகம் |
| 5. | Casino | ஆடவை |
| 6. | Casserole | வெதுகலன் |
| 7. | Voting rate | வாக்களி நிலவரம் |
| 8. | Incitement | வெறியுந்துகை |
| 9. | Yoghurt | இன்தயிர் |
| 10. | Humbug | பசப்பு |
| 11. | Touch Free | கைபடா |
| 12. | Lassi | குடிதயிர் |

– தமிழ் வளர்ச்சித் துறை

இலவசம், இங்கேயும் இலவசம்தான். ஆனால் இங்கே சொல்கிறார்கள், இலவசம் அதிகமாகக் கொடுத்தால், திவாலாகி விடும் என்று. திவாலாக மாட்டோம், எடுக்க எடுக்க அன்பு குறையாது, அன்பு குறையவில்லை என்றால், ஆஸ்தியும் குறையாது. அந்த நம்பிக்கையோடு தான் நம்முடைய அருள்மிகு சாயிபாபா அவர்கள் தன்னுடைய பணியை ஆற்றிக் கொண்டிருக்கிறார். அதைத்தான் அவர் "ஆண்டவன் பணி" என்று கருதுகிறார். இதைத்தான் நானும் "ஆளுகிறவன் பணி" என்று கருதிக் கொண்டிருக்கிறேன்.

ஆண்டவன் பணிக்கும் ஆளுகிறவன் பணிக்கும் ஏறத்தாழ இருக்கின்ற ஒற்றுமையில் இல்லாதவர்களுக்கு இலவசமாக வழங்குவதில் தவறில்லை. இல்லாதவர்களுக்கு உதவி செய்வதில் எந்தத் தவறும் இல்லை. எந்தக் குற்றமும் இல்லை. அவர்களுக்குத் தெரியும், இன்று நேற்றல்ல, தம்பி துரைமுருகன் இங்கே எடுத்துக்காட்டியதைப்போல, தயாநிதிமாறன் சொன்னதைப்போல் நேற்று அவரோடு உரையாடிய போதும், நானும் அவரை அவருக்குத் தெரியாமல் பல ஆண்டு காலமாகக் கவனித்துக் கொண்டிருக்கிறேன், அவரும் என்னை, எனக்குத் தெரியாமல் கவனித்துக் கொண்டிருக்கிறார், பல ஆண்டுகால்மாக. அதனால்தான் அவர் கேட்டார், இந்தத் துண்டைத் பார்த்துக் கேட்டார், இந்த மஞ்சள் துண்டை நீங்களும் ஏழெட்டு ஆண்டுகளாக அணிந்திருக்கிறீர்கள், யார் யாரோ என்னென்னவோ சொல்கிறார்கள், அதைப் பற்றிக் கவலைப்படாமல் விடாப்பிடியாக போட்டிருக்கிறீர்கள் என்று சொன்னார்.

நான் அப்போது சொன்னேன், புத்தருடைய அங்கவஸ்திரமே மஞ்சள் துண்டுதான் என்று சொன்னேன், சிரித்துக் கொண்டார். பிறகு அவரிடம் சொன்னேன் என்னை நீங்கள்தொடர்ந்து பல ஆண்டுகளாகக் கவனித்துக் கொண்டிருக்கிறீர்கள் போலிருக்கிறதே என்றேன். ஆமாம் என்று சொன்னார். நான் ஒன்றை சொல்ல விரும்புகிறேன். நாட்டில் வேடதாரிகள் பலர் உண்டு. அந்த வேடதாரிகளை ஒரு பகுதியாகவும் இப்படிப்பட்ட நல்ல உள்ளம் படைத்த துறவுக் கோலம் பூண்டவர்களை ஒரு பகுதியாகவும் பிரித்துப் பார்க்க நான் தவறியதே இல்லை. மக்களுடைய கஷ்டங்களைப் போக்க வேண்டுமென்று கருதுகின்றவர்கள் யாராக இருந்தாலும் அவர்கள் துறவிகளை விட மேலானவர்கள். இன்னும் சொல்லப் போனால், ஆண்டவனுக்கே ஒப்பானவர்கள் அவர்கள் என்று சொன்னால் அதை யாரும் மறுக்க முடியாது.

அப்படிப்பட்ட நிலையிலே இன்றைக்கு சென்னை மாநகரின் தேவைகளை, கடந்த காலத்தில் ஏற்பட்ட நிலைமைகளை எண்ணிப் பார்த்து, தன்னால் என்ன செய்ய முடியுமோ அதைச் செய்ய, அவர்கள் முன் வந்து ஏற்கெனவே 1983ஆம் ஆண்டு என்னுடைய அருமை நண்பர் எம்.ஜி.ஆர். அவர்களும், என்னுடைய அருமை நண்பர் என்.டி.ஆர். அவர்களும் இந்திராகாந்தி அம்மையார் அவர்கள் அடிக்கல் நாட்ட, தொடங்கிய தெலுங்கு கங்கை திட்டம், இடையிலே கிடப்பிலே போடப்பட்டு 1996ஆம் ஆண்டு ஓரளவு நிறைவேறி,



பிறகு சிக்கல்களுக்கு, பிரச்சினைகளுக்கு ஆட்பட்டு, கடந்த ஐந்தாண்டுகாலமாக சரிவர இயங்கவில்லை. அதனை சரிவர இயங்க வைத்து, அந்தக் கட்டுமானங்களையெல்லாம் செம்மைப்படுத்தி, மேம்படுத்தி மேலும் சென்னைக்கு தண்ணீர் தாராளமாகக் கிடைக்க உதவிகளைச் செய்வேன் என்று அவர்கள் வாக்களித்திருக்கிறார்கள். அந்த வாக்கை எப்படி வகைப்படுத்துவது, நிறை வேற்றுவது என்பதைப் பற்றி யோசித்து அவர்களிடத்திலே விவாதித்து, நல்ல முடிவை அவர்கள் விரைவிலே அறிவிக்கலாம்.

துரைமுருகனும், தயாநிதிமாறனும் பேசும் போது கூவம் பற்றி சொன்னார்கள். அது உங்களுடைய கனவல்லவா என்றார்கள். கனவுதான், ஆனால் அந்தக் கனவு நிறைவேறவில்லை. அது நிறைவேறுவதற்கு உங்களுடைய பங்கும் இருக்கட்டும் என்று சொன்னேன். அதற்கு செலவு துரைமுருகன் சொன்ன ஆயிரம் கோடி ரூபாயை அவரிடம் நான் கேட்கவில்லை. அவர் கொடுத்தால் பெற்றுக்கொள்ள ஆட்சேபணை இல்லை. ஆனால் ஆயிரம் கோடி ரூபாய் ஆகாது குறைவாகத்தான் ஆகும். அதிலே ஒரு பங்கை அவர்கள் ஏற்றுக் கொண்டு, கூவம் நதி எப்படி உலகத்திலே உள்ள பல்வேறு நாடுகளுடைய தலைநகரங்களில் எல்லாம், அந்தத் தலைநகரத்திற்குள் ஓடுகின்ற ஆறு அந்த நகரங்களையே அழகுபடுத்துகிறதோ, அதைப்போல சென்னையை அழகுபடுத்துகின்ற ஆறாக கூவம் ஆக வேண்டுமென்ற கருத்தை, ஆசையை அவரிடம் கூறியிருக்கிறேன்.

துறவிகளுக்கு நேராக ஆசைபடக்கூடாது. இந்த ஆசை சுயநல ஆசை அல்ல. மக்களுக்காக ஏற்படுகின்ற ஆசை. "ஆகாரத்திற்காக அழுக்கைச் சாப்பிட்டு, தடாகத்து நீரைச் சுத்தப்படுத்துகிறதே மீன்" என்ற உரையாடலை எழுதியவன் அல்லவா நான், எனவே தான் தடாகம் சுத்தமாக வேண்டும். சென்னை எழில் நிறைந்த நகரமாக வேண்டும். தமிழகத்தின் தலைநகரம் என்கிற சிறப்பு அதற்கு இருக்க வேண்டும். அந்தச் சிறப்பை ஏற்படுத்தவும், தமிழ்நாட்டு மக்களுடைய ஏழ்மையைப் போக்கவும் இந்த அரசு எடுத்து கொள்கின்ற முயற்சிகளுக்கு பாபா போன்றவர்கள் தங்களுடைய பங்களிப்பைச் செய்யத் தயாராக இருக்கும்போது நான் இன்னமும் தைரியமாக பல சாதனைகளை மக்களுக்குச் செய்யத் தயாராக இருக்கிறேன் என்பதை எடுத்துக்கூறி, அந்த தைரியத்தை, துணிவை, அந்த நம்பிக்கையை ஏற்படுத்தும் விதமாக இந்த விழா அமைந்திருக்கிறது என்பதை எடுத்துக்கூறி, இந்த விழாவில் உங்கள் அனைவருக்கும் என் வாழ்த்துக்களைக்கூறி என்னுடைய நன்றியை, பாராட்டுகளை அவர்களுக்குத் தெரிவித்து விடைபெறுகிறேன்.

சென்னை மக்கள் அமைப்பின் சார்பில்
சத்திய சாயிபாபா அவர்களுக்கு
சென்னையில் நடைபெற்ற
நன்றி பாராட்டு விழாவில்
மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள்
தலைமையேற்று ஆற்றிய உரை
(21.01.2007)

# தமிழ்நாடு மகளிர் ஆணையத் தலைவர் மற்றும் உறுப்பினர்கள் நியமனம்

தமிழ்நாடு மகளிர் ஆணையத்தின் தலைவராக கோவை பாரதியார் பல்கலைக் கழகத்தின் முன்னாள் பதிவாளரும், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் உறுப்பினருமான முனைவர் திருமதி. கு.ம. இராமாத்தாள் அவர்களையும், உறுப்பினர்களாக சட்டப் பேரவை உறுப்பினர்கள் திருமதி பி. கமலாம்பாள், திருமதி கே. காயத்ரிதேவி திருமதி. குட்சியா காந்தி, இ.ஆ.ப., திருமதி. வி. வனிதா, இ.கா.ப. இராணிமேரி கல்லூரி முதல்வர் இகுயின் பின்டோ, வழக்கறிஞர் திருமதி. சி. சங்கமித்ரா, திருமதி. ஆர். ஆலிஸ் மனோகரி அலுவல் சார்பான உறுப்பினராக சமூக நலத்துறை செயலாளரையும், உறுப்பினர் – செயலாளராக சமூக நலத்துறை இயக்குநரையும் நியமனம் செய்து, மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் 16.1.2007 அன்று ஆணையிட்டுள்ளார்.

# மக்களுக்குப் பணியாற்றுவதுதான் மகேசன் பணி

இராமநாதபுரம்
கூட்டுக் குடிநீர்த் திட்டத்திற்கு
அடிக்கல் நாட்டி
மாண்புமிகு தமிழக முதலமைச்சர்
**கலைஞர் மு.கருணாநிதி** அவர்கள்
ஆற்றிய உரை
*(30.01.2007)*





**நே**ரம் அதிகமாகி விட்டது என்பதை நான் உணர்வதைப் போல நீங்களும் உணர்ந்திருக்கிறீர்கள் என்பதை நான் நன்றாக அறிவேன். கடந்த ஒரு மாத காலத்திற்கு மேலாக பல்வேறு நிகழ்ச்சிகளில் நாள்தோறும் கலந்துகொள்ளும் நிலை ஏற்பட்டு, கிட்டத்தட்ட அமைச்சர் தம்பி தங்கவேலனைப் போலவே என்னுடைய குரலும் கட்டியிருப்பதை நீங்கள் இங்கே காணுகிறீர்கள். இருந்தாலும் கூட, ஒரு சில கருத்துக்களை நீங்கள் கொண்டிருக்கின்ற மகிழ்ச்சியோடு பங்கிட்டுக் கொள்ள நான் விரும்புகிறேன்.

ஆனால், இந்த ஒரு மாத காலத்திலே நான் கலந்து கொண்ட நிகழ்ச்சிகள் அனைத்துக்கும் சிகரம் வைத்ததைப் போன்ற நிகழ்ச்சி இன்றைய நிகழ்ச்சி என்று சொன்னால் அது மிகையாகாது. தம்பி தங்கவேலனை, இங்குள்ள அரசு அதிகாரிகளை, இங்கே இராமநாதபுரம் கூட்டுக் குடிநீர் திட்ட அடிக்கல் நாட்டு விழா நிகழ்ச்சிக்கு ஏற்பாடு செய்யுங்கள் என்று சொன்னால், அவர்கள் ஒரு மாநில மாநாட்டிற்கே ஏற்பாடு செய்திருக்கிறார்கள் என்பதை இங்கே வந்த பிறகுதான் என்னால் புரிந்து கொள்ள முடிந்தது.

ஆனால் ஒன்று, தங்கவேலன் இங்கே குறிப்பிட்டதைப்போல, நான் வருகிற நேரத்தில் எல்லாம், பல்வேறு நிகழ்ச்சிகளுக்கான ஏற்பாடுகள் எல்லாம் பாழாகிவிடுகின்ற அளவிற்கு ஒவ்வொரு முறையும் மழை வந்து, கூட்டம் கலைந்து, பெற வேண்டிய கழக நிதியையும் நான் முழுமையாகப் பெற முடியாமல் பல நிதியளிப்பு விழாக்கள் நடந்ததையெல்லாம் நானும் மறக்கவில்லை, தம்பி தங்கவேலனும் மறந்திருக்க மாட்டார். ஆனால் இன்றைய தினம் அவரும் நானும் ஏகோபித்து மகிழத்தக்க அளவிற்கு, இங்கே குழுமியிருக்கின்ற பல்லாயிரக்கணக்கான மக்களாகிய நீங்களும் மகிழத்தக்க அளவிற்கு மழை கருணை காட்டியிருக்கின்றது.


நேற்றைக்கு முன்தினம் பத்திரிகைகளிலே பார்த்தபோது, இந்த வட்டாரத்திலே பெரும் மழை, இடி, மின்னல் என்றெல்லாம் செய்திகள் வந்தபோது, வழக்கமான நிலைதான் இப்போதும் போலும் என்று நான் கவலைப்பட்டுக் கொண்டிருந்தேன். ஆனால் அந்தக் கவலை நீங்குகின்ற அளவிற்கு, இந்தக் கடும் வெயிலிலே கூட பல்லாயிரக்கணக்கிலே நீங்கள் இங்கே குழுமியிருக்கிறீர்கள், மகிழ்ச்சி வெள்ளத்திலே ஆழ்ந்திருக்கிறீர்கள், நான் அந்த மகிழ்ச்சியிலே

உங்களோடு சேர்ந்து திளைக்கிறேன். ஏனென்றால் நம்முடைய சட்டமன்ற உறுப்பினர் ஹசப் அலி பேசும்போது குறிப்பிட்டார்கள். அதைத்தான் தம்பி தங்கவேலனும் அவருடைய உரையிலே சுட்டிக் காட்டினார்.

நான் முதன்முதலாக அறிஞர் அண்ணா அவர்களுடைய மறைவுக்குப் பிறகு பொறுப்பேற்று நீலகிரியிலே நடைபெற்ற மலர்க்கண்காட்சியைத் திறந்து வைக்கச் சென்றபோது, அந்த மலர்க் கூட்டத்தைப் பார்த்துவிட்டு, அந்த எழிலை நோக்கி விட்டு, அங்கிருந்த உற்சாகத்தைக் கண்டுவிட்டு, அப்போது நான் சொன்னேன். நான் நீலகிரியைப் பார்த்து, இந்தச் செழிப்பைப் பார்த்து, இந்த மலர் வனத்தைப் பார்த்து மகிழ்ச்சியடைகின்ற அதே நேரத்தில் வறண்டு கிடக்கின்ற இராமநாதபுரம் மாவட்டத்தையும் எண்ணிக் கவலைப் படுகிறேன் என்று சொன்னேன்.

அந்தக் கவலை தி.மு.கழக ஆட்சியில் படிப்படியாக நீங்கி வருகிறது. இந்த ஒரு நாளில் மாத்திரமல்ல, கடந்த காலத்திலே கூட பல கட்டங்களில், பல நேரங்களில் ஆட்சியின் ஆலோசனைகளின் பேரில், அதிகாரிகளின் கருத்துக்களின் அடிப்படையில் இந்த வட்டாரத்திலே உள்ள விவசாயப் பெருங்குடி மக்கள், மக்கள் பிரதிநிதிகள் அத்தனை பேருடைய கருத்துக்களையும் விவாதித்து, யோசித்து எடுத்த முடிவுகளின் படி தண்ணீர் தேவையைச் சரிசெய்ய என்னென்ன முயற்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டுமோ, அந்த முயற்சிகள் எல்லாம் மேற்கொள்ளப் பட்டிருக்கின்றன. அவர்கள் குறிப்பிட்ட ஏரிகள், குளங்கள், வாய்க்கால்கள் இவைகள் எல்லாம் தூர்வாரப்பட்டும் அங்கே தண்ணீர் தேங்குவதற்கு, போதுமான தண்ணீர் கிடைப்பதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டும், இவ்வளவும் படிப்படியாகச் செய்துங்கூட, இன்னும் பற்றாக்குறை இராமநாதபுரம் மாவட்டத்திலே இருப்பதை நான் உணருகின்றேன். அந்தப் பற்றாக்குறை இன்றைய ஒரு நிகழ்ச்சியால் நிச்சயமாக நிறைவேறிவிடும், அது முழுமை பெற்றுவிடும் என்று சொல்லமாட்டேன். தமிழகத்திலே இராமநாதபுரம் மாவட்டம் மாத்திரமல்ல, நான் நேற்றைக்கு முன்தினம் சட்டப்பேரவையிலே பேசும்போது கூட குறிப்பிட்டிருக்கிறேன். கிருஷ்ணகிரி, தருமபுரி மாவட்டங்களில் ஒகேனக்கல் திட்டம் என்ற ஒரு திட்டம் நிறைவேறினால்தான் அந்த மாவட்டங்களில் உள்ள குடிதண்ணீர் பற்றாக்குறை நீங்கும் என்பதை எடுத்துச் சொல்லி, அதற்கு ஜப்பான் நாட்டோடு இன்றைக்குத் தொடர்பு கொண்டு பேசிக் கொண்டிருக்கின்றோம். ஜப்பான் நாடு அதற்கான உதவியைச் செய்வதாகக் கூறியிருக்கிறது. அந்த உதவி கிடைக்காவிட்டால் நாமே அதற்கான பணத்தைத் திரட்டி, ஒகேனக்கல் திட்டத்தை நிறைவேற்றுவோம் என்று சொன்னேன் என்றால், தருமபுரி கிருஷ்ணகிரி போன்ற வறண்ட மாவட்டம்தான் இந்த இராமநாதபுரம் மாவட்டமும். எனவே இந்த ஒரு நாள் திட்டத்தில் எல்லாம் நீங்கிவிடும், எல்லோருக்கும் மகிழ்ச்சி வெள்ளம் பெருகிவிடும் என்று கருதி நான் என்னை ஏமாற்றிக் கொள்ளத் தயாராக இல்லை, உங்களையும் ஏமாற்ற விரும்பவில்லை.

நம்முடைய நண்பர் சட்டமன்ற உறுப்பினர் கே.ஆர். ராமசாமி அவர்கள் இங்கே எடுத்துக் காட்டியதைப்



போலவும் மற்றும் காங்கிரஸ் கட்சியின் சட்டமன்ற உறுப்பினர்கள் எடுத்துச் சொன்னதைப் போலவும் இன்னும் பல தேவைகள் இந்த மாவட்டத்திற்கு இருக்கின்றன. அந்தத் தேவைகளை எல்லாம் நிறைவு செய்ய உங்களுடைய அன்பும், ஆதரவும் என்றென்றும் தேவை என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்தத் திட்டத்திற்கு தி.மு.க மீண்டும் ஆட்சிப் பொறுப்புக்கு 2006ஆம் ஆண்டு மே திங்கள் 13ஆம் நாள் வந்தது என்றால், ஐந்தாவது மாதத்தில் வந்தோம் என்றால், அடுத்த இரண்டு மாதங்களுக்குப் பிறகு நிதிநிலை அறிக்கை வெளியிடப்பட்டது. அந்த நிதிநிலை அறிக்கையில் இந்த தண்ணீர் திட்டத்தைச் சேர்க்க வேண்டுமென்று தம்பி தங்கவேலன் அவர்கள் என்னை வலியுறுத்தினார். அவருடைய வற்புறுத்தலுக்குத் துணையாக இருந்து நம்முடைய உள்ளாட்சித்துறை அமைச்சர் தம்பி மு.க. ஸ்டாலின், இங்கே தம்பி துரைமுருகன் எடுத்துக் காட்டியதைப்போல இதை எப்படியும் நிறைவேற்றியே தீர வேண்டுமென்று அவரும் வலியுறுத்தி, அதற்கான தொகை 616 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது.

இந்த 616 கோடி ரூபாய் தொகையில் நிறைவேறவிருக்கின்ற இந்தத் திட்டம் திருச்சி மாவட்டத்திலிருந்து குழாய் மூலமாகத் தண்ணீர் கொண்டு வரப்படவிருக்கின்றது. அந்தக் குழாய் ஏறத்தாழ 840 கிலோ மீட்டர் நீளம் உடையது. அந்தக் குழாய் புதுக்கோட்டை மாவட்டத்தில் விராலிமலை, ஆலவயல், பொன்னமராவதி வழியாகவும், சிவகங்கை மாவட்டத்தில்

திருப்பத்தூர், காளையார்கோவில், இளையான்குடி வழியாகவும், இராமநாதபுரம் மாவட்டத்தில் பரமக்குடிக்கு எடுத்துவரப்பட்டு, பாரமக்குடியிலிருந்து இராமநாதபுரம், இராமேஸ்வரத்திற்கு ஒரு வழியாகவும், பரமக்குடியிலிருந்து முதுகுளத்தூர் வழியாக சாயல்குடிக்கு மற்றொரு வழியாகவும் தண்ணீர் கொண்டு செல்லப்பட்டு இராமநாதபுரத்தின் பெரும்பாலான பகுதிகளுக்குக் குடிநீர் வழங்கப்படவிருக்கின்றது.

இந்தத் திட்டம் முடிவடைந்தபின் நாள் ஒன்றுக்கு, ஊரகப் பகுதிகளில் நபர் ஒருவருக்கு 40 லிட்டர் வீதமும், பேரூராட்சிப் பகுதிகளில் ஒரு நபருக்கு 70 லிட்டர் வீதமும், நகராட்சிப் பகுதிகளில் ஒரு நபருக்கு 90 லிட்டர் வீதமும் குடிதண்ணீர் கிடைக்கும் என்பதை நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

இந்த இராமநாதபுரம், சிவகங்கை, புதுக்கோட்டை ஆகிய இந்த மூன்று மாவட்டங்களிலும், இந்தத் திட்டத்தினால் பயன்படக்கூடிய மக்கள் ஏறத்தாழ 20 இலட்சம் பேர். இதற்காக ஆகின்ற செலவு 616 கோடி ரூபாய் என்பதையும் சொன்னேன். இந்தத் திட்டம், மூன்றாண்டு காலத்திற்குள்ளே முடிவடையும் என்று இங்கே அதிகாரிகள் எல்லாம் எடுத்துச் சொன்னார்கள். நான் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன். மூன்றாண்டு என்று ஒரு குறியீடு வைத்தாலுங்கூட, இரண்டு ஆண்டுக் காலத்திலே இந்தத் திட்டத்தை முடித்தால் அதற்காக உங்களுக்காக ஒரு சிறப்புப் பரிசு நான் தரத் தயாராக இருக்கிறேன் என்பதையும் அதிகாரிகளுக்கும், இந்தத் துறையின் அமைச்சருக்கும் நான் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

இதுபோன்ற திட்டங்கள், மக்களுடைய திட்டங்கள், இங்கே பல திட்டங்களைப் பேசிய ஒவ்வொரு அமைச்சரும் எடுத்துச் சொன்னார்கள். தொகுப்புரையாற்றிய அம்மையார் கூட ஒவ்வொருவரையும் இங்கே பேசுவதற்கு அழைப்பதற்கு முன்பு என்னென்ன திட்டங்கள் இந்த எட்டு மாத காலத்தில் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியால் நிறைவேற்றப்பட்டிருக்கின்றன என்பதைத் தொகுத்துச் சொன்னார்கள். இவைகளையும் பார்த்து மகிழ்ச்சி அடைகிறோம். அதே நேரத்தில் இந்தத் திட்டத்தினால் என்ன பயன் என்று கேட்பவர்களையும் பார்த்து ஆச்சரியமடைகிறோம். கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். எந்த நல்ல காரியத்தைச் செய்தாலும், அந்த நல்ல காரியத்தைப் பாராட்டுவதற்கு பல பேரும், இடித்துரைப்பதற்கு சில பேரும் இருக்கத்தான் செய்வார்கள். அப்படி இடித்துரைப்பவர்கள், அதைக் கேலி செய்பவர்கள், கிண்டல் செய்பவர்கள், நீ கொடுத்த அரிசியை நாங்கள் மாட்டுக்குத்தான் போடுகிறோம் என்று சொல்பவர்கள், அதைச் சாப்பிட்டு மாடுகள் எல்லாம் செத்துப் போகின்றன என்று சொல்பவர்கள் இருக்கத்தான் செய்கிறார்கள். நான் அதைப்பற்றியெல்லாம் கவலைப்படவில்லை. நான் போகின்ற வழி நல்ல வழி என்று எனக்குத் தெரிந்தால், அந்த வழி மக்களுக்குப் பயன்படுகின்ற வழி என்று நான் உணர்ந்தால், அந்த மக்களுக்கு பணியாற்றுவதுதான் மகேசன் பணி என்ற அந்த உணர்வோடு தொடர்ந்து அந்தப் பணியை நடத்திக் கொண்டிருக்கின்றேன். யார் என்ன சொன்னாலும், தெருவிலே போகின்ற ஒருவனைப் பார்த்து யார் யாரோ சத்தம் போடுவார்கள், பைத்தியக்காரன் கூட சத்தம் போடுவான், சிறு குழந்தைகள் கூட கல்லெடுத்து எறிவார்கள், நல்லவர்களாக இருந்தால், பாவம் சிறு குழந்தை என்று மன்னித்து விட்டுச் சென்று விடலாம். பைத்தியக்காரர்களாக இருந்தால், பாவம் பைத்தியம், அவன் மீது குற்றம் இல்லை என்று சொல்லி விட்டுச் சென்று விடலாம். கயவர்களாக இருந்தால், திரும்பிப் பார்த்து விட்டு என்னைப்போல இன்னொருவன் மக்களுக்கு நன்மை செய்ய வந்தால் அவனையும் கல்லெடுத்து அடி, அவன் உனக்குத் திரும்ப பரிசு தருவான் என்று சொல்லி விட்டுப் போவார்கள்.


***"இந்த 616 கோடி ரூபாய் தொகையில் நிறைவேறவிருக்கின்ற இந்தத் திட்டம் திருச்சி மாவட்டத்திலிருந்து குழாய் மூலமாகத் தண்ணீர் கொண்டு வரப்படவிருக்கின்றது. அந்தக் குழாய் ஏறத்தாழ 840 கிலோ மீட்டர் நீளம் உடையது. அந்தக் குழாய் புதுக்கோட்டை மாவட்டத்தில் விராலிமலை, ஆலவயல், பொன்னமராவதி வழியாகவும், சிவகங்கை மாவட்டத்தில் திருப்பத்தூர், காளையார்கோவில், இளையான்குடி வழியாகவும், இராமநாதபுரம் மாவட்டத்தில் பரமக்குடிக்கு எடுத்து வரப்பட்டு, பாரமக்குடியிலிருந்து இராமநாதபுரம், இராமேஸ்வரத்திற்கு ஒரு வழியாகவும், பரமக்குடியிலிருந்து முதுகுளத்தூர் வழியாக சாயல்குடிக்கு மற்றொரு வழியாகவும் தண்ணீர் கொண்டு செல்லப்பட்டு இராமநாதபுரத்தின் பெரும்பாலான பகுதிகளுக்குக் குடிநீர் வழங்கப்படவிருக்கின்றது."***

கலைவாணர் என்.எஸ்.கிருஷ்ணன் சொல்லுவார். அவர் காரிலே பயணம் செய்த போது ஒரு பையன் ஒரு கல்லை எடுத்து காரை அடித்தான். காரிலிருந்து என்.எஸ்.கே. இறங்கினார். அந்தப் பையனை அருகே அழைத்தார். இந்தா ஐந்து ரூபாய் என்று அவனுக்குக் கொடுத்தார். பக்கத்திலே இருந்தவர், என்னய்யா, பைத்தியமாக இருக்கிறீர், அவன் கல் எடுத்து எறிகிறான், அவனுக்கு ஐந்து ரூபாய் கொடுக்கிறீர்களே என்று கேட்டார். அதற்கு என்.எஸ்.கே. அவர்கள், "இப்படிக் கொடுத்தால்தான், அவன் அடுத்து

வருகின்ற காரிலும் பத்து ரூபாய் கிடைக்கும் என்று நினைத்து கல்லெடுத்து அடிப்பான், அப்போது அந்தக் காரிலே வருகிறவன் அந்தச் சிறுவனைப் பார்த்துக் கொள்வான் என்று சொல்வார். அது மாதிரி கல்லெடுத்து அடிப்பவர்களுக்கு ஐந்து ரூபாய் கொடுத்தாலும், நாம் அவர்களைத் திரும்பி அடிக்காவிட்டாலும், இன்னொருவன் அடிக்கக்காத்துக் கொண்டிருப்பான். அதைப்போல நம்முடைய திட்டங்களை பரிகசிப்பவர்கள், நம்முடைய திட்டங்களைக் குறை கூறுபவர்கள், நம்முடைய அரசை வீழ்த்த வேண்டுமென்று கருதுகிறவர்கள் யாராக இருந்தாலும் அவர்களை கல்லெடுத்து அடிப்பவர்களைப் போல நினைத்து அவர்களுக்கு நீங்கள் ஐந்து ரூபாய் கொடுத்து விட்டு போங்கள், பின்னால் வருகிறவர்கள் பார்த்துக் கொள்வார்கள் என்று மாத்திரம் உங்களுக்குச் சொல்லி, அப்படி வருகிறவர்கள் வேறு யாருமல்ல, நீங்கள்தான் தமிழ்நாட்டுப் பொதுமக்கள்தான், தமிழ்நாட்டு மக்கள்தான் என்ற அந்த மன உறுதியோடு இந்த நல்ல விழாவிலே கலந்துகொண்டதற்காக பெருமகிழ்ச்சி அடைகிறேன்.

★ ★ ★

# செய்தித்துறை அலுவலகங்களுக்கு வாகனங்கள்



சென்னை இராஜாஜி மண்டபத்தில் 18.1.2007 அன்று மாண்புமிகு செய்தித்துறை அமைச்சர் திரு. பரிதி இளம்வழுதி அவர்கள், தஞ்சாவூர், திருவாரூர், விருதுநகர், பெரம்பலூர் மாவட்ட செய்தி மக்கள் தொடர்பு அலுவலகங்களுக்கு 'டெம்போ ஜூடோ' ஈப்புகளையும் தலைமைச் செயலகம், மதுரை, கோவை மாவட்ட செய்தித்துறை அலுவலங்களின் உபயோகத்திற்கு 'பஜாஜ்' மோட்டார் சைக்கிள்களையும் வழங்கினார்கள்.

இவ்விழாவில், தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தித்துறை செயலாளர் திரு. து. இராசேந்திரன், இ.ஆ.ப, செய்தி மக்கள் தொடர்புத்துறை இயக்குநர் திரு. சி.கோசலராமன், இ.ஆ.ப., இணை இயக்குநர் (மக்கள் தொடர்பு) திரு.கா. சம்சுதீன், துணை இயக்குநர் (செய்தி) திரு.த.இளங்கோவன் ஆகியோர் பங்கேற்றனர்.


மாவட்ட செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்கள் திரு. துரை ராஜ்குமார், (விருதுநகர்), திரு. க. குமாரவேலு, (தஞ்சாவூர்), திரு. பேரின்பநாயகம் (திருவாரூர்), திரு.டி.மருதபிள்ளை (பெரம்பலூர்) ஆகியோர் மாண்புமிகு அமைச்சர் அவர்களிடமிருந்து ஈப்புகளுக்குரிய பதிவுச் சான்றிதழ், காப்பீட்டுச் சான்றிதழ் ஆகியவைகளைப் பெற்றுக் கொண்டார்கள். ஓட்டுநர்கள், ஈப்புகளுக்குரிய சாவிகளைப் பெற்றுக் கொண்டார்கள்.

மதுரை மாவட்ட செய்தி மக்கள் தொடர்பு அலுவலர் திரு. எஸ்.எஸ். சரவணன் தலைமைச் செயலக செய்தி மக்கள் தொடர்பு அலுவலர் திரு. தி. அம்பலவாணன், கோயம்புத்தூர் மாவட்ட செய்தி மக்கள் தொடர்பு அலுவலர் திரு.கே. கண்ணதாசன் ஆகியோர் மோட்டார் சைக்கிள்களுக்குரிய சான்றிதழ்களைப் பெற்றுக்கொண்டனர். ஓட்டுநர்கள் வாகன சாவிகளைப் பெற்றுக் கொண்டார்கள்.

★ ★ ★

# புத்த நெறிகளைப் பரப்ப தமிழக அரசு நடவடிக்கை எடுக்கும்

## புத்தர் மகாபரிநிர்வாணம் அடைந்த 2550ஆம் ஆண்டு நிறைவு தொடக்கவிழாவில் மாண்புமிகு நிதியமைச்சர் பேராசிரியர் க. அன்பழகன் அவர்கள் உரை



புத்தர், மகாபரிநிர்வாணம் அடைந்து 2,550 ஆம் ஆண்டு நிறைவடைந்ததின் துவக்க விழா, தமிழக அரசின் சார்பில் கலைவாணர் அரங்கில் 1.2.2007 அன்று சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. விழாவிற்கு வருகை புரிந்தவர்களை வரவேற்று மாண்புமிகு செய்தித்துறை அமைச்சர் திரு. பரிதி இளம்வழுதி அவர்கள் பேசுகையில் ''புத்தபிரான் மகாபரிநிர்வாணம் அடைந்த 2550ஆம் ஆண்டு நிறைவு விழாவை சிறப்பாக நாடெங்கும் கொண்டாட மைய அரசு முடிவெடுத்துள்ளது. அதன் தொடர்ச்சியாக, தமிழக அரசு புத்தர் மகாபரிநிர்வாணம் அடைந்த 2550ஆம் ஆண்டின் நிறைவு விழாவினை சிறப்பாகக் கொண்டாடி வருகிறது. இந்த ஆண்டு முழுவதும் புத்தர் விழாக்களை கொண்டாட, நம்முடைய மக்கள்நல அரசு, மாண்புமிகு நிதியமைச்சர் இனமானப் பேராசிரியர் அவர்களின் தலைமையில், சான்றோர்கள் அடங்கிய குழு ஒன்றை அமைத்து, இன்றைக்கு தொடக்க விழா நடைபெற்று கொண்டிருக்கிறது. இந்திய அரசின் சுற்றுலாத்துறை இணை இயக்குநர் அவர்கள், தமிழகத்தில் மட்டும்தான் வெகுசிறப்பாக புத்தருக்கு விழா எடுக்கப்படுகிறது என்று தெரிவித்திருக்கிறார் என்பதையும் இங்கே சுட்டிக்காட்ட நான் கடமைப்பட்டிருக்கிறேன்.

சடங்கு சம்பிராதயங்களையும், மூடப்பழக்க வழக்கங்களையும் குழிதோண்டிப் புதைத்திட்ட பகுத்தறிவு சிந்தனையாளர் புத்தர், தான் வாழ்ந்த காலத்தையும் வென்று வாழ்ந்த மாமேதையாவார். மனித சமுதாயத்தை உய்விக்கவந்த உத்தமர். புத்தர் போதித்த தம்மத்தில் பிரார்த்தனைக்கோ, புனிதயாத்திரைக்கோ, சடங்குகளுக்கோ, பூசைக்கோ, தொழுகைக்கோ, உயிர் பலிகளுக்கோ இடமேயில்லை. ஒழுக்கமே தம்மத்தின் உயிர் நாடியாகும். புத்தநெறியில் சாதிக்கு இடமேயில்லை. ''புத்தர்


**புத்தர் உணர்த்திய பேருண்மைகள் :**

- அதிருப்தியும் துன்பமும் எங்கும் காணப்படுகிறது. அது அனைவராலும் அனுபவிக்கப்படுகிறது.
- அதிருப்திக்கும் துன்பத்திற்கும் காரணம் ஆசையும் பாசமும் ஆகும்.
- அதிருப்திக்கும் துன்பத்திற்கும் ஓர் முடிவு உண்டு.
- உன்னதமான எட்டு வழிகளில் பயணித்து இம்முடிவினை அடையலாம்.

**புத்தர் காட்டிய உன்னதமான எட்டு வழிகள்**

- சரியான புரிதல்
- சரியான எண்ணம்
- சரியான உரை
- சரியான செயல்
- சரியான வாழ்க்கை முறை
- சரியான முயற்சி
- சரியான மனநிலை
- சரியான உணர்வுநிலை

# புத்தரின் தத்துவம் உலகிற்கே ஒளிதரும் ஞானசூரியன்!




மாற்றம் பெற வேண்டியிருந்தது. புத்த சங்கத்தில் சாதி வேறுபாடு பார்ப்பதில்லை. ஆறுகள் கடலில் கலந்தவுடன் தம் பெயர்களை இழப்பது போல் சங்கத்தில் சேர்ப்பவர்கள் சாதியையும் பெயரையும் இழந்து விடுவதாகப் புத்தர் கூறினார்.

"ஓடும் உதிரத்தில் – வடிந்து
ஒழுகும் கண்ணீரில்
தேடிப் பார்த்தாலும் – சாதி
தெரிவதுண்டோ?"

என்று ஆசிய சோதியைக் கவிமணி வெளிப்படுத்துகிறார்.

யாரும் நாட்டை விட்டுப் போகச் சொல்லவில்லை. ஆனாலும், சித்தார்த்தர் அரண்மனையை விட்டு வெளியேறினார். மனைவியையும், மகனையும் பிரிந்து நடந்தார். உலக மக்களின் துன்பத்தைக் கண்டு கண்ணீர் விட்டார். துன்பத்திற்கான காரணத்தையும், போக்கும் வழி களையும் கண்டறிந்தார். தத்துவம் தான் குரு என்றார். நீங்களே தான் முயன்று விடுதலை தேடிக் கொள்ள வேண்டும் என்றார். சுகபோக வாழ்வு கூடாது என்று கூறுவது போலவே, கொடிய விரதங்களைக் கடை பிடிப்பதும் தேவையில்லை என்றார். நம்முடைய செயல்களிலிருந்து நாம் தப்பவே முடியாது என்றார். துன்பத்தை ஒழிக்கத் தூய வாழ்க்கை நடத்துங்கள் என்றார். புத்தர் எதையும் மறைவான தத்துவம் என்று கூறவில்லை. தாம் கூறும் கோட்பாடுகளும், விதிகளும் உலக முழுவதற்கும் சொந்தம் என்று கூறினார். மக்களை அறியாதவர் என்று எண்ணினாரேயன்றிக் கெட்டவர்கள் என்று ஒருபோதும் புத்தர் எண்ணவில்லை. தேவதத்தன் என்பவன் அவரை நீக்கிவிட்டு, தானே புத்த சங்கத்தின் தலைவனாகச் சதி செய்தான். ஆனால், புத்தர் அவனுக்கு முழு மன்னிப்பு அளித்தார்.



இவ்விழாவிற்கென மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் அனுப்பிய வாழ்த்துச் செய்தி.

இன்று (1.2.2007) முழுமதி நாள். "திங்களைப் போற்றுதும் திங்களைப் போற்றதும்" என்று நெஞ்சை அள்ளும் சிலப்பதிகாரம் முழுநிலவை வாழ்த்துகிறது. பூம்புகாரில் இந்திர விழா நடந்தது சித்திரை முழுமதி நாளில்தான். நிறைமதியாளரான புத்தரின் வாழ்க்கையில் முழுமதிக்குப் பெரும் பங்குண்டு. சித்தார்த்தராகப் பிறந்தது, ஞானம் பெற்றுப் புத்தரானது, மண்ணுலகிலிருந்து மறைந்தது ஆகிய புத்தர் வாழ்க்கையின் முக்கிய நிகழ்ச்சிகள் யாவும் முழுமதி நாளிலே நிகழ்ந்து உள்ளன. ஒரு முழுமதி நாளில் புத்தர் விழாவைத் தமிழ்நாடு அரசு கொண்டாடத் தொடங்கியிருக்கிறது. சித்தார்த்தர் சாதி, மத, மேடு பள்ளங்களைக் கடக்க புத்தராக

பெண்களும் புனித நிலை அடைய முடியும் என்றார். புத்தர், எல்லா மக்களும் எளிதில் கையாளக் கூடிய அறநெறியையே வகுத்தார். அன்பே இதயத்துக்கு விடுதலை அளிப்பது, அதுவே ஒளி என்றார். தாய் தம் உயிரையும் பொருட்படுத்தாமல் தன் குழந்தையைக் காப்பாற்றுவது போல் எல்லா உயிர்களிடத்தும் எல்லையற்ற அன்பு காட்டக் கற்பித்தார். புத்தர் எக்காலத்துக்கும் சொந்தமானவராக இருக்கிறார். ஆசிய சோதியாக மட்டுமின்றி உலகிற்கே ஒளி தரும் ஞானசூரியனாகப் புத்தரின் தத்துவம் திகழ்கிறது. அவரது வாழ்க்கையும், தத்துவமும் வையகம் பயனுற வாழ்வதற்கு வழி காட்டு கின்றன. புத்தரின் கொள்கைகளை வளரும் தலைமுறையும், வரும் தலைமுறையும் அறிந்திட அரசு, விழா எடுத்துக் கொண்டாடுகிறது. விழா சிறப்புற அமைந்திட வாழ்த்துகிறேன்.

⌘ ⌘ ⌘

பிறப்பின் அடிப்படையில் பேதம் கற்பிக்கும் வர்ணாஸ்ரம தர்மத்திற்கு எதிராக, 'பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்' என்று அய்யன் திருவள்ளுவர் கூறியதைப்போல, புத்தரின் கொள்கைதான் நமக்கு படைக்கலனாக விளங்குகிறது. புத்தர் சொன்ன சொல் ஒவ்வொன்றும் மனிதநேயத்தை வலியுறுத்தும் தன்மை வாய்ந்ததாகும்". என்று குறிப்பிட்டார்.

விழாவிற்குத் தலைமை தாங்கிய மாண்புமிகு நிதியமைச்சர் பேராசிரியர் க.அன்பழகன் அவர்கள் விழாப்பேருரையாற்றுகையில்,




“புத்தர் வாழ்ந்த காலத்தில், அவர் பேசிய காலத்தைவிட பேசாமல் இருந்த காலம் அதிகம். மிகவும் ஆழமாக சிந்தித்ததால் மக்களை நல்வழிப் படுத்தும் கருத்துக்கள் தோன்றின. பௌத்தம் ஒரு மதமல்ல. அது மக்களை நல் வழிப்படுத்தும் நெறி.


இந்தியாவில் வைதீக அமைப்பு பலமாக இருந்ததால் புத்தர் கொள்கைகள் பரவ முடிய வில்லை. நம்மை சிந்திக்கச் செய்து மனிதனாக மாற்றும் நோக்கம் புத்தரின் கொள்கையில் உள்ளது. புத்தரின் கொள்கைகளுடன் வள்ளுவரின் சிந்தனைகள் ஒத்துள்ளன. சமுதாயத்தில் ஒடுக்கப் பட்ட மக்களை உய்விக்க வந்ததே பௌத்தம். அது மதமாக இருந்திருந்தால் நிலைத்திருக்கும். ஆனால், பௌத்தம் நெறியாக இருந்ததால், அது மற்ற மதங்களுடன் போட்டியிடாமல் ஒதுங்கிக் கொண்டது. எல்லோருக்கும் நன்மை செய் என்பது போன்ற ஒழுக்க நெறிகளை பௌத்தம் போதித்தது. அதனால், பௌத்தத்தை வைதீகம் எதிர்த்தது. 2,500 ஆண்டுகளுக்கு முன்பு நாட்டில் திராவிடக் கலாச்சாரம் பரவியிருந்தது. பௌத்தம், சங்கம் என்ற அமைப்பை உருவாக்கியது. மதத்தை அல்ல. ஆனால், வைதீகம் அமைப்பு ரீதியாக வலுவாக இருந்தது. ஏதாவது ஒரு வகையில் வர்ணாசிரம நம்பிக்கையை மக்கள் ஆதரிக்கும் வரை, வைதீகம் எதையும் வளரவோ, வாழவோ விடாது. இதனால்தான் பௌத்தம் நம் நாட்டிலிருந்து வெளியேற்றப்பட்டது.


காந்தியடிகளின் அகிம்சை தத்துவத்தில் புத்தர் கொள்கையின் சாயல் உள்ளது. மனிதத்தன்மையை நிறைவாகப்பெற புத்தரின் கொள்கையை, சிந்தனைகளை நாம் மனதில் கொள்ளவேண்டும். புத்தரின் நெறியை தமிழகம் முழுவதும் பரப்புவதற்காக அரசியல் கட்சிகளின் கருத்துகளை அறிந்து பல நிகழ்ச்சிகளை நடத்திட தொடர்ந்து நடவடிக்கை தமிழக அரசால் எடுக்கப்படும்” என்று மாண்புமிகு நிதித்துறை அமைச்சர் பேராசிரியர் க. அன்பழகன் அவர்கள் பேசினார்.

விழாவில் மாண்புமிகு பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் திரு. தங்கம் தென்னரசு, மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் திருமதி. ஆ. தமிழரசி ஆகியோர் பங்கேற்றனர். மாண்புமிகு நீதியரசர் திரு. பி.ஆர். கோகுலகிருஷ்ணன் அவர்கள் தொடக்கவுரையாற்றும்போது, “புத்தர் போதனைகளை ஆராய்ச்சிப் பாடமாக வைக்க வேண்டும். புத்தருக்கு சென்னையில் சிலையும் பெரிய மண்டபமும் அமைக்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்” என்று கேட்டுக் கொண்டார்.

சட்டமன்ற உறுப்பினர் திரு.டி. சுதர்சனம் பேசும்போது, “புத்தரின் பொன்மொழிகளை குழந்தைகளுக்கும் எளிதாகப் புரியும் வகையில் 1 முதல் 5ஆம் வகுப்புகளில் பாடமாக வைக்க வேண்டும்” என்றார். சட்டமன்ற உறுப்பினர் திரு.கோ.க. மணி, “புத்தர் கொள்கைகளை பள்ளிக்கூடங்களில் தலையாய பாடமாகவும் ஆராய்ச்சிக் கல்வியாகவும் வைக்க வேண்டும்” என்று கூறினார்.

இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மூத்த தலைவர் திரு. இரா. நல்லகண்ணு, “அன்பைப் போதித்த புத்தரின் சீடர்களாக எண்ணிக் கொள்ளும் புத்த பிட்சுக்கள், இலங்கையில் போர் நிறுத்தத்தை விரும்பாமல் தமிழர்களுக்கு




புத்தர் மகாபரிநிர்வாணம் அடைந்து 2550ஆம் ஆண்டு நிறைவடைந்ததை, தமிழக அரசு இவ்வாண்டு முழுவதும் கொண்டாடத் தீர்மானித்துள்ளது. அதன் தொடர்ச்சியாக மாண்புமிகு செய்தித்துறை அமைச்சர் திரு.பரிதி இளம்வழுதி அவர்களும், தமிழ்வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தித்துறைச் செயலாளர் திரு. து.இராசேந்திரன் இ.ஆ.ப., அவர்களும், செய்தி மக்கள் தொடர்புத்துறை இயக்குநர், திரு. சி. கோசலராமன் இ.ஆ.ப., அவர்களும் வடஇந்தியாவில் புத்தகயா, நாலந்தா, இராஜ்கிர், சாரநாத், குஷி நகர் போன்ற புத்தரின் வாழ்க்கையில் தொடர்புடைய முக்கிய இடங்களை நேரில் பார்வையிட்டனர்.

எதிரான சண்டை தொடர வேண்டும் என்கிறார்கள்'' என வருத்தம் தெரிவித்தார்.

திராவிடர் கழகத் தலைவர் திரு. கி. வீரமணி பேசும்போது, "அறிவைத் தவிர வேறு எதையும் உரைகல்லாகக் கொள்ளாதே என்ற ஒரு மாபெரும் உண்மையை, அறிவார்ந்த கருத்தை எடுத்துரைத்த அன்றைய பகுத்தறிவாளர் புத்தர். இந்த மண்ணிலே 'புத்தம்' மீண்டும் புத்துயிர் பெற வேண்டும். 'புத்தம்' என்பது ஒரு மாமருந்து. அது ஒரு மதம் அல்ல. அது ஒரு நெறி. இன்றைக்கு மக்களுக்குத் தேவையான ஒன்று'' என்று குறிப்பிட்டார்.


விடுதலைச் சிறுத்தைகள் கட்சி பொதுச் செயலாளர் திரு. தொல் திருமாவளவன் பேசியபோது, "அம்பேத்கருக்கு மணிமண்டபம் அமைத்த இடத்துக்கு அருகே உள்ள நிலத்தை பவுத்தர்கள் கூடும் இடமாக அரசு ஏற்படுத்தித் தர வேண்டும்'' என்று கோரிக்கை வைத்தார்.

கவிக்கோ அப்துல்ரகுமான், "புத்தரின் கருத்துக்கள் கொண்ட 'ஜென்' தத்துவத்தின் அடிப்படைக் கூறுகள் தமிழகத்தில் இருந்தே சென்றிருக்கின்றன என்ற வரலாற்றுச் செய்தி நமக்கு பெருமை தரும் ஒன்றாகும்'' என்று குறிப்பிட்டார். பேராசிரியர் பெரியார்தாசன் பேசும்போது, "புத்தருக்கு சென்னையில் சிலையமைக்க வேண்டும்'' என்று கேட்டுக் கொண்டார். வழக்குரைஞர் அ.அருள்மொழி, "2500 ஆண்டுகளுக்கு முன் தோன்றிய பகுத்தறிவாளரான புத்தர் தனிமனித ஒழுக்கத்தை வலியுறுத்தி பேசினார்'' என்று குறிப்பிட்டார்.

இந்திய தொல்லியல்துறை கண்காணிப்பாளர் திருமதி. சத்யபாமா, பேசும்போது "இந்தியாவில் தமிழகத்தில்தான் புத்தர் சிலைகள் அதிகம் கிடைக்கின்றன. அவை சிதிலமடையாமல் இருப்பதற்காக மேலும் பல நடவடிக்கைகளை எடுத்து அவற்றை சிறப்பாகப் பராமரிப்பதற்காக தமிழக அரசு முயற்சி மேற்கொள்ள வேண்டும்'' என்று கேட்டுக்கொண்டார்.

நிறைவாக தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தித்துறை செயலாளர் திரு. து. இராசேந்திரன் இ.ஆ.ப., நன்றியுரையாற்றினார். நாட்டுப்பண் ஒலிக்க விழா இனிதே நிறைவடைந்தது.

நிகழ்ச்சித் தொகுப்பு : தி.பெ.சா.



கோ-ஆப்டெக்ஸ்
விக்ரமாதித்தன்
வேதாளத்திற்கு சொல்லும் பதில்
நான் கேட்கிற 3 கேள்விகளுக்கு சரியான பதில் இல்லன்னா உன் தலை வெடிச்சிடும்.
கோ-ஆப்டெக்ஸ் பட்டுப் புடவைகளுக்கும் மற்ற கடைகளில் உள்ள பட்டுப் புடவைகளுக்கும் வித்தியாசம் என்ன?
கோ-ஆப்டெக்ஸ்ல இருக்கிற பட்டு சேலைகள் எல்லாமே 3 பட்டு இழைகள் சேர்த்து முறுக்கிய பட்டு நூலினால் நெய்யப்படுகிறது. ஆனால் மற்ற இடங்களில் ஒரே நூலில் நெய்யறாங்க. ஆதலால் கோ-ஆப்டெக்ஸில் வாங்குகிற பட்டுப் புடவைகள் தரமானதாகவும், நல்லாவும் உழைக்கும்.
கோ-ஆப்டெக்ஸில் துணி வாங்குவதால் யாருக்கு இலாபம்?
கோ-ஆப்டெக்ஸ்ல துணி வாங்கினா அந்தப்பணம் நேரடியா 2 இலட்சம் நெசவாளர் குடும்பங்களுக்கு போய் சேரும்.
கோ-ஆப்டெக்ஸில் துணிகளின் தரத்திற்கு என்ன உத்திரவாதம்?
கோ-ஆப்டெக்ஸ் துணிகளின் தரமே அதற்கு உத்திரவாதம். பட்டுக்கு சில்க் மார்க், கைத்தறி துணிகளுக்கு கைத்தறி மார்க் சான்றிதழ்கள் கிடைக்கப்பெற்ற முதல் நிறுவனம் கோ-ஆப்டெக்ஸ் தான்.
பதில் இருக்கு
சிறப்புத் தள்ளுபடி 30%
தலைமுறைகளாய் தொடரும் பந்தம் - கோ-ஆப்டெக்ஸ்




தமிழரசு
R.N.I. No.2144670-Regn.No.TN/ARD/48/06-08
TN/PMG(CCR) WPP-518/06-08